# பயணம் தொடர்கின்றது

நாவண்ணன்



ஓவர்டன் வெளியீடு

Payanam Thodarkinrathu
By: Naavannan

Pages: 170

First Edition: 1988

Published By: 'Thondan'

Sales Rights:
Social Communications Centre
P. O. Box 41,
Batticaloa, Sri Lanka.

Printed By:
Sebastian Printers,
Batticaloa, Sri Lanka

Cover Design: [illegible]

Price: Rs. [illegible]

(ரூபா 25/-)

**Payanam Thodarkinrathu**
**By Naavannan**

Pages: 170

First Edition: **1988**

Published By: **'Thondan'**

Sales Right:

**Social Communications Centre,**
**P. O. Box - 44,**
**Batticaloa, Sri Lanka.**

Printed By:

**St. Sebastian Printers,**
**Batticaloa, Sri Lanka.**

Cover Design: **Bavan**

Price: **Rs. 25** 100/-

நாவண்ணனின்
பயணம் தொடர்கின்றது
நாவல்

பக்கம்: 170

முதற்பதிப்பு: 1988

வெளியீடு: தொண்டன்

விற்பனை உரிமை:

சமூகத் தொடர்பு நிலையம்,
அ. பெ. எண். 44,
மட்டக்களப்பு, இலங்கை.

அச்சகம்:

புனித. செபஸ்தியார் அச்சகம்,
மட்டக்களப்பு. இலங்கை.

அட்டை அமைப்பு: பவான்

விலை: ரூபா 25/-

# எம் உரை

இளைய தலைமுறை எழுத்தாளர்களிலே சிறுகதையாசிரியர் நிலையிலிருந்து நாவலாசிரியராக வளர்ச்சியுற்றவர்களில் ஒருவர் நாவண்ணன். ஆற்றல் மிக்க எழுத்தாளரான இவரது கதைகள், நாவல்கள், கட்டுரைகள் ஈழத்து இலக்கிய உலகில் இவருக்கு ஒரு சிறப்பான இடத்தைத் தேடிக் கொடுத்துள்ளன.

தொண்டன் சஞ்சிகையில் இருபது மாதங்களாகத் தொடர்ந்து வெளிவந்து வாசகர்களின் ஏகோபித்த பாராட்டுதல்களைப் பெற்ற அவரது நாவலை முழுநூலாக வெளியிடுவதில் நாம் பெருமையடைகிறோம்.

'பயணம் தொடர்கின்றது' காலத்துக்கேற்ற ஒரு நாவல். இலங்கையைக் களமாகவும், ஈழத்தமிழரின் பிரச்சினைகளின் ஆரம்ப கட்டத்தில் நடந்த அகிம்சைப் போராட்டத்தினைக் கருவாகவும் கொண்டு ஒரு குடும்பக்கதையைப் பிரதேச வாசனையுடைய நாவலாகப் படைத்திருக்கின்றார்.

இந்நாவலை நூலாக வெளியிட இசைவளித்த நாவண்ணனுக்கு எங்கள் இதயம் கனிந்த நன்றியைக் கூறிக்கொள்ளுகிறோம்.

இந் நூலுக்கு அறிமுகவுரை அளித்த பேராசிரியர் சண்முகதாஸ் அவர்களுக்கு எம் நன்றி.

இதனை நாம் விரும்பியவாறு செவ்விய பதிப்பாக வெளியிடுவதற்கு பெரும்பங்கு கொண்டு வேண்டுவனவெல்லாம் குறுகிய காலகட்டத்தில் செய்துதவிய மட்/ புனித செபஸ்தியார் அச்சகத்தாருக்கும் எம் நன்றி.

'தொண்டன்' வெளியீட்டுத் திட்டத்தின் கீழ் வெளிவரும் முதல் நாவல் இது என்பதால் எமது கன்னி முயற்சிக்கு நீங்கள் தரும் ஆதரவு, இது போன்ற வெளியீட்டுப் பணியில் மேலும் எம்மை ஊக்குவிக்கும் என்பதை மகிழ்வோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**பி. ஜோசப்,**
இயக்குனர்,
சமூகத் தொடர்பு நிலையம்,
மட்டக்களப்பு.



## சமர்ப்பணம்

மனித மாண்புப் பணியே மறைப்பணி,
இறைபணியே இறைவன் பணி எனக்கொண்டு
எந்த மக்களுக்காக வாழ்ந்தாரோ,
அதே மக்களால் படுகொலை செய்யப்பட்ட
**சந்திரா பெர்ணுண்டோ அடிகளாருக்கு**
எமது இனத்தின் ஒரு காலகட்டப் போராட்ட
வரலாருன இந்நூலைப் பாதகாணிக்கையாகச்
சமர்ப்பிக்கின்ருேம்.

# அணிந்துரை

தமிழருடைய உரிமைகளுக்காக நடைபெற்று வரும் போராட்டம் முப்பது ஆண்டுகளுக்கு மேலான காலகட்டத்தையுடையது. இவ்வாண்டு ஈழத்தின் இரண்டு நாவலாசிரியர்கள் இப்போராட்டத்தின் ஆரம்ப காலத்தினைப் பின்னோக்கிப் பார்ப்பது ஓர் ஆச்சரியமான விடயமல்ல. ஆக்க இலக்கியப் படைப்பாளிகள் சமூகத்தின் எண்ணங்களையும் உணர்வுகளையும் பிரதிபலிப்பவர்கள் என்ற வகையிலே இவ்விரு ஆசிரியர்களும், இன்று மக்கள் தமிழர் உரிமைப் போராட்ட வரலாற்றுக் கட்டங்களை எண்ணிப்பார்க்கும் மனநிலையினையே பிரதிபலிக்கிறார்கள் எனக்கூறலாம். ஒருவர் செங்கை ஆழியான்; அவர் எழுதி இவ்வாண்டு யூன் மாதம் வெளிவந்த நாவல் நீம்தரிகிட திந்தாம். மற்றவர் நாவண்ணன்; அவர் எழுதி வெளிவரும் நாவல் **பயணம் தொடர்கின்றது.** இவ்விரு நாவலாசிரியர்களும் ஒரே மாதிரியாகத் தம் நாவல்களைத் தொடங்குவது அவர்களுடைய சிந்தனை ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டு:

> "1956 ஜுன் நான்காம் நாள் கொழும்பு செல்லும் பிரயாணிகளை ஏற்றிக் கொண்டு காலைப் புகையிரதம் கல்லோயாவை நோக்கி விரைந்து கொண்டிருந்தது. திருகோணமலையிலிருந்து காலையில் தினமும் தான் அந்தப் புகைவண்டி செல்கின்றது."

என்று நாவண்ணனின் **பயணம் தொடர்கின்றது** நாவல் தொடங்குகின்றது.

> "1956 மே, 1 அதிகாலை 5 மணி, கொழும்புக் கோட்டைப் புகையிரத நிலையத்திற்குள், தனது நீண்ட பயணத்தை முடித்துக்கொள்ளும் ஆவலுடன், யாழ்ப்பாணம் மெயில் றெயின் நுழைந்தது."

என்று செங்கை ஆழியானின் நீம்தரிகிட திந்தோம் தொடங்குகின்றது. இருநாவலாசிரியர்களுமே 1956ம் ஆண்டு

தொடங்கிய களத்தை நோக்கியே செல்கின்றனர். ஒருவர் கிழக்கிலிருந்து செல்கின்ருர். மற்றவர் வடக்கிலிருந்து செல்கின்ருர்.

1956ஆம் ஆண்டு நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டம், 1958ல் நடைபெற்ற இனக்கலவரம் ஆகிய வைற்றின் நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு அவற்றின் அரசியற் செய்திகளை இடையிடையே செருகி, அழகுமணி என்னும் போராளியினை முக்கிய பாத்திரமாகக் கொண்டு நாவல் கதையினை நடத்திச் செல்கிருர் ஆசிரியர். இந்த நாவல் மூலமாகச் சொல்ல வந்த செய்தியினை ஆசிரியர் அழகுமணி என்னும் பாத்திரம் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் பங்குபற்றிக் காலிமுகத்திடலில் அடிவாங்குவது, இனக்கலவரத்தில் அவனுக்கு விருப்பமான சந்திராவின் கணவன் கொல்லப்படுவது, யாழ்ப்பாணம் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் அடிவாங்கி ஆசுப்பத்திரியில் கிடப்பது போன்ற பல நிகழ்வுகளை வரலாற்று அடிப்படையில் படைத்து உணர்த்திவிடுகிருர். நாவலின் இறுதியிலே,

> "அப்பாவுக்கு அடிச்சவங்களுக்கு நான் பெரியவனய் வந்த பிறகு அடிப்பன்" என்ருன் மதி. அன்று தாய் வயிற்றுக் குழந்தைகளாய் மதி போன்று சிறுவர்களாய் இருந்த சந்ததி...... கால ஓட்டத்தில் தமது மூத்தவர்கள் தொடர்ந்த அஹிம்சைப் பயணத்தைத் தொடர மாட்டார்கள் என்பதற்கு குழந்தை மதியின் அந்த வசனங்கள் கட்டியம் கூறின.... அன்று மூத்தவர்கள் தொடர்ந்து வந்த பயணத்தின் தொடர்ச்சி... இன்றும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது...
>
> கால்நடை, கட்டை வண்டி, மோட்டார்வண்டி, புகையிரதம், கப்பல், விமானம், ரொக்கட் என்று மனிதனின் பயணங்கள் பரிணும வளர்ச்சியில் மாறண்டு தொடர்ந்து கொண்டிருப்பது போன்று இந்த இனத்தின் பயணமும் தொடர்கின்றது.''

என்று நேரடியாகவும் தன் செய்தியினை நாவலாசிரியர் சொல்லிவைத்துவிடுகின்ருர்.

நாவண்ணன் இன்றைய காலகட்டத்தின் பரிணும வளர்ச்சியினை நன்கு உணர்ந்தவராகக் காணப்படுகின்றார். அதனைப் பகைப்புலமாகக் கொண்டு இந்நாவலைப் படைத்துள்ளார். வரலாற்றுப் பயணத்தின் தொடர்ச்சிக்கேற்ற படி கதை வளர்ச்சியும் அவர் நடையும் அமைகின்றன. பகைப்புல வளர்ச்சிக்கேற்ப முக்கியபாத்திரங்களாகிய அழகுமணி, சந்திரா ஆகிய பாத்திரங்களின் குணவளர்ச்சிகளும் அமைந்துவருவதாக நாவலாசிரியர் சித்தரிக்கின்றார்.

''ஈழத்துத் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினையான இனப்பிரச்சினை - சிங்கள பௌத்த பெரும் தேசியவாதத்தால் தமிழ் மக்களின் அரசியல், குடியுரிமை, மொழி, பிரதேசம்' ஆகியவற்றுக்கு நிகழ்ந்து வரும் பாதிப்புக்கள் தொடர்பான பிரச்சனைகள் ஈழத்துத் தமிழ் நாவலுக்குப் பொருளாகவில்லை.'' என்று நா சுப்பிரமணியம் 1978ல் தனது ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கிய நூலிலே குறிப்பிட்டுள்ளார். இப்பொழுது அந்நிலை மாறிவிட்டது. எல்லா ஆக்க இலக்கியப் படைப்பாளிகளுமே தமிழர் பிரச்சினைகளை ஏதோவகையில் தம் படைப்புகளிலே சித்தரிக்க முனைகின்றனர். நாவண்ணனின் 'பயணம் தொடர்கின்றது' அம்முயற்சியின் தொடர்ச்சி. முப்பதாண்டுகள் முன்னர் நடைபெற்ற நிகழ்வுகளை அறியாதவர்களுக்கு இது ஒரு செய்தி இலக்கியமாகவும் அமையலாம்.

**பேராசிரியர் அ. சண்முகதாஸ்**

தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி.
21 - 11 - 1988.

# கதையின் கதை

எழுத்துத் துறையில் ஏதாவது செய்ய வேண்டும் என்ற ஆவல் எனக்கு ஏற்பட்டது 1976ல் தான். அந்நாட்களில் தமிழ்த் தேசிய இனத்தின் வார ஏடான சுதந்திரனில் யான் பணியாற்றிக் கொண்டிருந்தேன்.

1958ம் ஆண்டின் இனக்கலவரம் பற்றி யான் எழுதிய 'தமிழன் சிந்திய இரத்தம்' எனும் நூல் சுதந்திரன் வெளியீடாக வெளிவந்ததும் அந்நாட்களில் தான். அந்நூலை எழுதிமுடிப்பதற்காகச் சுதந்திரனது பழைய கோப்புக்களைப் புரட்டியபோது தான் இப்படி ஓர் எண்ணம் எனக்குள் உதித்தது.

இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தினைப் பின்னணியாகக் கொண்டு எத்தனையோ நாவல்கள் படைக்கப்பட்டுவிட்டன. இலங்கைத் தமிழர்தம் போராட்ட வரலாற்றினைப் பின்னணியாகக் கொண்டு நாமும் ஒரு நாவலை எழுதினால் என்ன?

இந்த வினவுக்குக் கிடைத்த விடை தான் 'பயணம் தொடர்கின்றது'. சுதந்திரன் வெளியீடாக இந்நாவலை வெளியிட வேண்டும் என்று முயற்சித்தேன். 1977ம் ஆண்டின் இனக்கலவரம் எம்மை எல்லாம் அகதிகளாக்கி சுதந்திரன் அலுவலகம், அச்சகத்தோடு வடக்கிற்கு அனுப்பி வைத்தது. பின்னர் அதற்கான வாய்ப்பே இல்லாது போயிற்று.

நாவலின் கையெழுத்துப் பிரதியை எனது நண்பர்கள் எனது வளர்ச்சியில் ஆர்வமுள்ள பெரியவர்களிடம் படிக்கக் கொடுத்தேன். அனைவரிடமிருந்தும் ஏகமனதான பாராட்டுக் கிடைத்தது. அவர்களில் குறிப்பிட்டுக் கூறக் கூடியவர் சிரித்திரன் ஆசிரியர் திரு. சிவஞானசுந்தரம் அவர்களும் அவரது துணைவியாரும். 'இதனை நூலாக்குவதில் தயங்க வேண்டாம்' என்ற துணிவையும் எனக்கு ஊட்டினர்.

இனப்பிரச்சினை பற்றிய நூல்களை வெளியிடுவதில் அந்நாட்களில் வடக்கில் ஆர்வமாக நின்ற வெளியீட்டாளர்

ஒருவரிடம் என்னை நானே அறிமுகம் செய்து, நாவலின் பிரதியை அவரிடம் கொடுத்தேன். 'ஈரமான தாயின் வெளியிடுவது பற்றித் தீர்மானிக்கலாம்' என்று கூறிய அவர் நூலின் பிரதியைப் பெற்றுக்கொண்டார். சிரித்திரன் அவர்களுக்கே பிடித்துக் கொண்ட இக்கதை இவர்களுக்குப் பிடிக்காமலா போகும்? என்று எனக்கு ஒரு நம்பிக்கை. இரண்டு வாரம் கழித்து மீண்டும் அவரைச் சந்திக்கச் சென்றபோது 'நான் சிலரிடம் வாசிக்கக் கொடுத்தேன். அவர்கள் தரமில்லை என்று சொன்னார்கள். இதோ உமது கதை' என்று என்னிடம் திருப்பிக் கொடுக்கப்பட்டது.

எழுத்துலகில் 'ஓஹோ' என்று பெயர் இருந்திருக்க வேண்டும். பத்திரிகைகளிலே அடிக்கடி பெயர் வந்திருக்க வேண்டும். பெயரின் பின்னால் கல்வித் தகைமையைப் பறைசாற்றும் இரண்டு எழுத்தாவது இருக்க வேண்டும். அல்லது அரசாங்கத்தில் உயர் பதவியிலிருந்து நாலு பேருக்கு அறிமுகமாகி இருக்க வேண்டும். இந்தத் தகைமை எதுவும் இல்லாத எனது கதையை அவர்கள் வெளியிட்டு நட்டமடையாமல் தவிர்த்துக் கொள்வது நியாயமானது தானே.

1984ன் பிற்பகுதியில் மட்டக்களப்புக்குச் சென்றிருந்த போது 'தொண்டன்' மாத இதழின் இணை ஆசிரியரான எனது நண்பர் மலர்வேந்தனோடு தற்செயலாகஎன்னிடமுள்ள நாவல் பற்றிப் பேச்சு வந்தது. அவர் கதையை முழுமையாகக் கூடக்கேட்கவில்லை."அதைத் தொண்டனுக்குஅனுப்பி வையுங்கள் தொடராக வெளியிடுவோம்" என்று கூறினார். எனது எழுத்தின் மட்டில் அவருக்கிருந்த நம்பிக்கையை அது காட்டியது. 'புதியஉலகம்' கத்தோலிக்க நிகழ்ச்சிக்காக என்னைக்கொண்டு பல வானொலி நாடகங்களை எழுதுவித்த அவர் எனது முதல் நாவலான இதனையும் வெளிவர ஊக்குவித்தார்.

ஏற்கனவே எழுதி முடிக்கப்பட்ட இந்நாவலை ஒவ்வொரு இதழிலும் தொடராக வெளியிடுவதற்கு ஏற்ற அளவில் இருபது அத்தியாயங்களாகப் பிரித்து எழுதி மாதாமாதம் அனுப்பிவைத்தேன். தொடர்ச்சியாக இருபது மாதங்கள் வெளிவந்த இந்நாவல் வாசகர்களின் வரவேற்பை பெற்றது.

பேராசிரியர் சண்முகதாஸ் அவர்கள் குறிப்பிட்டுள்ளது போன்று தமிழினத்தின் போராட்ட வரலாற்றின் ஆரம்ப கால கட்டத்தைச் சித்தரிக்கும் இவ்வாண்டின் இரண்டாவது நூல் என்பது உண்மையெனினும், செங்கையாழியான் அவர்களின் நீம்தரிகிட தித்தோம் நாவலுக்கு சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் 'பயணம் தொடர்கிறது. எழுதப்பட்டது என்பதும், 1985ம் ஆண்டு முதல் 1987ம் ஆண்டுவரை தொண்டன் இதழில் தொடர்ந்து இருபது மாதங்களாக வெளிவந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

'கிழக்கில் உள்ள இலக்கியவாதிகளும், படைப்பாளிகளும் வடக்கில் உள்ளவர்களால், பல்கலைக்கழகமட்டத்தில் கூட புறக்கணிக்கப்படுகிறுர்கள் என்ற குற்றச்சாட்டு கிழக்கில் பரவலாக உள்ளதை அறிவோம். இந்த நிலையில் வடக்கில் உள்ள வெளியீட்டுத் தொழில்காரரால் புறக்கணிக்கப்பட்ட எனது இந்த நாவலை, கிழக்கிலிருந்து வெளிவரும் 'தொண்டன்' தொடராக வெளியிட்டதுடன், தமது வெளியீட்டகத்தின் முதல் வெளியீடாகவும் நூலுருவில்தர முன்வந்துள்ளது. இது அவர்கள் தம் இலக்கியப் பணியின் பரந்த மனப்பான்மையை வெளிக்காட்டுகின்றது.

இந்நாவல் நூலுருவில் வெளிவர முதற்காரணமான, நண்பர் மலர்வேந்தன் அவர்களுக்கும், இதனைத் தம் வெளியீட்டகத்தின் முதல் வெளியீடாகத் தர முன்வந்த 'தொண்டன்' வெளியீட்டகத்தாருக்கும், இந்நூலுக்கு அணிந்துரை எழுதிய பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களுக்கும், இக்கதையானது தொண்டனில் தொடராக வெளிவந்த நாட்களில் பாராட்டுக் கடிதங்களை எழுதி ஊக்குவித்த தொண்டன் வாசகர்களுக்கும் என் நன்றியைச் சமர்ப்பிக்கின்றேன்.

இந்நூலுக்கு வாசகர்கள் கொடுக்கும் வரவேற்பு தொடர்ந்தும் என்போன்ற பல இளைய எழுத்தாளர்களின் ஆக்கங்கள் நூல்வடிவம் பெற வெளியீட்டகத்தாரை ஊக்குவிக்கும் என்பதனை மனதிற்கொண்டு வாசக அன்பர்கள் தமது ஆதரவினை முழுமையாக வழங்க வேண்டுமென வேண்டி நிற்கின்றேன்.

நன்றி.

—நாவண்ணன்—



# பயணம் தொடக்கின்றது

## அத்தியாயம் 1

"வீணையடி நீயெனக்கு
மேவும் விரல் நானுனக்கு"
— *பாரதி*

## 02 பயணம் தொடர்கின்றது

*1956 ஜுன் நான்காம் நாள்.*

கொழும்பு செல்லும் பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு காலைப் புகையிரதம் கல்லோயாவை நோக்கி விரைந்து கொண்டிருந்தது. திருகோணமலையிலிருந்து காலையில் தினமும் தான் அந்த புகைவண்டி செல்கின்றது. இதுவரையில் அவ்வண்டியில் பிரயாணம் செய்தவர்களுக்கும், அன்று அந்த வண்டியில் செல்பவர்கள் சிலருக்குமிடையில் ஒரு வித்தியாசம். வித்தியாசம் ஆட்களைப் பொறுத்ததல்ல. ஏனெனில் அன்று அந்த வண்டியில் செல்பவர்களில் பலர் அந்த வண்டியில் அதற்கு முன்னரும் பிரயாணம் செய்திருக்கின்றனர். ஆனல் அன்று பிரயாணம் செய்த சிலரின் உணர்வுகளும், நோக்கமும் இதற்குமுன்னர் இருந்ததைவிட இம்முறை மாறுபட்டிருந்தன.

அன்று அவர்கள் போராளிகளாகச் சென்றுகொண்டிருக்கின்றுர்கள். அவர்களில் இளைஞர்களும் இருந்தனர், முதியவர்களும் இருந்தனர். காந்தி அண்ணல் நடாத்திய அஹிம்சைப் போராட்டங்களைப்பற்றி அதுவரை காலமும் படித்தும் கேட்டும் வந்த அவர்கள், அந்தப் போராட்டங்களின் அனுபவங்களை நேரடியாக அனுபவிக்கப் போகின்ருேம் என்பதில் ஓர் உற்சாகம்.

'கண்ணுக்குக் கண்ணும், பல்லுக்குப் பல்லும்' என்ற பழைய யூதமதச் சட்டங்களுக்கு எதிராக கிறீஸ்து பெருமான் போதித்த ''நீதியின் நிமித்தம் துன்புறுத்தப்படுவோர், பேறுபெற்ருேர்'' என்ற வாக்கின் வாய்மையில்

நம்பிக்கை வைத்து ஆரம்பிக்கப்பட்ட தியாகப் போரில் தம்மையும் அர்ப்பணிக்க வென்றே போகின்றார்கள்.

அந்த வண்டியின் மூன்றாம்வகுப்புப்பெட்டி யொன்றில் பிரயாணம் செய்துகொண்டிருந்த சத்தியாக்கிரகப் போராளிகளிடையே பலவிதமான கருத்துப் பரிமாறல்கள். சத்தியாக் கிரகத்தின்போது என்னென்ன நடக்கலாம், அப்படி நடந்தால் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பன போன்ற ஆலோசனைகள். ஏன்! தமக்குத் தெரியாத அரசியல் விவகாரங்கள் வரலாறுகளைக் கூட பெரியவர்களிடமிருந்து இளைஞர்கள்கேட்டு தெளிவு பெற்றுக்கொண்டனர்.

அரசியல் அறிவில் முதிர்ந்த பெரியவர் ஒருவர் தனக்குத் தெரிந்த சில கருத்துக்களை உதிர்த்துக் கொண்டிருந்தார். ''தம்பியவை! பண்டாரநாயக்கா நல்ல மனுஷன். ஆனால் பதவியைப் பிடிக்க வேண்டும் என்று அவருக்கு இருந்த ஆசைதான் அவரைப் பழுதாக்கிற்று. இண்டைக்கு சிங்கள மசோதா என்று பேசிற மனிசன் 1926ல் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தால் வந்த காலத்தில் இலங்கைக்கு ஒற்றையாட்சியை விட மலை நாட்டுச் சிங்களவர்களுக்குப் புறம்பாகவும். கரைநாட்டுச் சிங்களவர்களுக்குப் புறம்பாகவும். வடக்குக்கிழக்குத் தமிழர்களுக்குப் புறம்பாகவுமான சமஷ்டி ஆட்சிமுறைதான் வேணுமெண்டு பேசியிருக்கிறார் அதுவும் யாழ்ப்பாணத்தில நடந்த ஒரு கூட்டத்தில்.

இந்த விஷயம் அங்கிருந்த இளைஞர்களுக்குப் புதிதாக இருக்கவே வியப்போடு கேட்டனர். அவர் தொடர்ந்தார் ''அண்டைக்கு கரைநாட்டுச் சிங்களவர் ஒருபுறமும், மலை நாட்டுச் சிங்களவர் ஒரு புறமும் சமஷ்டி ஆட்சிமுறை வேணுமெண்டு நிண்டபொழுது தீர்க்கதரிசனமில்லாமல் இலங்கைத் தேசியவாத உணர்வில் அதை எதிர்த்தவர்கள் எங்கட தமிழ்த் தலைவர்கள்தான். அண்டைக்கு மட்டும்

எங்கட தலைவர்மாருக்கு, சிங்கள மக்களுக்கு இருந்தது போல பிரதேசிய உணர்வு இருந்திருந்தால் வெள்ளைக் காரன் போகிறபோது இந்த நாட்டை சமஷ்டி ஆட்சி முறையிலேயே விட்டிட்டுப் போயிருப்பான். இண்டைக்கு நாங்கள் இப்படிப் போராட்டம் நடத்த வேண்டிய நிலை யும் இருந்திருக்காது ''ஏன் எங்கட தலைவர்மார் அப்படிச் செய்தினம்'' இது ஒரு இளைஞனின் கேள்வி.

''வெள்ளைக்காரன் ஆட்சிக் காலத்தில எங்கட தமிழ ருக்கு நல்ல மதிப்பிருந்தது. ஏன் 1915ல் கண்டியில நடந்த முஸ்லிம் சிங்களவர் பிரச்சினையில மரண தண்டனையை எதிர் பார்த்துக் கொண்டிருந்த சிங்களத் தலைவர்களை, பிரித்தானிய அரசியிடம் சென்று நேரடியாகப்பேசி விடு தலை பெற்றுக்கொடுத்தது யார்? சேர் பொன்னம்பலம் இராமநாதன் தானே. அப்பிடி செல்வாக்குப் பெற்றிருந்த தமிழர்கள் வெள்ளைக்காரன் என்றைக்குமே இலங்கையை விட்டு வெளியேறமாட்டான் என்று நினைச்சதால வந்த பிழை. அப்படித்தான் வெளியேறினாலும் இலங்கையில் இருக்கிற இரண்டு இனங்களும் ஒருவர் இல்லாமல் மற்ற வர் வாழவே முடியாது என்று திடமாக நம்பினதால வந்த வினை...''

முதியவர் தனக்குத் தெரிந்தவைகளை அடுக்கிக் கொண் டேபோனார். மற்றவர்களும் ஆவலோடு கேட்டுக் கொண் டே வந்தனர். இந்த உரையாடல்கள் எதிலும் கலந்து கொள்ளாதவனாக, புகைவண்டியின் ஜன்னல் ஓரமாக சாய்ந்து கொண்டிருந்தான் அந்த இளைஞன் அழகு மணி.

புகைவண்டியின் முன்நோக்கிய ஓட்டத்தின் காரணத் தால் பின்நோக்கி ஓடுவன போன்று தோன்றிய பாதை ஓரக் காட்சிகள் எதுவுமே அவன் கவனத்தைக் கவர்ந்த

தாகத் தெரியவில்லே. அவன் உடல் புகைவண்டியோடு போய்க்கொண்டிருந்தாலும் அவன் மனம் பின்னேக்கி ஓடிய மரங்களோடும், வீடுகளோடும், வீதிகளோடும் திருகோணமலையை நோக்கி ஓடிக்கொண்டிருந்தது. அங்கு அவனுடைய வீட்டைச் சுற்றிக்கொண்டிருந்தது.

அவனுடைய இருபத்திஐந்து வருடகால வாழ்க்கையிலே இதுவரையில் ஏற்பட்டிராத விரக்தியும் வேதனையும் இன்று அவன் இதயத்தில் குடிகொண்டிருந்தன. பகையுள்ள இடத்தில் இருந்துவரும் மலையான எதிர்ப்பையும் தாங்கும் உறுதிபடைத்த இதயத்துக்கு அன்புள்ள இடத்தில் இருந்து வரும் கடுகளவு எதிர்ப்பைக்கூட தாங்கும் வலிமை கிடையாதே. ஆனல் சந்திராவிடம் இருந்து அவனுக்குக் கிடைத்தது கடுகளவு எதிர்ப்பல்லவே! அதுவே மலையளவாக இருக்கும்போது அந்த இளம் கவிஞனுக்கு அதைத்தாங்கும் சக்தி ஏது?

''போங்க, தயவுசெய்து இந்த இடத்தை விட்டுப் போங்க, தயவுசெய்து என்னே அமைதியாக இருக்க விடுங்க என் தனிமையைக் குலேக்காதீங்க''

எத்தகைய கடுமையான வார்த்தைகள் இவை. இந்த வார்த்தைகளே சந்திராதான் சொன்னுள்!

''அழகு நீங்க என்றைக்குமே என்னேவிட்டுப் பிரியக் கூடாது. என் மூச்சும் பேச்சும் நீங்கதான். உங்கட மூச்சும் பேச்சும் நானுகத்தான் இருக்க வேணுமென்று விரும்பிறன். இது பேராசையாகக்கூட இருக்கலாம். ஆனல் உங்கட மனேவியாய் வரப்போகிறவள் என்ற உரிமையில நான் உங்களிடம் விடுக்கும் விண்ணப்பம்.''

இப்படிப்பேசிய சந்திராவா இரவு அவனுக்கு அந்த கொடுமையான வார்த்தைகளேக் கூறினுள். நான் அவளே

விட்டு அகன்ருல் அவளுக்கு நிம்மதி கிடைக்குமா? அந்த வார்த்தைகளில் உண்மை இருக்குமா?

அவனுல் எதையுமே தீர்மானிக்க முடியவில்லை. அவள் இல்லாத ஒரு வாழ்க்கையை அவனுல் கற்பனை செய்தும் பார்க்க முடியவில்லை.

அவளுக்கும் அவனுக்கும் ஏற்பட்ட உறவு இன்று நேற்று ஏற்பட்டதல்ல. அறியாப்பருவம் என்பார்களே அன்று ஏற் பட்ட நட்பு. அதாவது பதினைந்து வருடங்களுக்கு முன்னர் விளையாட்டுச் சிறுவனாய், சிறுமியாய் இருந்தபோது கள்ள மற்ற பிள்ளைகளாக இருந்தபோது மலர்ந்த நட்பு. இன்று காதலர்களாய், கணவன் மனைவியாய் தம்மை நிட்சயிக்கும் வளர்ந்துவிட்ட பிணைப்பாய் மலர்ந்து விட்டது. இத்தனைக் கும் பிறகு இப்படி ஒரு திருப்பமா?

அவர்கள் அன்புக் கண்ணுடியில் ஏற்பட்டுவிட்ட சாதா ரண கீறலாக அவனுல் கணிக்க முடியவில்லை. அது ஒரு வெடிப்பு. அந்த வெடிப்பைக் காரணமாக வைத்து அது தூள் தூளாகச் சிதறப் போகிறதா? அப்படி ஒரு நிலை வந் தால் அதனைத் தாங்கிக்கொள்ளும் மன வலிமை இல்லையே.

அவன் ஓர் ஆசிரியன், கவிஞன். அவள் அவனது காதலி. அவள் அவனை மட்டுமா காதலித்தாள்? அவனுடைய கவிதைகளைக் காதலித்தாள். அழகுமணியின் காதலி என் பதைவிட அழகு என்ற கவிஞனின் காதலி என்று சொல் லுவதில் பெருமைப்பட்டவள்.

அவனது வளர்ச்சிக்கு அவள் காட்டிய ஆர்வம்தான் எத்தனை...?

அவனது கவிதைகளை ஒன்று விடாமல் படிப்பாள் அதை விமர்சனம் செய்வாள். அவன் கவிதைகளைப் பிரதி பண்ணிக் கொடுப்பாள். சிலவேளையில் அவன் சொல்லச்

சொல்ல அவள் எழுதுவாள். அவனுக்குக்கூட அந்த எண்ணம் தோன்றியதில்லை. ஆனால் அவள்... இதுவரையில் பத்திரிகைகளில் வெளியான அவனுடைய கவிதைகளையெல்லாம் கத்தரித்து ஒட்டி ஒரு 'அல்பமே' தயாரித்து வைத்திருக்கிறாள்.

அப்படிப்பட்டவள் அவனை வெளியே போகச் சொல்லி விட்டாள். இன்றுகாலை அவன் புறப்பட்டபோதுகூட அவள் வேண்டுமென்றே கதவைத் தாழிட்டுக் கொண்டு இருந்தாள் 'போய் வாருங்கள்' என்று விடைகொடுக்கத்தானும் அவளுக்கு மனம் வரவில்லை. அவன் புறப்பட்டது ஒரு போராட்டத்துக்கு. அப்போராட்டத்தில் என்ன நடக்குமோ என்று கூட எவரும் எதிர்பார்க்க முடியாது. 'வாழ்நாளெல்லாம் என் நல்வாழ்விற்காக ஏங்கும் அவள் என்னை வாழ்த்தி வழியனுப்பத்தானும் மனமற்றவளாகி விட்டாளே' என எண்ணியபோது கண்கள் கலங்குவதுபோல் இருந்தது. கண்களை மூடிக்கொண்டான்.

இதயம் 'சந்திரா' என்று ஆதங்கத்தோடு அலறியது புகைவண்டியின் பயணம் தொடர்ந்து கொண்டிருந்தது.

# பயணம் தொடர்கின்றது

## அத்தியாயம் 2

"தூண்டிற் புழுவினைப்போல் வெளியே
சுடர் விளக்கினைப் போல்
நீண்ட பொழுதாக - எனது
நெஞ்சு துடிக்குதடி"

— பாரதி

காலையில் அழகுமணி புறப்பட்டுப் போகும்போது சந்திரா விழித்துத்தான் இருந்தாள். அன்று இரவு அவள் தூங்கியிருந்தால்தானே. அழகுமணிக்கும் அவளுக்கும் உறவு ஏற்பட்ட காலத்திலிருந்து அன்றுவரைக்கும் அவள் இப்படி நடந்து கொள்வது இதுதான் முதல் தடவை.

அழகுமணியின் அன்னை பவளத்திடம் அவன் விடை பெறுவது அவளுக்குத் தெளிவாகக் கேட்டது. அடுத்து அவன் தன்னிடம் விடைபெற வருவான் என்று நினைத்தாள். தன்னிடம் விடைபெற வரக்கூடாது, அப்படி அவன் வந்து விட்டால் மகிழ்வோடு வழியனுப்பும் மனம் அவளுக்கு இல்லை. நிச்சயமாக அவள் தடுப்பாள். நேற்று முழுவதும் இரவு நெடு நேரம்வரை அவனைத் தடுக்கும் முயற்சியில் தோல்வி கண்டவள். அனைத்தையும் மீறி இன்று காலை அவன் புறப்படும் போதும் அவனைத் தடுக்கவேண்டுமா? அது முறையுமல்ல. ஆனால் மனச்சாட்சிக்கு விரோதமாக சம்பிரதாயத்துக்காக போய் வாருங்கள் என்று பொய்யுரைக்கவும் அவள் விரும்பவில்லை.

தாயும் மகனும் பேசிக்கொள்வது அவள் காதில் விழுந்தது.

''அம்மா சந்திரா இன்னும் எழும்பேல்லையா?''

''இல்லைத் தம்பி. அது ராத்திரி நித்திரையும் கொண்டிருக்காது, அதுதான் இன்னும் எழும்பேல்லையாக்கும். அதுக்கு விருப்பமில்லாத காரியத்தைப் பிறகுமேன் அதோட கதைக்கிறாய். வெளிக்கிட்டுக் கொண்டிருக்கிற நேரத்தில்

அது ஏதும் தடுத்துச் சொல்லப்போய். பிறகு நீ கவலை யோட போறதைவிட பேசாமல் போ. நான் பிள்ளைக்குச் சொல்லுறன்.''

''சரி அப்ப நான் வாறன். சந்திராட்டை சொல் லுங்கோ.''

கட்டிலில் கிடந்தபடி இந்த உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த சந்திராவுக்கு அழுகை பொங்கிக்கொண்டு வந்தது. எழுந்து ஓடிச்சென்று அவன் குறுக்கேநின்று 'போகாதீங்கோ' என்று தடுக்க வேண்டும் போல தோன்றியது. ஆனால் அது அவளால் முடியாத காரியம். அதுமட்டுமல்ல, போகும்போது தடுப்பது முறையற்ற காரியம் என்பதை உணரும்போது குமுறி குமுறி அழுவதை விட அவளால் வேறு எதுவும் செய்ய முடியவில்லை.

அந்தக்கணத்தில் அவளுக்கு தான் எல்லாவற்றையும் இழந்துவிட்டது போன்ற வெறுமை உணர்வு தோன்றியது. பத்து வருடங்களின் முன் பன்னிரண்டு வயதேயுடைய வேலைக்காரச் சிறுமியாக அந்த வீட்டில் அடியெடுத்து வைத்தவள் தானே என்ற உணர்வு தோன்றியது.

'ஆம், நான் இந்த வீட்டுக்கு வேலைக்காரியாக வந்தவள் தானே. இப்பொழுது அவர்கள் இரங்கிக் கொடுக்கப் போகின்ற வீட்டுக்காரி என்ற வாழ்வை மனதில் வைத்துக் கொண்டு அவனை அதிகாரம் செய்ய அவளுக்கு என்ன தகைமையிருக்கிறது.

இதுவரையில் அவள் நினைத்துப் பார்த்திராத, இறந்த காலம் கனவுக்காட்சிகள் போன்று மூடிய அவளது கண் களுக்குள் நிழலாடியது.

பதினைந்து வருடங்களுக்கு முன்பு ஏழுவயதுச் சிறுமி யாக வளரும்வரை மலையகத்தில் அவள் வாழ்ந்த அந்த வாழ்க்கை!

பிறந்த வீட்டிலேயே அம்மா செத்துப்போக பிள்ளைக் காம்பராவில் வளர்ந்தவள்தானே. அப்பன் செல்லமுத்து இன்னுமொரு கலியாணம் செய்து கொண்டாச்சு. சித்தி கொடுமைக்காரியில்லா விட்டாலும் அவளுக்கென்று பிள்ளைகள் பிறந்தபோது இவள் படிப்பில் அலுப்பு. இவளது வயதுக்கு மீறிய பொறுப்புணர்ச்சிகளை எதிர்பார்ப்பதுமான செயல்கள் இவளைச் சற்று கஸ்டப்படுத்தத்தான் செய்தது.

தோட்டத்துப் பாடசாலைக்குப்போக அவளுக்கு விருப்பம்தான் ஆனால் ஸ்கூல்ல என்னத்தைச் சொல்லிக் குடுக்கிறுங்க. ரீச்சர் வூட்டு வேலய செஞ்சிக்கினு புள்ளங்களையும் பாத்துகினு வீட்டில நிக்கிறது தானே'' இப்படியான போதனைகள்.

மலையகப் பாடசாலைகளுக்கு எழுத்தறிவிக்க வந்த தெய்வங்கள் அவர்கள் படிப்பின்மீது காட்டிய அக்கறை அந்த மக்களுக்கு கல்வியின் மீது அப்படியான ஒரு அபிப்பிராயத்தை வளர்த்துவிட்டது. சந்திராவுக்கு, நமக்குப் படிப்பில்லையே என்ற கவலையைவிட பிள்ளைகளோடு கூடி விளையாடும் சந்தர்ப்பம் இல்லாமல் போகின்றதே என்ற ஏக்கம்தான்.

அப்படி இருக்கும் போது தான் அப்பொழுது இருந்த ரீச்சர் மாறிப்போக அழகரத்தினம் ஆசிரியர் அந்தப் பாடசாலைக்கு வந்தார். மலையக மக்களின் கல்வி வளர்ச்சியில் அக்கறைகாட்ட வேண்டும் என்ற ஆர்வம் கொண்டவராக வந்தார். அவர் பெற்ருேரை எல்லாம் வீடுவீடாகச் சென்று கண்டு அவர்களை ஒன்று சேர்த்து கல்வியின் முக்கியத்துவம் பற்றியெல்லாம் போதித்து பிள்ளைகளை ஒழுங்காக பாடசாலைக்கு அனுப்பிவைக்கச் செய்தார்.

அதன் பின்னர்தான் சந்திராவுக்கு ஒழுங்காகப் பாடசாலைக்குப் போகும் வழக்கம் ஏற்பட்டது. 'வளரும் பயிரை முளையிலே தெரியும்' என்பது போல சந்திராவிடம் இருந்த

ஆற்றலைக்கண்டு அவளது கல்வியில் கூடிய அக்கறை செலுத்தினுர் ஆசிரியர் அழகரெத்தினம்.

பாடசாலை விடுமுறை நாட்களில் அவர் தனது சொந்த ஊரான திருகோணமலைக்குப் போகமாட்டார். பதிலாக அவரது மனைவி பவளமும் பத்துவயதுச் சிறுவஞன மகன் அழகுமணியும் அங்கு வருவார்கள்.

தாயற்றபிள்ளை என்ற உணர்வும். சந்திராவின் அறிவும், அழகும் பவளத்தை வெகுவாகவும் கவர்ந்துகொண்டன. சந்திராவுக்கு அந்த அம்மாளை மட்டுமல்ல அவரது மகன் அழகுமணியை மிகவும் பிடித்துக்கொண்டது. மலையகத்தை சாராத பிறர் மலையகத்தில் அவர்களோடு பழகும் போது உறவினர்கள்போல் உறவாடும் பண்பு மலையகத் தமிழர்களுக்கே உரித்தானதன்றே.

அந்த ஆசிரியர் குடும்பத்திற்கே அன்று சிறுமியான சந்திராவின்மேல் ஏற்பட்ட பரிவும், பாசமும்தான் ஐந்து வருடங்களின் பின்னர் அவர் வேலையைவிட்டு திருகோணமலைக்கு மீண்டும்வந்தபொழுது அவளையும் தம்கூடவே அழைத்துவர வைத்தது. அன்று அவள் இந்த வீட்டின் வேலைக்காரியாகத்தான் நுழைந்தாள். ஆனுல் அவர்கள் தங்களுக்கு பெண்குழந்தை இல்லாக்குறையை இவளைக் கொண்டு நிவர்த்திசெய்து கொண்டார்கள். சொந்த மகளாகவே பேணிவளர்த்து படிப்பித்து விட்டார்கள். இன்று அவளை அந்த வீட்டின் மருமகளாக ஏற்றுக்கொள்ளவும் துணிந்துவிட்டார்கள்.

பழைய நினைவுகளில் தன்னை மறந்து இருந்தவளை பவளத்தின் வரவு நிகழ்காலத்திற்குக் கொண்டுவந்தது. திடுக்கிட்டவளாக நிமிர்ந்து பவளத்தைப் பார்த்தாள் சந்திரா.

நாவண்ணன்

''எழும்பி முகத்தை கழுவன் பிள்ள, விடிஞ்சு எவ்வளவு நேரமாயிற்று தம்பியும் போயிற்ருன்.''

பவளம் அழகுமணியைப் பற்றிச் சொன்னதும் அவள் கண்கள் கலங்கிக்கொண்டு வந்தன. ''அம்மா அவர் எனக்குச் சொல்லாமல் தானே போயிற்ருர்.''

சந்திரா பவளத்தை அம்மா என்றுதான் அழைப்பாள். அவள் அப்படி முறைசொல்லி அழைக்கும்போதெல்லாம் பவளம் மனம் குளிர்ந்து போவாள். அவளிடம் தாய்மை உணர்வு பொங்கிவரும்.

ஏக்கமான அந்தக் கேள்வி அவளிடமிருந்து பிறந்ததைக் கண்டு சற்றுநேரம் மௌனமாக அவள் முகத்தை ஊடுருவிய பவளம், ''அவன் வந்தவன், நான்தான் வேண்டாமென்று தடுத்தனுன். எனக்குத்தெரியும் உனக்கு மனநிலை சரியில்லையெண்டு. பிறகு நீ ஏதாவது அசட்டுப் பிசட்டென்று ஆத்திரத்தில் சொல்லப்போக அது அபசகுனமாய் போயிடும். அவன் வேற எதுக்கும் போறதெண்டாலும் பரவாயில்லை. அவன் போறதும் ஆபத்தான காரியம்''

இந்த விளக்கத்திற்கு எந்தப்பதிலும் கூருதவளாக சந்திரா கிணற்றடியை நோக்கி விரைந்தாள். பவளத்தின் பதில் அவளுக்கு ஒரு விதத்தில் எரிச்சலைக் கிளப்பி விட்டிருந்தது. 'நல்ல தாயும் நல்ல மகனும்' என்று மனதுக்குள் முணுமுணுத்துக் கொண்டாள்.

'போறது ஆபத்தான காரியமென்று தெரியுந்தானே பிறகு ஏன் போ என்று அனுப்பிவைக்க வேண்டும். சத்தியாக்கிரகத்தில் கட்டாயம் கலந்து கொள்ளுங்கோ என்று இவரையாரும் வெத்திலைபாக்கு வைத்தா அழைத்தார்கள். விரும்பியவர்கள் மட்டும் கலந்துகொள்ளலாம் என்று தானே அழைப்பு விட்டிருந்தார்கள். சரி, அவர் தான் போனுர். இவ, பெற்றவ என்று இருக்கிறவவுக்கு புத்தி

வேணும். இருக்கிறது ஒரே ஒரு பிள்ளை. போறதோ ஆபத்தான காரியம். உயிருக்குக்கூட மோசம் வரலாம். போகவேண்டாமென்று ஒரு வார்த்தை சொல்லியிருக்கக் கூடாதா? இவவுக்கு தான் ஏதோ புற நானூற்றுக்கால வீரத்தாய் என்ற நினைப்பு.' என்று மனதுக்குள் திட்டிக் கொண்டாள்.

தாயும் மகனும் ஒருபக்கம், அவள் மட்டும் தனித்து விட்டாள். அவர் பெரியவர் இருந்திருந்தால் ஏதாவது ஒருவிதமாக சமாளித்து இருக்கலாம். அவரும் மூன்று வருடங்களுக்கு முன்னர் போய்ச் சேர்ந்துவிட்டார். அவர் இருந்தால் போல இதுக்குத் தடை போட்டிருப்பாரா? இவருடைய அப்பன் தானே அவர் அவர் வளர்த்து விட்ட வளர்ப்புத்தானே இது., என்று இறந்துபோன ஆசிரியர் அழகரத்தினத்தையும் சபித்துக் கொண்டாள்.

இதுவரை காலமும் அந்தக் குடும்பத்தோடு ஏற்பட்டிருந்த பிணைப்புகள் எல்லாம் அறுபடுவதுபோல் இருந்தது. இதுவரை காலமும் அவனிடம் ஏற்பட்டிருந்த ஒருவித மயக்கம் தெளிவதுபோல் இருந்தது.

இந்தக் கவிஞர்கள் ஒரு பைத்தியக் காரர்கள். வெறியர்கள். அவர்களுக்குக் கற்பனையும், இலட்சியமும் தான் வாழ்வு. ஏன் பாரதிக்கு வாழ்க்கைப்பட்ட செல்லம்மாள் என்ன சுகத்தைக் கண்டாள். கவிஞர்கள் எல்லாம் வீரமாமுனிவன் போன்று துறவிகளாகிவிட்டால் பரவாயில்லை.

அவர்கள் தமது இலக்கியங்கள் மூலம் சிரஞ்சீவிகளாக வாழப் பிறந்தவர்களே ஒழிய, அவர்களை நம்பி குடும்பம் என்ற வட்டத்துள் வாழும் உயிர்களை வாழ வைக்கப் பிறந்தவர்களல்ல. கற்பனை, கனவு, கவிதை இலக்கியங்கள் மூலம் அவர்களை நம்பியிருக்கும் இதயங்களை நொறுக்கப் பிறந்தவர்கள். இப்படியாக அவளது சிந்தனைப் பயணம் திசைமாறித் தொடர்ந்து கொண்டிருந்தது.

● நாவண்ணன்



# பயணம் தொடர்கின்றது

## அத்தியாயம் 3

"தமிழுக்கு அமிழ்தென்று பேர் - அந்த
தமிழ் இன்பத் தமிழ் எந்தன் உயிருக்கு நேர்"

— *பாரதிதாசன்*

கல்லோயாச் சந்தியில் நண்பன் ஒருவனைச் சந்தித்த அழகு நண்பனின் காரில் அன்று மாலையே கொழும்பை வந்தடைந்துவிட்டான். அதன் பயன் மறுநாள் சத்தியாக் கிரகத்தில் முழுமையாக அவனல் பங்கு கொள்ளமுடிந் தது. ஏனெனில் திருமலையில் இருந்து வந்தவர்கள் மறு நாள் காலை தான் வந்துசேர்ந்தனர் முன் அறிவித்திருந்த தன்படி அனைவரும் பம்பலப்பிட்டியிலுள்ள ஸ்ரீ கதிரேசன் மண்டபத்தை பேருந்துகள் மூலம் வந்தடைந்தனர்.

யாழ்ப்பாணம், மன்னர், வவுனியா ஆகிய மாவட்டங் களிலிருந்து வந்த போராளிகள் அன்று காலையே அங்கு வந்து சேர்ந்திருந்தனர். தலைவர்களும் தொண்டர்களும் அவர்களை அன்போடு வரவேற்று உபசரித்தனர். மொத்தம் முன்னூற்றி அறுபது போராளிகள் சமூகமளித்திருந்தனர்.

சத்தியாக்கிரகம் பற்றியும் போராளிகள் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பது பற்றியும் விளக்கப்பட்டது. சத்தியாக்கிரகிகள் தாக்கப்படலாம். வாகனங்களில் ஏற் றிக்கொண்டு செல்லப்படலாம். கண்ணீர் புகைக்குண்டுகள் எறியப்படலாம், அனைத்திற்கும் போராளிகள் அஞ்சக் கூடாது, பயந்து ஓடக்கூடாது, எந்தச் சந்தர்ப்பத்திலும் போராளிகள் பொறுமை இழக்கக்கூடாது என்று போதனை செய்யப்பட்டது. இதற்கான விளக்கங்களை டாக்டர் நாக நாதன் கொடுத்தார்.

திரு. வன்னியசிங்கம் அவர்கள் சமூகமளித்தவர்களின் பெயர், வயது, தொழில், இடம் போன்றவற்றை விசாரித் துக் குறித்துக்கொண்டார். அவர் கேட்ட விபரங்களில்

ஒன்று ''உங்கள் உயிருக்கு ஆபத்து ஏதுவும் ஏற்பட்டால் யாருக்கு அறிவிப்பது'' என்பது.

இந்தக் கேள்வி அழகு மணியிடம் கேட்கப்பட்ட போது என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் திகைத்தான். அவன் இறந்தால் செய்தியை யாருக்கு அறிவிப்பது? அவனுக்கென்று இருப்பது இரண்டே இரண்டு உயிர்கள் தான். ஒன்று அன்னை பவளம் அடுத்தது சந்திரா. இருவரில் யார் பெயரைக் கொடுப்பது என்று யோசித்த அவன் சந்திராவின் பெயரையே கொடுத்தான். பிறகு சிந்தித்துப் பார்த்ததில் அவன் செய்தது சரியென்றே பட்டது.

''சந்திரா இந்த ஒரு விடயத்தில்தான் உனக்கும் எனக்கும் கருத்துவேறுபாடு உண்டேயொழிய, மற்றும்படி நீயில்லாமல் என்னுல் வாழமுடியாது என்றும், நீதான் என் வாழ்க்கைத்துணை'' என்றும் கொழும்புக்குப் புறப்படுமுன் அவளிடம் சொல்லிவிட்டு வரவேண்டும் என்று நினைத்திருந்தான். ஆனல் அதற்குத்தான் சந்தர்ப்பமில்லாமல் போய்விட்டதே. ஒருவேளை தான் இறந்தாலும் தான் அவளுக்குரியவனுகவ்வ இறந்தான் என்பதை அவளுக்கு அறிவிப்பதற்கு இது ஒரு சந்தர்ப்பமென்று அவன் கருதினுன்.

இரவு படுக்கைக்குச் சென்றபின்னர் கூட அவனுல் அமைதியாகத் தூங்க முடியவில்லை. போராளிகள் பெரும்பாலும் தூங்கிவிட்டார்கள். அங்கொன்றும் இங்கொன்றுமாகக் குறட்டையொலிகள் இரவின் அமைதியைக் குலைத்துக்கொண்டு எழுந்தன.

அழகுமணியின் மனதில் என்றைக்கும் அவள் தான் தனக்குத்துணை என்ற நினைவு மீண்டும் எழுந்து கொண்டிருந்தது. கூடவே சிறுவயதில் தந்தையார், மலையகத்தில் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் ஒருமுறை பாடசாலை விடுமுறையைக் கழிக்க தாய் பவளத்துடன் சென்றிருந்த போது நடை பெற்ற நிகழ்ச்சியும் நினைவுக்கு வந்தது.

சந்திரா நன்கு பாடுவாள். அவள் அப்பொழுது ஏழு எட்டு வயதுச் சிறுமிதானே. அவள் திக்கித் திக்கிப் பாடும் போது அவளது மழலைக் குரல் கேட்பதற்கு மிகவும் சுவையாக இருக்கும்.

ஒருமுறை அழகுமணி அவளைப் பாடச் சொன்னான். அவள் 'தெரியாது' என்று கூறினாள்.

'பாடாவிட்டால் நான் உன்னோடு பேசமாட்டேன். இனிமேல் லீவுக்கு நான் இங்கே வரவும் மாட்டேன். வந்தாலும் உன்னோட விளையாடவும் மாட்டேன்'' என்று மிரட்டினான்.

அந்தச் சிறுவயதிலேயே அழகுமணியின் நட்பை இழந்து விடக்கூடாது என்ற துடிப்பு அவளுள் இருந்ததை அறிந்தே அப்படி ஒரு போடுபோட்டான். அவள் பயந்தே விட்டாள்.

''நானு என்னபாட எனக்குத்தான் ஒண்ணும் தெரியாதே''

''எதெண்டாலும் பாடு. எனக்கு வேண்டியது பாட்டு''

''அப்படின்னா எங்கவூட்டு பக்கத்து காம்பராவில இருக்கிற மாமா ஒருத்தரு ஒரு பாட்டுப் பாடுவாரு அதைப் பாடட்டுமா?''

''சரி அதையாவது பாடு''

அது ஒரு மலையகக் காதல் பாட்டு. அதன் பொருள் அவளுக்குப் புரியாது. அவனுக்கும் புரியாது. அவள் பாடினாள்.

''மாமன் மகனே மருகப் பிலாச்சுளையே ஏலம் கரும்பே ஒன்ன என்ன சொல்லிக் கூப்பிடுவேன். மூக்குத்தி போட்ட புள்ளே முகம் சிவந்த சின்னப்புள்ளே நாக்கு சிவந்த புள்ளே நான் தாண்டி உன்புருஷன்''

அவள் பாடினுள் அவள் பாட அவனும் பாடினுன். தற்செயலாக அந்தப் பக்கம் வந்த பவளம் இவர்கள் பேச்சையும், பாட்டையும் கேட்டு, தன் கணவனுக்கும் கூப்பிட்டுக்காட்டி, இருவரும் விழுந்து விழுந்து சிரித்தனர்.

அன்றுமுதல் அந்தப் பாடல் அவனுக்கு மனதில் நன்கு பதிந்துவிட்டது. பொருள் விளங்காமல் அன்று பாடிய அந்தப் பாடல் இன்று பொருள் விளங்கிய காலத்தில் மீண்டும் பாடப்பாட இனித்தது. ஏனென்ருல் அவளுக்கு அவன் மாமன் மகனுகி விட்டான். அவனும் ''நான் தாண்டி உன் புருஷன்'' என்று சொல்லும் நிலையை அடைந்து விட்டான். அடிக்கடி அவன் இதே பாடலை அவள் முன் பாடி கேலி செய்த பொழுதெல்லாம் அவள் நாணி முகம் சிவந்ததுண்டு.

உறங்கியவர்கள் போக மற்றவர்கள் நாளைய போராட்டத்தைப் பற்றிய சிந்தனையிலே கிடந்தனர். ஆனுல் அவன் மனதில் மட்டும் சந்திராவின் உருவமும், அவளுக்கும் அவனுக்குமிடையில் நடந்த போராட்டமும் மட்டுமே நினைவில் மாறிமாறி வந்துகொண்டிருந்தன.

போர்க்களம் செல்லும் தன் துணைவனுக்கு இரத்தத் திலகமிட்டு 'வெற்றியோடு திரும்புங்கள்' என்று வீரமொழி கூறி அனுப்புவாளாம் புறநானூற்றுப் பெண். அன்னை பவளத்தைப் பொறுத்தவரையில் அவள் வீரத்தாயாகவே நடந்து கொண்டாள். ஆனுல் சந்திரா அவன் உறுதியை எல்லாம் தூள்தூளாக்கும் செயலையல்லவா செய்துவிட்டாள்.

''அழகு நான் உங்களை உயிருக்குயிராக விரும்புகின்றேன், உங்களுக்கு வாழ்க்கைப்பட்டு உங்களுக்கு முன்னுலேயே மஞ்சள் குங்குமத்தோடயே போய்ச்சேர வேண்டுமென்றுதான் விரும்புகிறேன். ஆனுல் நீங்கள் இப்ப கொண்

டிருக்கிற கொள்கை அற்பாயுசோட உங்கட வாழ்க்கையை முடிச்சு, என்னை நடுத் தெருவில விடுகிற கொள்கை. தயவுசெய்து உங்களுக்கு அரசியல் வேண்டாம். நீங்க ஒரு ஆசிரியர். உங்கட தொழில் படிப்பிக்கிறது. மாணவர்களுக்குப் படிப்பியுங்க. உங்களுக்கு இருக்கிற அறிவை வைச்சு தமிழுக்கு, தமிழ் இலக்கியத்துக்கு வேண்டிய பணியைச் செய்யுங்க.''

''சந்திரா நான் ஒரு தமிழ் ஆசிரியன், தமிழ் கவிஞன் அந்தத் தமிழுக்குத்தான் இப்போ ஆபத்து வந்திருக்கு. அந்த தமிழே இல்லாட்டி எனக்குத்தொழில் ஏது? வாழ்வேது? 'தன்னைப் பழித்தவனை தாய்தடுத்தால் விட்டுவிடு. தமிழைப் பழித்தவனை தாய்தடுத்தாலும் விட்டுவிடாதே என்று நீ கேள்விப்பட்டதில்லையா?

''இது எல்லாம் பேசுறதுக்கும் கேக்கிறத்துக்கும் நல்லா இருக்கும் அழகு, வாழுறதுக்கு உதவாது.''

''சந்திரா நீ எப்படி நினைக்கிறியோ எனக்குக் கவலையில்லை. ஆனால் என் மொழி தான் என்னை வாழவைக்குது. அது தான் எனக்கு உயிர். அதுக்கு இப்போ இன்னல் வந்திருக்கு. 'பொங்கு தமிழுக்கு இன்னல் வருமென்றால் சங்காரம் நிசமென்று சங்கே முழங்கு' என்ற கவிஞனின் வாக்கை பொய்யாக்கி, கவிஞனை என்னால வாழமுடியாது. ஐந்தாம் திகதி பாராளுமன்றத்துக்கு முன்னால நடக்கப் போற சத்தியாக்கிரகப் போராட்டத்தில நான் கலந்து கொள்ளத்தான் போறன்.

''இல்லே நீங்க போகக்கூடாது.''

''நான் போகத்தான் வேண்டும்.''

''நான் சொல்லுறன் நீங்க கலந்து கொள்ளக்கூடாது.''

''யார் சொன்னாலும் கேட்கமாட்டேன் நான் போயே திருவேன்.''

முந்திய இரவு சந்திராவுக்கும் அவனுக்குமிடையில் நடைபெற்ற காரசாரமான இந்த உரையாடலின் நினைவுகள் முற்றுப் பெறுமுன்னரே அவன் தூங்கி விட்டான்.

மறுநாள் அதிகாலையே விழித்துக்கொண்டான். அவனுக்கு முன்னர் பல போராளிகள் விழித்துக் காலைக் கடன்களை முடிப்பதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

அன்றைய நாள் இலங்கைத் தமிழர் வரலாற்றில் அழிக்கப்படாத முத்திரை பொறிக்கப்பட்ட நாள். அந்த நாளில் அதிலும் இந்த நிகழ்ச்சியில் நானும் ஒருவனாக இருக்கின்றேன் என்ற பெருமித உணர்வோடு படுக்கையை விட்டு எழுந்தான்.

காலை உணவு முடிந்ததும் அனைவரும் பாராளுமன்றம் நோக்கிப் புறப்பட்டனர். அவர்கள் கொண்டுவந்த பெட்டிகள், பொருட்கள் யாவும் கதிரேசன் மண்டபத்திலேயே வைக்கப்பட்டன. சிலர் தமது கைக்கடியாரங்களையும் கழற்றி வைத்தனர். எதுவும் நடக்கலாமென்று எதிர்பார்த்த அவர்கள் முன் எச்சரிக்கையாக இதனைச் செய்தனர். அழகுமணி தனது கைக்கடியாரத்தையும் கழற்றிவைக்க நினைத்தான்.

பிறகு தனது முடிவை மாற்றிக்கொண்டான். ஏனென்றால் அது அவனுக்கு சந்திராவால் அன்பளிப்புச் செய்யப்பட்டது. அவன் இறந்தாலும் அவனுடைய நினைவுச் சின்னத்தோடேயே இறக்க வேண்டுமென்றே விரும்பினான்.

போராளிகள் எல்லோரும் பிரிந்து பிரிந்து புறப்பட்டுச்சென்றனர். முன்னர் திட்டமிட்டபடி அனைவரும் சரியாக காலை எட்டு மணிக்கு பாராளுமன்றத்தின் முன் வந்து சேர்ந்தனர்.

சத்தியாக்கிரகம் முன்னறிவுப்புக் கொடுக்கப்பட்ட போராட்டம்தானே. எனவே பாராளுமன்றத்து வளவுக்குள் எவருமே நுழைய முடியாதவாறு பலத்த காவல் போடப்பட்டிருந்தது. இப்படியொரு நிலைமையை சத்தியாக்கிரகிகள் எதிர்பார்த்து அதற்கு ஆயத்தமாகவே வந்திருந்தனர். தலைவர்களின் கட்டளையைத் தொடர்ந்து போராளிகள் செயல்பட்டனர்.



# பயணம் தொடக்கின்றது

## அத்தியாயம் 4

**மனமெனும் பெண்ணே! வாழ் நீ கேளாய்!**
**ஒன்றையே பற்றி ஊசலாடுவாய்**
**அடுத்ததை நோக்கி யடுத்தடுத் துலவுவாய்**

— *பாரதியார்*

அன்று நடந்துகொண்டிருந்தது மறப்போர் அல்ல அறப்போர், வேண்டியிருந்தால் போராளிகள் மட்டுமே இரத்தம் சிந்துவதற்காக நடைபெற்ற போர், எதிராளிகள் ஆயுதம் தாங்கி வந்தால்கூட போராளிகள் பொறுமையைக் கடைப்பிடித்து உயிர்ப்பலியாகவேண்டியிருந்தாலும் ஏற்றுக்கொள்ள வேண்டிய போர்.

பயந்து படமெடுக்கின்ற பாம்புகூட தனக்கு ஆபத்து வருகிறது என்பதை உணர்ந்தவுடனேயே தனது விஷப் பல்லை எதிராளிமேல் பதித்துவிடுகின்றது. ஐந்தறிவு உயிர்களுக்கே தற்பாதுகாப்புக்காகப் போராடும் துணிவு ஏற்பட்டுவிடுகிறது. ஆனால் ஒரு சாத்வீகப் போராளி தற்பாதுகாப்பைப் பொருட்டுத்தானும் தனது எதிர்ப்பைத் தெரிவிக்கவோ பயந்து பின்வாங்கவோ முடியாது.

ஆயுதம் தாங்கிய யுத்தமுனையில் நிற்கும் வீரனுக்கு உடல் வலியும், விவேகமும் இருந்தால் போதும். ஆனால் சாத்வீகப் போராளிக்கு உடல் வலிமையைவிட மனவலிமையும் விவேகத்தைவிட பொறுமையுமே அதிகம் தேவையானவை. அந்த மனவலிமையும் பொறுமையுமே பாரதத்தில் வெள்ளையனின் துப்பாக்கிக் குண்டுகளைக் கூடப்பிளந்து புறமுதுகிட்டு ஓடவைத்தது. சத்தியாக்கிரகிகளின் ஆன்மீக சக்தியே கருங்குழல் துப்பாக்கிகளை வெள்ளையனின் கைகளில் இருந்து நழுவவைத்து பாரதத்துக்கு சுதந்திரத்தைத் தேடிக்கொடுத்தது. எனவே சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்துவதற்கு ஆன்மீக பலம் தேவைப்பட்டது. அந்த ஆன்மீகப் பலத்தை ஆண்டவன் ஒருவனால்தான் வழங்க முடியும் என்று சத்தியாக்கிரகப் போராளிகள் திடமாக நம்பினர்.

● நாவண்ணன்

இதற்காக அன்றையதினம் முழுவதிலும் தமிழர் வாழும் பிரதேசங்களில் எல்லாம் பிரார்த்தனைகள் நடாத் தும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தனர். இந்து, கிறிஸ் தவ, கத்தோலிக்க, இஸ்லாமிய ஆலயங்கள் அனைத்திலும் இந்தப் புனித போராட்டத்துக்காக பிரார்த்தனைகள் நடை பெற்றன.

அழகுமணியின் தாய் பவளம் அன்று காலையே கோவி லுக்குச் சென்றுவிட்டாள். சத்தியாக்கிரக வெற்றிக்கென்றே எழுதப்பட்ட விசேட பஜனைகள் பாடப்பட்டன. பக்தர்கள் ஒரு மனதாக தம் நோக்கத்துக்காக உளம் உருகிவேண்டி னர். இன, மத, ஆண், பெண் பேதங்களை மறந்தவர்க ளாக தமிழன் என்ற ஒரே உணர்வில் ஒன்றித்து வழிபா டுகள் நடைபெற்றன, பவளம் சத்தியாக்கிரகத்தின் நோக் கத்திற்காகவே அன்றைய தினத்தில் விரதம் அனுட்டித் தாள்.

சந்திராவைப் பொறுத்தவரையில் அத்தினத்தையே வெறுத்தாள், அவள் வாழ்வைப் பாலைவனமாக்குவதற்கா கவே தோன்றிய தினம் அதுவென்று குமுறினாள், அடிபட்டு இறப்பதற்கென்றே போகும் அவனுக்காக வேறு என்ன பிரார்த்தனை செய்ய வேண்டிக்கிடக்கிறது என்று குமைந் தாள். அப்படியிருந்தும் அவளால் மன அமைதியாக இருக்க முடியவில்லை. பவளமும் விரதம், அவளுக்கும் பசியில்லை. தனிமையில் எதிர் காலத்தைப்பற்றிச் சிந்திப்பதற்கு வசதி யாய் இருந்தது.

அழகுமணியை அல்ல 'அழகு' என்ற கவிஞனையே அவள் அன்புசெய்தாள். அவன் கவிதைகளையே அவள் அதிகமாகக் காதலித்தாள். எனவே அந்தக் கவிஞனுக்கு வாழ்க்கைப்படுவதன் மூலம்தான் அவளது ஆசை நிறை வேறும் என்பதில்லையே. அழகுமணியின் சிந்தனையும் அவ ளது சிந்தனையும் வெவ்வேறு துருவங்களாகி விட்டபிறகு

அவனிடமிருந்து அவளுக்கு வேண்டிய அமைதியோ அவளி டமிருந்து அவனுக்கு வேண்டிய அமைதியோ கிட்டமுடி யாது. எனவே அவள் அவனிடமிருந்து தன்னைப் பிரித்துக் கொள்ளவே விரும்பினாள்.

காதலிப்பது என்பது எதற்காக? அறியாப்பருவத்தில் அறியாத்தனத்தில் ஒருவர்மீது காதல் கொண்டுவிட்டால் காதலித்த குற்றத்துக்காக அவன் பொருத்தமற்றவனாக இருந்தாலும்கூட அவனுக்கு வாழ்க்கைப்பட்டு வாழ்க்கை முழுவதும் தண்டனை அடைய வேண்டும் என்பதற்காகவா?

மேலை நாடுகளின் எல்லாம் காதலிப்பது எதற்காக ஒருவரை ஒருவர் புரிந்துகொள்வதற்காக, அந்தக்கால கட்டத்தில் தாம் ஒருவருக்கு ஒருவர் பொருத்தமற்றவர் கள் எனக் கண்டுகொண்டால் தாமாகவே பிரிந்துகொள் கின்றார்கள். இதன்மூலம் ஒருவருக்கொருவர் ஆயுள் தண் டனையாக அமையாமல் ஒருவர் வாழ்வுக்கு மற்றவர் துணை யாகின்றார்கள். இதைப் புரிந்து கொள்ளாமையும் பொருத் தமின்மையும் திருமணத்துக்குப் பின்னர் நிலவினால்கூட தாம் ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்து கொள்வதை அந்தச் சமூகம் கௌரவமானதாகக் கருதுகின்றது.

ஆனால் 'கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன், என்ற பூஞ்சணம் பிடித்த சில சொல்லடுக்குகளை வைத்துக் கொண்டு பெண்ணினத்தை ஒரு அடிமைக் கருவியாக வைத்து ஆட்டிப்படைக்கிறது இந்த தமிழ்ச் சமுதாயம்.

சந்திராவைப் பொறுத்தவரையில் திருமணம் என்ற ஒரு வேலிக்குள், தான் சிறைப்பட்ட பின்னர் அந்த வேலியை உடைத்து வெளியேற விரும்பவில்லை. அவன் இன்று ஒரு கவிஞனைப் பிரகாசிப்பதற்கு அவனது தமிழ்ப் பற்றும், அரசியல் வேட்கையும் தான் காரணமாக இருக்கு மானால் அவள் அவனோடு இணைவதன் மூலம் ஒரு அற்பு தக் கவிஞனை உயிரோடு கொன்றவளாவாள்.

நிட்சயமாக அவன் அழிவுக்கு அவளே காரணமாகி விடுவாள். அந்த ஒரு நிலை உருவாகுவதை அவள் அறவே வெறுத்தாள். உள்ளிருந்து கொல்லும் வியாதியாக அவன் அழிவுக்குத்தான் காரணமாக அமைவதைவிட அவனைவிட்டு விலகியிருந்தே அவன் வளர்ச்சிக்குத் துணை செய்தால் என்னவென்ற கேள்வியை தனக்குள் கேட்டுக்கொண்டாள் ''அதுவே சரி'' என்ற பதிலே அவள் இதயத்தில் எதிரொலித்தது.

அவள் அவனோடு இணைந்து தனது ஆசாபாசங்களுக்கு அவள் அவனை அடிமைப்படுத்த முயலும்போது அந்த வானம்பாடியின் இறகுகளை அவள் ஒடித்து முடமாக்கத் தான் போகிறாள். அந்தக் குயில் தான் சுதந்திரமாகப் பாடும் குரலை இழந்து விடத்தான் போகின்றது. அத்தகைய கொடுமைக்காரியாக தான் மாறவேண்டுமா? அவனது வழியைவிட்டு விலகுவதன் மூலம் அவனைச் சுதந்திரமாகப் பாடித்திரிய அனுமதிக்கவும் அந்தப் பாடல்களைக் கேட்டு, தான் அகமகிழவும் அவள் தீர்மானித்தாள்.

ஆனால், அழகுமணிக்கு இது பேரதிர்ச்சியாகத்தான் இருக்கும். அவனைப் பொறுத்த வரையில் அவள் ஒரு துரோகியாகவே கணிக்கப்படுவாள், ஏன் பவளம்கூட அப்படியே கருதக்கூடும்.

யார் எப்படி நினைத்தாலும் அவளது முடிவு நியாயமென்றே அவளுக்குப்பட்டது. தானும் வாழ்ந்து அவனையும் வாழவைக்க அதுவேபொருத்தமானது என்றும் கருதவைத்தது. தனது தீர்மானத்தில் அவள் உறுதியாக இருப்பது என்ற முடிவுக்கு வந்தாள்.

ஏனைய தமிழர்களின் வழிபாடுகளும், பிரார்த்தனையும் நடைபெறும் சத்தியாக்கிரகம் வெற்றியில் முடியவேண்டும் என்ற நோக்கத்திற்காக நடை பெற்றுக் கொண்டிருக்க

சந்திரா வீட்டில் இருந்தபடியே தனது நோக்கம் வெற்றியடைய வேண்டும் என்பதற்காகப் பிரார்த்தனையில் ஈடுபட்டாள்.

பிரார்த்தனையில் ஈடுபட்டபோது அவள் மனம் இலேசாக இருந்தது. அழகுமணியின் போக்குக்கு தான் ஆதரவாக இல்லாவிட்டாலும் தடையாக இருக்க வேண்டியதில்லை என்ற எண்ணம் ஏற்பட்டது. தொடர்ந்து முந்தின தினங்களில் நடைபெற்ற சம்பவகங்களில் தான் நடந்து கொண்ட விதங்கள் தவறானவை என்பதையும் உணரவைத்தது.

ஆம், அவள் அவனோடு இணையாத பட்சத்தில் அவன் இலட்சியங்களுக்கு அவள் ஏன் தடையாக இருக்கவேண்டும். இனி அவள் அவனுக்கு ஆதரவாக இல்லாவிட்டாலும் தடையாக இருக்கமாட்டாள். தான் நடந்துகொண்ட விதத்திற்காக அவனிடம் மன்னிப்புக் கோரவும் போகின்றாள். ''அழகு, என்னை மன்னித்து விடுங்கள்'' என்று மானசிகமாக மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள்.

இப்பொழுது கூடவே இன்னுமொரு பயமும் அவளுள் சேர்ந்துகொண்டது. சத்தியாக்கிரகப் போராளிகளுக்கு எதுவும் நடக்கலாம் என்றார்களே. அப்படியானால் அழகுமணிக்கும் ஏதாவது நடந்து விடுமா... இந்த நினைவு ஏற்பட்டது முதல் படிப்படியாக அவள் பயம் அதிகரித்தது. அவனது உடல் நலத்துக்காகப் பிரார்த்திக்கவேண்டும் என்று தோன்றியது. அவனுக்கு அப்படி இருக்குமானால் பெற்றவளான பவளத்துக்கு எப்படியிருக்கும் என்பதனை இப்பொழுது அவளால் எண்ணிப்பார்க்க முடிந்தது.

பிற்பகல் மூன்று மணியிருக்கும் பவளம் பிரார்த்தனை முடிந்து வந்தாள். அவள் முகத்தில் அமைதியில்லை. ஆனால் ஒரு உறுதியிருந்தது. வீட்டின் உள்ளே வந்தவள் எதுவும் பேசவில்லை. சாய்வு நாற்காலியில் அமர்ந்துகொண்டாள்.

பவளத்தின் தோற்றத்தைக் கண்டதும் ஏதோ நடந்துவிட்டதாக அவள் உணர்ந்தாள், ஆனால் அவளிடம் போய்க் கேட்கும் துணிவு ஏற்படவில்லை. கேட்காமல் இருக்கவும் மனம் அனுமதிக்கவில்லை. துணிவை வரவழைத்துக்கொண்டு ''ஏன் அம்மா ஒருமாதிரியாய் இருக்கிறீங்க 'என்ன நடந்தது' என்று மெல்ல வினவினாள்.

ஒரு கணம் சந்திராவை ஏறெடுத்துப்பார்த்தாள் பவளம். அந்தப் பார்வையில் புற நானூற்றில் தன்மகனைக் களத்தில் பலிகொடுத்த தமிழ்த்தாயின் பெருமிதம் ஒளிர்ந்தது.

''சத்தியாக்கிரகிகளுக்கு நல்ல அடியாம். சிலர் ஆஸ்பத்திரியிலையாம். அதில அழகுமணியும் ஒருவனும்...'' அவள் சொல்லிக்கொண்டேபோனாள். அவள் பேச்சில் இது வரையில் காணாத ஒரு பரவசம் மிளிர்ந்தது. சந்திரா எது நடக்கக் கூடாது என்று நேர்ந்தாளோ அது நடந்துவிட்டதே என்று அதிர்ந்து சிலையானாள்.




# பயணம் தொடக்கின்றது

## அத்தியாயம் 5

''உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே.

— *பாரதியார்*



கொழும்பு அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த அழகுமணிக்கு நடந்து முடிந்துவிட்ட சம்பவங்கள் கனவுபோல் தோன்றியது. இடது கையைச்சுற்றி பெரிய கட்டுப்போடப்பட்டிருந்தது. மணிக்கட்டு சில தடவைகளில் வீண்விண்ணென்று வலித்தது. கைவலி கொடுத்த துன்பத்தைவிட போர்க்களத்திலே பட்ட விழுப்புண்ணைக் கண்டு மகிழ்வடையும் ஒரு வீரனின் உணர்வுதான் அவனுக்கு ஏற்பட்டது.

முதல்நாள் சம்பவங்களை எண்ணும்போது... அவன் இருந்த அந்த இடத்தின் சுற்றுடல் நோயாளிகளின் பலவித வேதனை ஒலிகள், பெருமூச்சுகள் தாதிமார்... கண்காணிகளின் மிரட்டல்கள் யாவுமே மறைந்துவிடுகின்றன.

பாராளுமன்றத்துள் யாரும் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள் என்ற எச்சரிக்கை அடங்கிய கடிதத்தை பிரதமர் ஏற்கனவே தலைவர்களுக்கு அனுப்பியிருந்தபடியால் எந்த நிலைமையையும் சமாளிக்கும் உறுதியுடனும் திட்டத்துடனேயுமே தலைவர்கள் அங்குவந்திருந்தனர்.

பாராளுமன்றத்துள் நுழைவதற்கு தடை விதிக்கப்பட்டிருந்ததால் பாராளுமன்றத்தின் முன்னுள்ள காலி முகத்திடலில் சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடாத்துவது என தலைவர்கள் ஏற்கனவே திட்டமிட்டிருந்தார்கள். அத்திட்டத்தின்படியே கட்டளை பிறப்பித்தார்கள், பாராளுமன்றத்துக்கு முன்புறமாக இருந்த வெளியான காலிமுகத்திடலுக்குச் சென்று அந்த புற்றரையில் அனைவரும் அமர்ந்துகொண்டனர். போராளிகளின் கைகளிலே பலவித எதிர்ப்பு

வசனங்களைக் கொண்ட சுலோக அட்டைகள் இருந்தன. அவற்றில் ஓர் அட்டையில் இருந்த வசனங்கள் ''சிங்கள மக்கள் எங்கள் விரோதிகள் அல்ல, ஒற்றை யாட்சியே எங்கள் பகைவன்''

இந்த வாக்கியங்களின் பொருளையோ நட்பையோ மதிக்காத சம்பவங்கள் சில நிமிட நேரங்களில் அங்கு நடைபெற்று முடிந்து விட்டன.

ஆயிரக் கணக்கான குண்டர்கள் அடங்கிய கும்பல் ஒன்று அறப் போராளிகள் இருந்த இடத்தைநோக்கி கோஷமிட்டபடி வந்தது.

மன்னர் ஆட்சிக் காலங்களில் குற்றவாளியைக் கழுத் தளவு குழியுள் புதைத்துவைத்து அவன் தலையை யானை யின் காலால் மிதிக்கச் செய்து மரணதண்டனை நிறைவேற் றுவார்களாம். தன் தலையை மிதிக்க வரும் யானையைக் கண்டதும் மரண தண்டலையைப் பெறப்போகும் குற்ற வாளியின் மனம் என்ன உணர்வுகளைப் பெறுமோ அதே எதிர்பார்ப்பில் போராளிகள் இருந்தனர். ஆனால் எவரும் உறுதிகுலைந்து விடாதவர்களாக இருந்தனர்.

குண்டர்களில் ஒருவனது கையில் வடக்குக் கிழக்கை ஒன்ருக இலங்கையில் இருந்து பிரித்துக் காட்டுவதுபோன்று படமொன்று இருந்தது. அந்தப் படத்தைத் திரு. வன்னிய சிங்கத்தின் முன்னால் கொண்டு சென்று காட்டிய அவன். ''இதுதானே உங்களுக்கு வேண்டும்'' என்று கேட்டான். அவரிடமிருந்து பதில் எதுவும் வராதுபோகவே 'பளார்' என்று அவர் கன்னத்திலே அடியொன்று விழுந்தது. தொடர்ந்து அந்தக் குண்டர்கள் தாம் கொண்டுவந்த நோக்கத்தை நிறைவேற்றத் தொடங்கினர்.

கல்லடியும், பொல்லடியும் கரமாரியாக விழுந்தன. வன்னியசிங்கத்தின் கையில் இருந்த மணிக்கூட்டை அறுத்து எடுத்தான் ஒருவன். அவரது பைகளிலே ஏதும் பணம்

இருக்கும் என நினைத்த அவன் அதை எடுக்கும் முயற்சியில் முயன்று அவரது சட்டையைக் கிழித்தான். சிங்கக் கொடி பிடித்துவந்த மூங்கில் தடியால் நையப்புடைத்தனர். சிலர் சொல்லத்தகாத அசுசியான வார்த்தைகளை பொழிந்து கொண்டு போராளிகள் மீது மானம் மறந்தவர்களாக சிறு நீர் பெய்தனர். இன்னும் சிலர் நிர்வாணிகளாக நின்று நாட்டியமாடிக் கேலிசெய்தனர். வேறு சிலர் தொண்டர்களை அடித்து நையப்புடைத்து காலிமுகக் கடற்கரையிலே கொண்டு சென்று வீசினர். வீசப்பட்ட தொண்டர்கள் மீண்டும் எழுந்துவந்து போராட்டத்தில் கலந்துகொண்டனர். அவர்களில் ஒருவர் முன்னுள் தமிழ் பாராளுமன்ற உறுப்பினரான முஸ்தபா அவர்களாவர்.

சற்று நேரத்தில் திருமலையில் இருந்துவந்த போராளிகளை அமிர்தலிங்கம் அவர்கள் கோட்டைப் புகையிரத நிலையத்தில் இருந்து ஊர்வலமாக அழைத்துவந்தார். ''ஆறிலும் சாவு நூறிலும் சாவு வருவது வரட்டும் பார்ப்போம் ஒருகை'' என அமிர்தலிங்கம் எழுப்பிய வீரமுழக்கத்தை மற்றையோரும் வான்பிளக்க கோஷமிட்டபடி வந்தனர் அடிபட்டுத்தளர்ந்திருந்த சத்தியாக்கிரகிகளிடம்புத்துணர்வு உத்வேகம் பிறந்தது, திருமலை வீரர்களும் வந்து சேர்ந்து கொண்டனர்.

அப்பொழுது கல்லொன்று திரு. அமிர்தலிங்கத்தின் நெற்றியைப் பிளந்தது. இத்தனை கொடுமைகளும் குண்டர்களால் தமிழ் அறப்போராளிகளுக்கு இழைக்கப்படும்போது பொலிசார் அங்கு நின்றனர். யாரும் எவரையும் தடுக்கும் முயற்சியில் ஈடுபடவில்லை. இன்னும் இத்தனை அக்கிரமங்களும் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம் நாட்டின் பிரதமர் பண்டாரநாயக்கா பாராளுமன்றத்தின் மேல்மாடியில் நின்று இரசித்துக்கொண்டிருந்ததுடன் ''சத்தியாக்கிரகிகள் என்ன விரும்பினார்களோ அதனை என் மக்கள் கொடுக்கின்றார்கள்'' என்று ஏளனமாகக் கூறினாராம்.

திருவாளர்கள் ஜி ஜீ. பொன்னம்பலம், அடங்காத் தமிழர் சுந்தரலிங்கம் ஆகியோரும் அறப்போர் நடந்த இடத்திற்கு வந்து போராட்டத்தைக் கைவிடும்படி கேட்டுக்கொண்டனர். ஆனால் எவரும் அசையவில்லை.

அமிர்தலிங்கத்தின் தலையில் இருந்து வழிந்த இரத்தத்தைத் தடுக்க திரு. சுந்தரலிங்கம் தனது கைக்குட்டையால் கட்டுப்போட்டார். எனினும் இரத்தம் கசிந்துகொண்டேயிருந்தது.

தலைவர்களையே அந்தப் பாடுபடுத்திய குண்டர்கள் அழகுமணியை சும்மா விட்டு விடுவார்களா? அழகுமணியின் வயிற்றில் பலமான ஓர் உதை விழுந்தது. அந்த உதையைத் தாங்கிக்கொள்ள முடியாமல் அழகுமணி சுருண்டு விழுந்தான். மறுகணம் மளமளவென மூங்கிற் தடிகள் அவன் முதுகில் குறிசுட்டன. அடிகள் தலையில் விழாமல் தலையைப் பாதுகாத்த வண்ணம் தரையில் கிடந்தான் அப்பொழுதுதான் அவனது கையில் கட்டப்பட்டிருந்த கடிகாரம் குண்டர்களில் ஒருவனது கண்களில் பட்டிருக்க வேண்டும்.

அழகுமணியின் கையை பிடித்து முறுக்கி இழுத்தான் இடதுகை மணிக்கட்டோடு கழன்றுவிட்டது போன்ற வலி ''ஆ...'' என்று அலறினன். கடிகாரம் குண்டர்களின் கையோடு சென்றுவிட்டது. அத்தோடு தடியன் அவனை விட்டு விட்டான். உடம்பெல்லாம் புண்ணாக வலித்தது. ஆனால் இதையெல்லாம் எதிர்பார்த்துத்தானே அவனும் அங்கே வந்திருந்தான்.

''பகல் பன்னிரெண்டு மணிக்கு வேலை முடிந்து துறைமுகத் தொழிலாளர்கள் வருவார்கள். அவர்கள் வருவதற்கு முன்னர் சத்தியாக்கிரத்தை முடித்துவிடுங்கள் அதுவே உங்களுக்குப் பாதுகாப்பு'' என்று திரு. ஜி. ஜீ. பொன்னம்பலம் கேட்டுக்கொண்டார். தலைவர்கள் எவரும் சம்மதிக்க

வில்லை. திட்டமிட்டபடி இரண்டு மணிவரை சத்தியாக் கிரகத்தை நடாத்தியே தீருவது என்பதில் தொண்டர்க ளும் தலைவர்களும் உறுதியாக இருந்தார்கள்.

காயப்பட்டவர்களையும் கடுமையாகத் தாக்கப்பட்டவர் களையும் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லும் முயற்சியில் டாக்டர் நாகநாதன் தீவிரமாக ஈடுபட்டுக்கொண்டிருந் தார். அழகுமணியிடம் வந்த அவர் அவனையும் வரும்படி அழைத்தார். ''ஐயா இரண்டு மணிவரை என்னால் இருக்க முடியும்'' என்று மறுத்துவிட்டான்.

அந்த சமயத்தில் தமிழரசுத் தந்தை செல்வநாயகம் அவர்களின் மகன் மனோகரன் அப்பொழுது அந்த இடத் திற்கு வந்தார். குண்டர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு அடி அடி என்று அடித்தனர். உதைத்து உருட்டினர். இத் தனைக்கும் திரு. செல்வநாயகம் போராளிகளின் முன்வரி சையில்தான் இருந்தார்.

பெற்றமகன் தன் கண் முன்னாலேயே காடையர்களால் பந்தாடப்படும் காட்சியைக் கண்டு எப்படிப் பதைத்திருக் கும் அந்த உள்ளம்! ஆனால் தந்தை செல்வநாயகம் எந்த உணர்வுகளையும் வெளிக்காட்டாதவராக அதே இடத்தில் இருந்தார். தமிழ் இனமே அடிபட்டுச் சாகும் இந்த வேளை யில் தனது மகனின் உயிர்மட்டும் ஒரு பொருட்டா என்ற எண்ணம் மட்டுமே அவரிடம் இருந்தது. தனது குடும்பத் தில் இருந்து இன்னொருவரும் போராட்டத்தில் கலந்து அடிவாங்க சந்தர்ப்பம் கிடைத்ததே என்று அவர் மனம் நிறைவு கொண்டிருக்கும்.

இந்தக் கொடுமைகளை எல்லாம் காணச் சகிக்காத இயற்கை சீறி அழுதது. சோவென்று வானம்திறந்து மழை கொட்டியது. அப்பொழுதும் போராளிகள் அசையவில்லை. அறப்போரென்ன மறப்போரென்ன எதிரியின் தாக்குதல்

ஏற்படும்போது மென்பேலும் உறுதியும் ஆவேசமுமே உண்மையான வீரனுக்கு அதிகரித்துக்கொண்டுபோகும், உயிர் துச்சமாகிவிடும. அந்த மனோ நிலையை அங்கு இருந்த அனைவரும் பெற்றுவிட்டனர். கொடியவர்கள் செய்தவற்றை விட மழையில் குளிர்மையும் இதமும் இருந்தது.

அழகுமணிக்குப் பக்கத்தில் இருந்த போராளி ஒருவர் சற்று முதியவர். காடையர்கள் அடித்தபோதும் கலங்காது அமைதியாக இருந்தவர். மழை விட்டதும், நனைந்து விடாதபடி மறைத்து வைத்திருந்த அந்தப் புத்தகத்தை வெளியே எடுத்தார். அது பைபிள். பின்னர் அந்த பைபிளைத் திறந்து ஒரு குறிப்பிட்ட பக்கத்தை படிக்கத் தொடங்கினார். சற்றுப் பலமாகவே படித்தார். அந்த வசனங்கள் அவனது காதுகளில் விழுந்தது. இந்தச் சூழலுக்கு அவை ஆறுதலைக் கொடுத்தன.

"எளிய மனத்தோர் பேறு பெற்றோர் ஏனெனில் விண்ணரசு அவர்களதே, துயருறுவோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர், சாந்தமுள்ளோர் பேறுபெற்றோர் ஏனெனில் மண்ணுலகு அவர்களது உரிமையாகும். நீதியின்பால் பசிதாகமுள்ளோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் நிறைவு பெறுவர். இரக்கம் உடையோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர். தூய உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர். சமாதானம் செய்வோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் எனப்படுவர். நீதியின் நிமித்தம் துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர் ஏனெனில் விண்ணரசு அவர்களதே."

அவ்வளவையும் படித்த பின்னர் பைபிளை மூடிவிட்டு கண்களை மூடிக்கொண்டு தியானத்தில் ஆழ்ந்தவர்போல் பெரியவர் இருந்தார். அழகுமணியின் காதுகளில் அவர் வாசித்த கடைசி வசனங்கள் மீண்டும் மீண்டும் ஒலித்துக் கொண்டிருந்தன.

'நீதியின் நிமித்தம் துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர் ஏனெனில் விண்ணரசு அவர்களதே' அவன் மனச் செவியில் ஒலித்த அந்த கடைசி வசனம் இப்பொழுது ஒரு சிறு மாற்றம் ''நீதியின் நிமித்தம் துன்புறுத்தப்படுபவர்கள் பேறுபெற்றோர் ஏனெனில் தமிழரசு அவர்களதே'' என்பது போல் அவனுக்கு ஒலித்தது.

அப்பொழுதுதான் அந்த உருவம் அங்கு வந்தது. யாரும் அவரை எதிர்பார்த்திருக்கவில்லை. சாந்தமான அவர் முகமும் துறவுக் கோலமும் சத்தியாக்கிரகிகளுக்கு தனி உற்சாகத்தைக் கொடுத்தது. தனி உற்சாகத்தைக் கொடுக்கும் அந்த உருவம் யார் என்று பக்கத்தில் இருந்த பெரியவரை சுரண்டிக் கேட்டான் அழகுமணி ''அதுதான் தனிநாயகம் அடிகள்'' என்று அவரிடமிருந்து பதில் வந்தது...

● நாவண்ணன்



# பயணம் தொடர்கின்றது

## அத்தியாயம் 6

**மெய்மை கண்ட நூலையே - அன்போடு**
**வேதமென்று போற்றுவாய் வா...வா...வா...**

— *பாரதியார்*

தவத்திரு தனிநாயகம் அடிகளார் அங்கு வந்த அந்த சம்பவத்தை நினைக்கும் போது அழகுமணிக்கு மெய்சிலிர்த்தது.

"எனது இரு கண்களில் எனது சமயத்தை ஒரு கண்ணுகவும், தமிழ்மொழியை மற்றொரு கண்ணுகவும் கருதுகிறேன்" என்று தனது மேடைப் பேச்சுகளிலும், எழுத்துகளிலும் அடிக்கடி கூறுவதாக கேள்விப்பட்டும் படித்தும் இருக்கிருன். அத்தகைய பெருமகனை அன்றுதான் முதன் முதலாகக் காணும் பேற்றினைப் பெற்றுள்ளான். அவர் மொழிப்பற்று மொழியைப் படிப்பதிலும் பரப்புவதிலும் மட்டும்தான் என்று எண்ணி இருந்த அவனுக்கு, மொழி காக்க நடக்கும் போராட்டத்தில் அவர் கலந்துகொள்ள நேரடியாக வந்தது பேராச்சரியத்தைக் கொடுத்தது. அவனுக்கு மட்டுமல்ல அங்கிருந்தோர் அனைவருக்கும் வியப்பை அளித்தது.

கத்தோலிக்கருக்கு அவர்கள் சமயம் தான் முக்கியம், அந்தச்சமயம் அந்நியரால் கொண்டுவரப்பட்ட மதம், அந்தச் சமயத்தவர்களுக்கும், அதன் துறவிகளுக்கும் மொழிப்பற்றுக் குறைவு என்று ஒருசாரார் குற்றம் சாட்டுவதுண்டு. அதனை உண்மைப்படுத்துவதுபோன்று சிலாபம், நீர்கொழும்புப் பகுதிகளில் வாழ்ந்த தமிழர்களிடமிருந்து தமிழ்மொழிக் கல்வியைப் பறித்து, கட்டாயத்தின்பேரில் நாளடைவில் அவர்களை சிங்களமயமாக்கிய தவறினையும் கத்தோலிக்க பீடம் செய்துவிட்டிருந்தது.

ஆனுல் தமிழனுய்ப் பிறந்த கத்தோலிக்கருக்கு அந்த இனமாற்ற விடயத்தில் பங்கு இல்லை என்பதை நிரூபிப்பது

போன்று தனிநாயகம் அடிகள் அன்றைய அறப்போரில் கலந்துகொண்டார்கள். அரசியல் போராட்டம் ஒன்றில் ஒரு கத்தோலிக்க துறவி நேரடியாகக் கலந்துகொண்டது இலங்கை வரலாற்றில் அதுவே முதற்றடவையாகும். கும்பிட்ட கைகளோடு வந்த அவர் சிறிது நேரம் அங்கு இருந்துவிட்டு விடைபெற்றுச் சென்றார். அவர் போகும் போது சுற்றிநின்ற காடையர்கள் அவரை நையாண்டி செய்தனர். அவர் எதற்கும் அஞ்சாதவராக, எதனையும் பொருட்படுத்தாதவராகச் சென்றார்.

அவர் சொற்ப நேரந்தான் அங்கு இருந்தாரெனினும் அது அருள் பொழிந்த நேரம். ஏனெனில் கத்தோலிக்க தமிழ்ச் சமுதாயத்தை மட்டுமல்ல, கிறிஸ்துவின் நெறியை உண்மையின்படி கடைப்பிடிக்கும் சிங்களக் கத்தோலிக்க சமூகத்தையே அவர் பிரதிநிதிப்படுத்திய நேரமாகும். கிறிஸ்தவர்களான தந்தை செல்வா, டாக்டர் நாகநாதன் மட்டுமல்ல கத்தோலிக்கத் துறவிகளும் பேராளிகளின் பக்கமே என்று காட்டிய நேரமாகும்.

அழகுமணியின் பக்கத்தில் இருந்த அந்தப் பெரியவருக்கு மகிழ்ச்சியைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ''தம்பி அறப்போரை தன் வாழ்நாளில் செய்துமுடித்த கிறிஸ்துவின் பிரதிநிதியாக அவர் வந்திட்டுப்போறார் தம்பி'' என்றார்.

அவர் கூறியதன் பொருளை அவன் தெளிவாகத் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக அவர் மேலும் தொடர்ந்தார்.

''நாங்கள் நடத்திக்கொண்டிருக்கிறோமே அறப்போர். இது நாங்க அறத்துக்காக, சத்தியத்துக்காக, உண்மைக்காக நடத்திறபோர், நாங்க கொண்ட இலட்சியத்துக்காக எதிரி நம்மைக் கொலைசெய்ய வந்தால் கூட அவனை உடல் பலத்தால் எதிர்த்துப் போராடாமல் ஆன்மீக பலத்தால்

துன்பம் அனைத்தையும் ஏற்று வெற்றி காணுகின்ற போர். இதே போரைத்தான் 1923 ஆண்டுகளுக்கு முன்னரும் யேசு நாதரும் செய்தார். அவரைக் குற்றம் சாட்டியவர்கள் மேல் அவர் கோபிக்கவில்லை. கேலி செய்து வசைபாடிய வர்களை எதிர்க்கவும் இல்லை. கசையால் அடித்து முள்முடி சூட்டியவர்களை, சிலுவை சுமத்தி நடத்தி வந்தவர்களை, நிர்வாணியாக்கி சிலுவையில்ஆணிகளால் அறைந்து தொங்க விட்டவர்களையெல்லாம் அவர் திட்டித் தீர்க்கவில்லை. இத்தனைக்கும் பிறகு சிலுவை மரத்திலே தொங்கினபோது தன்னைக் கொடுமை செய்தவர்களுக்காக ''பிதாவே இவர் கள் அறியாமல் செய்கிறார்கள், இவர்களை மன்னித்தருளும்' என்று ஆண்டவனிடம் மன்றாடினார்பாரு. அங்கேதான் இந்த அறப்போரின் செயல்வடிவமே இருந்தது. அப்பேர்ப்பட்ட அறப்போராளியின் பிரதிநிதிதானப்பா இந்தத் தனி நாயகம்......''

அவர் சொல்லிக்கொண்டே போனார், அழகுமணி கேட் டுக்கொண்டே இருந்தான். சற்றுமுன்னர் காடையர்களால பட்ட அடிகள் யாவும் மறந்துபோயின. உடல் நோவுகள் எல்லாம் இன்பம் துய்ப்பனவாக இருந்தன.

ஒருவாறு இரண்டுமணிக்குப் போரட்டம் முடிந்துவிட் டது. அழகுமணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டான். அறப்போராட்டம் தமிழ் இனத்துக்குப் பயன்பட்டது என்பதை விட தனிப்பட்ட முறையில் அவனுக்குப் பயன் பட்டிருக்கிறது என்பதில் ஐயமில்லை. பைபிள் மீதும் யேசு வின் போதனைகள்மீதும் ஒரு தனிப்பற்று ஏற்பட்டுவிட்டது. தனக்கென்றொரு பைபிளை வாங்கி அதன் போதனைகளை படிக்க வேண்டும் ஏன்று தீர்மானித்துவிட்டான். துயருறு வோர் பேறுபெற்றோர், நீதியின் நிமித்தம் துன்புறுத்தப்படு வோர் பேறுபெற்றோர்...... என்ற வார்த்தைகளின் ஆழ்ந்த உட்பொருள் இப்பொழுது தெளிவாக விளங்கியது.

அந்தத் தெளிவில் அவன் செயல்களில் உள்ள நியாயம் தெரிந்தது. மனம் அமைதியடைந்தது.

முந்திய தினத்தின் அறப்போரும், தனிநாயகம் அடிக ளின் வரவும் அவனது கற்பனைவானில் கவிதைகளாகத் தோன்றிச் சிறகடித்துப்பறந்தன......

ஐம்பத்து ஆறு ஜூன் ஐந்தினிலே- தமிழர்
அணி யொன்று நின்றது கொழும்பினிலே
நம்பிக்கை ஒன்றையே ஆயுதமாய்- கொண்டு
நாடாளு மன்றத்தின் முன்புறத்தே
காலிமுகத்திடல் புற்றரையில்- இவர்
கத்தியில்லா யுத்தம்செய்து நிற்க
காலிப் படையொன்று சூழ்ந்துநின்று- கொடும்
கல்லடி பொல்லடி தாக்கம் செய்தார்
கேலிக்குரியவராக்கிக் கொண்டு- தீய
கெட்ட வார்த்தை சொல்லித் திட்டிக்கொண்டு
கோலிக் குண்டுவிளை யாடுதல்போல்- அந்த
குண்டர் உருட்டியே நிந்தை செய்தார்
வேலிக்கு ஓணான் சாட்சிபோல- காவல்
வீரப் படைகளும் அங்கு நின்றனர்
சோலி நமக்கெதற் கென்று சொல்லி- வெறும்
சோற்றுப் பிண்டமெனப் பார்த்து நின்றார்
மேலிருக்க வேதம் சொல்லுகின்ற- பக்தி
மேன்மை மிக்க மறைப் போதகரும்-
போலிக்கவுரவம் பார்ப்பவராய்- குளப்
பொந்துள் வாழ் நண்டெனப் பதுங்கி விட்டார் ஆனால்
நாளிதில் நல்லவரான குரு- தனி
நாயகன் மட்டுமே ஒரு துறவி
தோளில் சிலுவையை தாங்கிநின்று- பிறர்
துன்பம் துடைக்கின்ற யேசுபோல
காலிமுகத்திடல் போர்க் களத்தில்- வந்து

கர்த்தரின் சாட்சியாய் வீற்றிருந்தார்
கூலிப்படை போட்ட கூச்சலுள்ளும்- தன்
கும்பிட்ட கைகளால் ஆசி தந்தார்

தன் சிந்தையில் ஊறிய அக்கவிதைகளை தான் மறந்து விடக்கூடாதே என்பதற்காக மீண்டும் மீண்டும் தனக்குள் சொல்லிப் பார்த்துக்கொண்டான.

முன்தினம் போராளிகளில் பலர் அறப்போர் களத்தில் இருந்து கொண்டுவந்து சேர்க்கப்பட்டிருந்தனர். எனினும் அன்று மாலையே அனைவரும் சென்றுவிட்டனர். தான் மட்டும் தனியே அங்கு இருப்பதை விரும்பவில்லை. எப்படியோ மற்றவர்களோடு தானும் போய்ச் சேர்ந்துவிடவேண்டும் என்று நினைத்தான். ஆனால் அவனோடு வந்தவர்கள் அனை வரும் அன்று காலையே புகைவண்டிமூலம் திரும்பி விட்டனர்.

உரிய வைத்திய அதிகாரி வந்ததும் தான் திருகோண மலைக்குச் செல்லவேண்டும் என்று கூறி விலகல் சீட்டைப் பெற்றுக்கொண்டு புறப்பட்டான். ஆனால் வைத்திய சாலையை விட்டுப் புறப்படுவது என்பது அவன் நினைத்த மாதிரி இலகுவானதாக இருக்கவில்லை. முந்திய தினமே ஏனையோரோடு தானும் புறப்படாத மடமைத் தனத்தை எண்ணி நொந்துகொண்டான்.

நேற்றுக் காலிமுகத்திடலில் காடைத்தனம் செய்தவர் களில் சிலர் வைத்தியசாலைக்கு வெளியே காவல் நின்றனர். அவர்கள் நிற்பதன் நோக்கமும் அவனுக்குப் புரிந்தது. அறப்போராளிகள் அந்த வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்ட விபரம் அவர்களுக்குத் தெரியும், அவர்கள் இன்று வெளியே வருவார்கள். அவர்களைத் தாக்கவேண்டும் என்ற நோக்கத்தோடேயே அங்கு நின்றனர்.

அழகுமணியை அவர்கள் நிச்சயம் இனம் கண்டுவிடுவார்கள் என்று அவன் நம்பினான். வைத்தியசாலைக்கு வெளியே செல்வது தனக்கு ஆபத்து என்று கருதினான்.

நேற்றுக் காலிமுகத்திடலிலே காடையர்களின் கலாட்டாக்கள் முன்னால் கலங்காமல் நின்ற அவனுக்கு இன்று அச்சமாக இருந்தது. அவனது அச்சத்திலும் நியாயம் இருக்கத்தான் செய்தது. என்றைக்காவது ஒருநாள் பிரியப் போகின்ற இந்த உயிர் அவனுக்கு வெல்லமல்ல, ஆனால் தனது இனத்துக்கு நன்மை பயக்கக் கூடிய விதத்தில் தனது உயிர் பிரிவதையே அவன் விரும்பினான் முன்தினம் சத்தியாக்கிரகப் போராட்டத்தின்போது உயிரை இழக்க நேரிட்டிருந்தால் இலங்கைத் தமிழர் வரலாற்றிலே பின்வரும் பரம்பரைக்கே ஒரு வழிகாட்டியாக இறந்திருப்பான். ஆனால் இன்று இவர்கள் கையில் அகப்பட்டு இறக்கநேரிட்டால் யாருக்கு என்ன பயன்? சாதாரண வீதி விபத்துப் போலல்லவா ஆகிவிடும்.

முன்பின் அறிமுகம் இல்லாத இடம், முரடர்களின் கழுகுப் பார்வைகள். இவற்றின் நடுவே என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து நின்றான்.



# பயணம் தொடர்கின்றது

## அத்தியாயம் 7

நெஞ்சு பொறுக்குதில்லையே - இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்

— *பாரதியார்*

தெய்வச் செயல் என்பார்களே அது கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களுக்குக்கூட தக்க சமயத்தில் கைகொடுத்து உதவுகிறது. யார் எமக்கு உதவமாட்டார் என்று கருதுகின்றேமோ அவர்கள் மூலமாகவே உதவிகிட்டச் செய்கின்றது.

மறு நாள் காலை புகைவண்டியில் திருகோணமலை நோக்கிச் சென்று கொண்டிருந்த அழகுமணியின் சிந்தையில் இந்த நினைவு தான் மீண்டும் மீண்டும் எழுந்து கொண்டிருந்தது. எமது எதிரி என்று ஒருவனை நாம் கருதினல் அவனும் மனிதன் தான், அவனிடமும் நற்பண்புகள் இருக்கும் என்பதை பல தடவைகளில் மறந்துவிடுகின்றேம். அது எத்தகைய தவருன போக்கு, அந்த இக்கட்டான நிலைமையில் லொறிச் சாரதி சில்வா மட்டும் உதவியிராவிட்டால் அவன் இப்பொழுது திருகோணமலை நோக்கிச் சென்று கொண்டிருக்க முடியுமா!

சில்வா திருகோணமலையில் இருந்து கொழும்புக்கு மீன் ஏற்றிச் செல்லும் லொறியொன்றின் சாரதி. தனது மனவியையும் அழைத்துக் கொண்டு வைத்தியசாலைக்கு வந்திருந்தான். அறிமுகமான அவனைக் கண்டதும் மகிழ்ச்சி ஏற்படுவதற்குப் பதிலாக அழகுமணியினிடம் அச்சம் தான் ஏற்பட்டது. எங்கே தன்னைக் காட்டிக் கொடுத்து விடுவானே என்ற தயக்கம், அவன் கண்களில் இருந்து மறைந்து கொள்ள முயன்றன். அதற்குமுன் அழகுமணியை அவன் கண்டு கொண்டான். ''மாஸ்டர் எங்கே இஞ்ச'' என்று அவனை நெருங்கி வந்தான். சில்வாவின் மனைவியும் புன்னகைமூலம் தன்மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டாள்.

அழகுமணி பதில் சொல்வதற்கு முன் அவனே தொடர்ந்தான். ''இது என்ன மாஸ்டர் கையில் பென்டேஜ்... ஓ... நீங்களும் நேத்து சத்தியாக்கிரகம் செய்தீங்களா?

அழகுமணியால் இல்லை என்று மறுக்க முடியவில்லை அசடுவழிய ஆம் என்பதற்கு அடையாளமாகத் தலையாட்டினான்.

சில்வாவின் முகம் உடனே வருத்தத்தால் சுருங்கியது. ''என்ன மனிசங்கள் மாஸ்டர் நம்மட ஆட்கள். கேட்கவே லஜ்ஜையாக இருக்கு. சத்தியாக்கிரகம் செய்தவங்கள மிச்சம் மோசம் செய்திட்டாங்களாம். அப்பிடியா செய்யுறது.''

அவன் தனக்கே உரித்தான கொச்சைத் தமிழில் பேசுவதைக் கேட்க அழகுமணிக்கு வியப்பாக இருந்தது... அவன் தொடர்ந்து கொண்டே போனான்,

'மாஸ்டர் நாங்களும் மனிசங்தான். எங்கட பாசையில் எங்களுக்கு இருக்கிற அன்பு உங்கட பாசையில் உங்களுக்கு இருக்கிறது என்ன தப்பு. நீங்க நேர்மையா போராடினதுக்கு எங்கட ஆக்கள் இப்பிடி மனுசத்தன்மையல்லாம நடந்தது பெரிய தப்பு.

சிங்கள இனத்தின்மீதே அவன் அதுவரை கொண்டிருந்த தப்பான எண்ணத்தை அந்தச் சாதாரண லொறிச் சாரதி உடைத்துத் தூளாக்கி விட்டான். சிங்களவர்களிலும் நல்லவர், மனச்சாட்சிக்கு மதிப்பளிப்பவர்கள் இருக்கின்றார்கள் என்று பூரித்துப் போனான். அவனிடமே இந்த ஆபத்தான கட்டத்தில் உதவி கேட்கத் தீர்மானித்து விட்டான்.

'சில்வா நீ இப்படிப் பேசுறதைக்கேட்க சந்தோசமாயிருக்கப்பா. கடவுளாய்ப் பார்த்துத்தான் இந்த ஆபத்தான நேரத்தில் உன்னை எனக்கு உதவியாய் அனுப்பியிருக்கிறார்.'

ஆபத்தா... என்ன மாஸ்டர் சொல்லுறிங்க?

'உண்மைதான் சில்வா அதோ பாரு...'

குண்டர்கள் நின்ற திசைகளை கண்களால் காண்பித்தான். 'அவங்க நேற்று சத்தியாக்கிரகம் நடந்த போது எங்களைத் தாக்கின ஆட்கள்தான். ஆஸ்பத்திரியில் நாங்கள் சேர்க்கப்பட்டது. அவங்களுக்குத் தெரியும்போல அதுதான் இங்கேயும் வந்து நிற்கிறுங்கள்.'

'மத்த பேரெல்லாம் எங்க மாஸ்டர்.'

'அவங்க எல்லாம் நேற்று சாயங்காலமே துண்டு வெட்டிப்போட்டாங்க. இன்றைக்கு திருகோணமலைக்கு ரெயின் ஏறியிருப்பாங்க... நான் தனிச்சுப் போயிற்றன் எனக்கு ஒரு உதவிசெய்வியா சில்வா.'

'சொல்லுங்க மாஸ்டர் மனுசனுக்கு மனுசங் உதவி செய்யத்தானே இருக்கிறேம்.'

'ஹல்ஸ்ரப்பில எங்கட தலைவர்மார் நிற்கினம் அங்கே என்னைக் கொண்டுபோய் சேர்ப்பியா?'

'ஐயோ மாஸ்டர், எண்ட மனிசியை கிளினிக்குக்கு கூட்டிக்கொண்டு வந்தனான். எனக்கு இவளை விட்டிட்டு வாறது கொஞ்சம் கஸ்டம். இந்த நேரத்தில உதவிசெய்யவும்தான் வேணும்... வேணுமெண்டால் நான் இப்படிச் செய்யிறன். பக்கத்தில தமிழ்க்கடை ஒண்டு இருக்கு அந்த முதலாளி நமக்கு மிச்சம் பழக்கம். அவரிட்ட கொண்டு போய் விடுறன். அவர் உங்களுக்கு உதவிசெய்வார்'.

சில்வாவின் ஆலோசனையும் நல்லதாகவே பட்டது. அவனது நல்ல மனதுக்காக அவனை வாழ்த்திக் கொண்டான்.

சில்வா தன் மனைவியிடம் விசயத்தை விளக்கிவிட்டு அவளை அங்கு இருக்கும்படி சொல்லிவிட்டு அழகுமணியையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டான். 'பயபபட

வேண்டாம் மாஸ்டர் நானும் சிங்களவன் தான் நம்மோட நீங்க வாறபோது யாரும் உங்களில தொட்டுப் பார்க்கட்டும் பார்ப்போம். என் சவத்தை மிதிச்சுக்கொண்டு தான் உங்களைத்தொட முடியும்.

சில்வாவின் அந்தப் பேச்சைக்கேட்க நன்றி உணர்ச்சியால் அழகுமணியின் விழிகளில் நீர் முட்டிக் கொண்டு வந்தது. காடையர்கள் அவனை அடையாளம் கண்டார்களோ என்னவோ யாரும் எதுவித தொல்லையும் தரவில்லை. சில்வா குறிப்பிட்ட அந்த தமிழ்க்கடை முதலாளியிடம் விடயத்தை விளக்கிக் கூறினான்.

முதலாளியின் முகம் அவன் எதிர்பார்த்ததிற்கு மாறாக விகாரமாக மாறியது. மரியாதைக்குக்கூட அவனை இருக்கத்தானும் சொல்லவில்லை. வார்த்தைகள் அவரிடமிருந்து வெடிகுண்டாகக் கிளம்பின.

'நேற்று அவங்கள் உங்களைக் கொல்லாமல் விட்டது தான் எனக்குக் கவலை, சத்தியாக்கிரகம் செய்யுறாங்களாம் சத்தியாக்கிரகம். மண்ணாங்கட்டி, அவங்க பெரும்பான்மையாய் இருக்கிறவங்க, அவங்கட மொழிக்கு இனத்துக்கு முக்கியத்துவம் குடுக்கத்தான் நிற்பாங்க. அவங்களோட அனுசரிச்சுப்போய் நாங்கள் வாழப்பார்க்காமல் போராடினால் முடியுமா? உங்களைப்போல மடத்தனமாய் வேலை செய்யிறவங்களால எங்களைப்போல சமாதானமாய் ஒற்றுமையாய் வாழுறவங்களுக்கு நிம்மதியில்லாமல் கிடக்கு, போராட வந்திட்டாங்களாம் போராட. இப்ப எங்க போயிற்றுங்க உங்க வீரர்கள் தலைவர்கள் எல்லாம் குழப்பக்காரங்கள். உங்களுக்கு உதவிசெய்யிறது துரோகம் போப்பா போ...

அழகுமணி அவமானத்தால் குன்றிப்போனான். அவனால் எதுவும் பேசமுடியவில்லை. 'உங்கட அறிவுரைக்கு நன்றி'

என்று கூறிவிட்டு விறுவிறு என்று வெளியே வந்துவிட்டான். சில்வாவின் முகத்தை நிமிர்ந்துபார்க்கவே கூச்சமாக இருந்தது. ஒரு சிங்களவனின் முன்னால்வைத்து ஒரு தமிழன் பேசுகின்ற பேச்சுக்களா அவை. அழகுமணியின் மனநிலையைப் புரிந்துகொண்டவன் போல சில்வா பேசினான். "நீங்க கவலைப்படாதீங்க மாஸ்டர். அந்த ஆள் மூளை இல்லாமல் பேசுறார். ஆபத்தில் இருக்கிற மனுசனுக்கு உதவி செய்ய வேண்டிய நேரத்தில் அவர் நியாயம் பேசுறார். நானே உங்களை ஹல்ஸ்ரப்பில கொண்டுபோய் விடுறன்."

அவனே வாடகைக்கார் ஒன்றை அமர்த்திக்கொண்டு ஹல்ஸ்ரப் நோக்கி விரைந்தான். வாடகைக்கார் விரைந்து கொண்டிருந்தபோது சில்வா சொன்ன வார்த்தைகள் நூற்றுக்குநூறு உண்மையானவை.

"மாஸ்டர் உங்கடை தெமிளங்களுக்கு நம்மட ஆட்கள் கரைச்சல் தாறதுக்கு நம்மட ஆட்கள் மட்டும்தான் காரணமில்ல. இந்த முதலாளி போல ஆட்கள்தான் உங்கட இனத்துக்கு விரோதிகள், ஆபத்தானவங்கள்."

சில்வாவின் அந்தக் கருத்துக்கு எதிர்க்கருத்துச் சொல்ல அழகுமணியால் முடியவில்லை. அவன் கூறியது உண்மை. ஒரு தமிழன் தன் இனத்தையே மதிக்காமல் பேசும்போது ஒரு பிற இனத்தவன் தன் எதிரிகள் என்று கருதப்படும் இனத்தவனுக்காக பரிந்து பேசுகின்ற நன்மனதைக்கண்டு வியந்தான். "சிங்களவர்கள்தான் சிங்கள மொழியையும் கலாச்சாரத்தையும் காப்பாற்ற வேண்டும்" என்று ஒரு காலத்தில் சிங்களவர்களுக்கு மொழிப்பற்றையும், இனப் பற்றையும் ஊக்குவித்த தமிழன் சேர் பொன்னம்பலம் இராமநாதனது நிலைக்கு அந்தக் கணத்தில் அவன் கண்களுக்கு உயர்ந்து நின்றான்...

புகைவண்டி கல்லோயா சந்தியை வந்தடைந்தது. மட்டக்களப்பில் இருந்து திருகோணமலைக்குப் போகவந்த பிரயாணிகள் வண்டியில் முண்டியடித்துக்கொண்டு ஏறினர் புகையிரத நிலைய மேடையை எட்டிப்பார்த்தபோது அழகுமணியின் கண்களுக்கு அவன் தெரிந்தான். அவனும் திருகோணமலைக்குச் செல்வதற்காக இடமுள்ள பெட்டியாக தேடித்திரிகின்றான் என்பதைக் கண்டுகொண்ட அழகுமணி அவனது பெயரைச் சொல்லி அழைத்தான். அவனும் வந்தான். தனக்குப் பக்கத்தில் அவனுக்கு இடம் கொடுத்தான்.

அவனும் திருகோணமலையைச் சேர்ந்தவன்தான். பாடசாலை நண்பன். அவன்தான் தொடர்ந்து அவன் வாழ்வின் மாற்றத்துக்கு காரணமாக இருக்கப்போகின்றவன்.



# பயணம் தொடர்கின்றது

## அத்தியாயம் 8

"இது பொறுப்பதில்லை தம்பி
எரிதழல் கொண்டு வா"

— பாரதியார்

கமலநாதனின் போக்கே தனியானது. பாடசாலை நாட்களில் இருந்தே அவனது போக்கை அழகுமணி நன்கு அறிவான். எதிலும் நிதானமாக நடந்துகொள்ளும் சுபாவமுள்ளவன். தனக்குச் சரியெனப்பட்டதை எடுத்துக் கூறுவதிலும் அதற்காகப் பாடுபடுவதிலும் சளைக்காதவன். படிப்பில் கூட முன்னணியில் திகழ்ந்தவன். அதனால் அதிபர் முதற்கொண்டு ஆசிரியர், மாணவர்களிடையே மதிப்பையும் செல்வாக்கையும் பெற்றிருந்தவன்.

தனக்கு மூத்தவள் ஒருத்தியையும் இளைய பெண்கள் இருவரையும் தனது சுய முயற்சியாலேயே அவர்களுக்கு நல்வாழ்வைத் தேடிக்கொடுத்த பொறுப்புணர்ச்சி மிக்கவன். தன் சகோதரிகளுக்குச் சீதனம் கொடுக்காது எப்படி நல்வாழ்வைத் தேடிக்கொடுத்தானே அப்படியே ஓர் அனாதைப் பெண்ணுக்குத் தான் வாழ்வளிக்க வேண்டும் என்ற இலட்சியத்தோடு உள்ளவன். இப்பொழுது பொலநறுவையிலே நீர்ப்பாசன இலாகாவில் வேலை பார்த்துக் கொண்டிருந்தான்.

தனது பிரயாணத்தில் பேச்சுத்துணைக்குக் கமலநாதன் கிடைத்ததையிட்டு அழகுமணிக்கு மகிழ்ச்சி. மாமூலான ஆரம்ப உரையாடல்களின் பின்னர் அவர்கள் பேச்சு அரசியலுக்குத் திரும்பியது.

''என்ன ஐந்தாம் திகதி பாராளுமன்றத்திலே அமிர்தலிங்கம் விளாசித் தள்ளிவிட்டாராமே'' என்று கமலநாதன்தான் ஆரம்பித்தான்.

''உண்மைதான் கமலன், அந்த மனுசனுக்குச் சோதனை மேல் சோதனை. அவர் சத்தியாக்கிரகத்துக்கு என்று இங்கே

வந்த நேரம்பாத்து அவருடைய மனைவி தலைப்பிரசவத்துக்காக வவத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறுவாம். சிசேரியன் ஒப்பறேசன் செய்யவேண்டிய கேசாம்.''

கமலநாதன் இதைக் கேட்டு உண்மையிலேயே இரக்கப்பட்டான். பொது வாழ்வுக்கு என்று ஒருவன் தன்னை அர்ப்பணித்துவிட்டால் அவனுக்குக் குடும்பம் ஏது? அழகுமணி தொடர்ந்தான்.

''என்றாலும் அடங்காத் தமிழன் சுந்தரலிங்கம் பாராட்டப்பட வேண்டியவர்தான். சத்தியாக்கிரகம் நடந்த இடத்துக்குச் சுந்தரலிங்கம் தனது வாகனத்தில் வந்து இறங்கினதும் அந்தக் காடைக்கூட்டம் வந்து சூழ்ந்துகொண்டது. மனிசன் தனது வாகனத்தில் இருந்த இரும்புக் கம்பியை எடுத்துச் சத்தம் போட்டார் பாரு... அஹிம்சைப் போரில இருந்த எங்களுக்கே அந்தக் காட்சி தனி வீரத்தைத் தந்தது. அமிர்தலிங்கத்துக்கு மண்டை பிளந்தபோது கூட சுந்தரலிங்கம்தான் உடனே தன் கைக்குட்டையால் அமிர்தலிங்கத்தின் தலைக்குக் கட்டுப் போட்டு இரத்தப் பெருக்கை நிற்பாட்டினுர்.''

அழகுமணியின் நேரடி அனுபவங்களைக் கேட்கக்கேட்க கமலநாதனுக்கு ஆச்சரியமாகவும் ஆவலாகவும் இருந்தது. தொடர்ந்து சொல்லும்படி அவனே கேள்வி கேட்டுத் தூண்டிக்கொண்டிருந்தான். அழகுமணியும் ஆவலோடு கூறிக்கொண்டே வந்தான்.

''பிறகு சுந்தரலிங்கம் தான் அமிர்தலிங்கத்தை தன்னுடைய திறந்த ஜீப்பில ஏற்றிக்கொண்டு பாராளுமன்றத்துக்குப்போனுர். இரண்டு இந்தியத் தமிழ்த் தொண்டர்கள் அவர்களுக்குப் பாதுகாப்பாக ஜீப்பில் இருந்துகொண்டே குண்டர்கள் வீசிய கற்களைத் தடுத்துக் கொண்டிருந்தார்கள். அப்படியிருந்தும் பிறகும் ஒரு கல்லு அமிர்தலிங்கத்தின்

தலையில் பட்டுவிட்டது. பலமான அடி. இரத்தம் மேலும் கட்டுப்படாமல் ஓடியது. எனவே அந்த நிலையில் பாராளு மன்றம் செல்லுறது சாத்தியமில்லை என்று கண்டு சுந்தர லிங்கம் ஜீப்பைத் தனது வீட்டுக்கே ஓட்டிச்சென்று தலைக் குக் கட்டுப்போட்டார். பிறகு அங்கே இருந்து சபாநாய கர் இஸ்மாயிலுக்கு தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு அவர் பொலிசாரோடு பாதுகாப்பு வண்டி அனுப்பித்தான் அமிர்தலிங்கம் பாராளுமன்றம் போனார்''

''பாராளுமன்றத்துக்கு போறபோதும் இரத்தக்கறை பட்ட அதே உடுப்புகளோடதானே போனாராம்?''

''ஓம், அப்படித்தான் போனார். இரத்தம் கசியக்கசியப் போட்டிருந்த தலைக் கட்டோடையும், இரத்தம் தோய்ந்த உடுப்போடையும் பாராளுமன்றத்துக்குள்ளே போனதும் சபையே வியந்து அதிர்ந்து போயிற்றாம். பண்டாரநாயக்கா என்ன சொன்னாராம் தெரியுமா? 'Honourable wounds of war' என்று ஏளனமாகச் சொன்னாராம். உண்மையிலேயே அவை யுத்த களத்தின் விழுப்புண்கள்தானே.''

''சபையில் இருந்த மற்றவர்கள் ஒன்றும் சொல்ல வில்லையாமா?''

''பண்டாராநாயக்காவின் கேலிப் பேச்சுக்கு மற்றவர் களும் ஆதரவு கொடுப்பார்கள் என்றுதான் நினைத்திருப் பார். ஆனால் சபை முழுவதுமே அமிர்தலிங்கத்துக்காக வருந்திக் கொண்டிருந்ததாம். அந்த விஷயத்தில் அது அவ ருக்குத் தோல்வி.''

"இன்னுமொரு விஷயம், சத்தியாக்கிரகிகள் எதை விரும்பினார்களோ அதை என் மக்கள் கொடுக்கிறார்கள் என்று காடையர்கள் சத்தியாக்கிரகிகளைத் தாக்கினபோது பண்டாரநாயக்கா சொன்னாராமே அது உண்மையாயிருக் குமோ?''

"இதய உணர்வு இல்லாமல் அப்படிச் சொல்லியிருக்கமாட்டார் என்றுதான் நான் முதலில் நினைத்தேன். ஆனால் நேற்று (ஆறும் திகதி) பாராளுமன்றத்தில் வன்னியசிங்கம் பேசினபோது அவர் இடைமறித்து என்ன சொல்லியிருக்கிறார். 'அங்கு நடைபெற்ற சம்பவங்களையே உண்மையில் நீங்கள் விரும்பினீர்கள். அதனையே நீங்கள் எதிர்பார்த்தீர்கள்' அதற்காகவே காத்துக்கிடந்தீர்கள், என்று இப்படிப் பாராளுமன்றத்திலேயே பகிரங்கமாகக் கூறின மனிதன் தனிமையில் அப்படிக் கூறிச்சந்தோஷப்பட்டிருக்கமாட்டார் என்று எப்படி நம்புவது'

அழகுமணியின் இந்த வினவுக்குப் பின்னர் இருவரும் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொள்ளவில்லை. சிறிது நேரம் அவர்களிடையே அமைதி நிலவியது. ஆனால் அவர்களது உள்ளங்கள் இனத்தின் தலைவிதியை எண்ணி அழுதன. தொடர்ந்து இருவரும் அரசியலே பேசப் பிடிக்காதவர்களாகப் பேச்சைத் திசை திருப்பிக் கொண்டனர்.

"அழகு! உன்னுடைய இலட்சியமும் போராட்டமும் தவறென்று சொல்லவில்லை, சரியானதுதான். ஆனால் என்னால் உன்னைப்போல அரசியலுக்காக வாழ முடியவில்லை. ஏனெனில் என்னுடைய வட்டம் மிகச் சிறியது. குடும்பம் என்ற வட்டத்துக்குள் என்னுடைய போராட்டம் அடங்கிற்று. அப்பா இல்லாத நிலையில் அம்மாவையும் என்னுடைய மூன்று சகோதரிகளையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு என்னை இப்படி ஆக்கிற்றது,,

"இப்போ அந்தப் பொறுப்பு எதுவும் உனக்கு இல்லைத் தானே?,,

,,உண்மைதான் என்னுடைய கடந்தகால வாழ்க்கை என்னை மிகச்சாதாரண மனிதனாக ஆக்கிற்றது. அழகு! இனி கடைசிக் காலம் வரைக்கும் அம்மாவைக் கண் கலங்காமல்

காப்பாற்றவேண்டும் என்ற பொறுப்புணர்ச்சியோடு அம்மாவையும் என்னையும் காப்பாற்றக் கூடிய ஒரு பெண்ணைத் தேடிக் கொண்டிருக்கின்றேன்.''

,,அப்படியென்றால் வெகுசீக்கிரத்திலேயே கலியாணச் சாப்பாடு கிடைக்கும் எண்டு சொல்லுறாய்''

,,நான் அவசரப்படயில்லை. ஆறுதலாக, நான் எப்ப டியெல்லாம் என் மனைவி அமைய வேண்டும் என்று கற் பனை பண்ணுறேனோ அந்த அம்சம் எல்லாம் அமைந்த பெண்ணைத் தேடிக் கொண்டிருக்கிறன். எனக்குச் சீத னமோ, சாதியோ, அழகோ தேவையில்லை. அவள் ஒன் றுக்கும் வழியில்லாத அனாதையாக இருந்தாலும் மனச் சந்தோஷமாக ஏற்றுக்கொள்ள ஆயத்தமா இருக்கிறேன். ஏனப்பா அழகு உனக்கும் ஏதாவது?,,

''சேச்சே, அப்படியொன்றுமில்லை. நான் கலியாணத் தைப் பற்றி இப்போதைக்குச் சிந்திக்க வேண்டாம் என்றே இருக்கிறேன்'' அத்தோடு பேச்சை முறித்துக் கொண்டான். தனது விஷயமாகப் பேச்சுத் தொடருவதை அவன் விரும்பவில்லை. அவனுக்கும் சந்திராவுக்கும் இடையே ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகள் அதற் கொரு காரணம். தூக்கம் வருவதுபோன்று பாசாங்கு செய்து கண்களை மூடிக்கொண்டான்.

அவன் நினைவெல்லாம் இப்பொழுது வீட்டை நோக் கித் திரும்பியது. சந்திராவுக்கும் அவனுக்குமிடையே நடந்த விவாதங்கள்—அவன் கொழும்புக்குப் புறப்பட்ட போது அவள் வந்து விடை தராதது, அவனும் சொல்லிக் கொள்ளாமல் வந்தது ஆகிய சம்பவங்களை அசைபோட் டது.

அவளது விருப்பத்துக்கு மாறாகவே அவன் வந்தான். இப்பொழுது அவள் அளித்த கைக்கடிகாரத்தையும்

காடையர்களிடம் பறிகொடுத்துச் செல்கிறுன். விடையளிப்பு அப்படியிருந்தது என்றால் இனி வரவேற்பு எப்படி அமையப் போகிறதோ!

அறப் போர்க்களத்தில் பட்ட விழுப்புண்ணை மறந்தான். அது உண்டாக்கிய நோவை மறந்தான். அவனது உள்ளத்தில் மீண்டும் சந்திரா வந்து உட்கார்ந்து கொண்டாள்.

இப்படி அடிபடுவதையும் வாழ்வைச் சிதைத்துக் கொள்வதையும்தானே அவள் விரும்பவில்லை. அப்படி எதுவும் நடந்துவிடக் கூடாது என்பதற்காகத்தானே அவனை சத்தியாக்கிரகத்தில் கலந்துகொள்ள வேண்டாம் என்று தடுத்தாள். அவள் எதை யெல்லாம் எதிர்பார்த்தாளோ அதுவெல்லாம் நடந்துவிட்டது. இதற்குப் பிறகு சந்திராவின் முடிவு எதுவாக இருக்கப் போகின்றது என்பதற்கு விடைகாண முயன்று குழம்பினுன். அவன் நேர்மையாக நடந்து கொண்டிருந்த போதிலும் அவளது கண்கள் முன்னால் குற்றவாளிதானே. ஒருவேளை அவனை ஒரேயடியாய் வெறுத்து விடுவாளோ?

அப்படி எண்ணிப் பார்க்கவே அவனுக்குக் கலக்கமாக இருந்தது. அதன் பின் அவன் நிலை என்ன? அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

புகைவண்டியும் திருகோணமலை நிலையத்தை வந்தடைந்தது.



# பயணம் தொடர்கின்றது

## அத்தியாயம் 9

மோகத்தைக் கொன்றுவிடு அல்லாலெந்தன்
மூச்சை நிறுத்திவிடு.

— *பாரதியார்*

புகையிரத நிலையத்தில் இருந்து வீட்டை நோக்கி வந்துகொண்டிருந்தபோது அழகுமணி பெரியதொரு பூகம் பத்தை எதிர்பார்த்துக் கொண்டுதான் வந்தான். கட்டுப் போட்டிருந்த தனது கையை அடிக்கடி தொட்டுப்பார்த் துக்கொண்டான். தாலி இழந்தவளின் கழுத்துப்போல சந்திராவின் அன்பளிப்பான கடிகாரத்தை இழந்த அவன் கை தோற்றமளித்தது. அறப்போருக்குப் போவதையே விரும்பாத அவள், அவள் அளித்த அன்புப் பரிசையும் இழந்துவரும் அவனுக்குக் கொடுக்கப்போகின்ற வரவேற்பை எண்ணிக் கலங்கினன். முடிந்த அளவுக்கு சந்திராவின் கண்களில் படாமலே இருக்க வேண்டும் என்றே நினைத் தான். ஆனல் அவன் நினைப்பதற்கு எதிர்மாருகத்தானே எல்லாம் நடந்துவிடுகிறது.

அவனது வரவையே எதிர்பார்த்துக் கொண்டு நிற்ப வள்போல சந்திரா முற்றத்திலே நின்ருள். அவளை முற்றத் திலே முதன்முதலில் கண்ட அதிர்ச்சியைவிட, சந்திரா புன்னகையுடன் "வாங்கோ இப்பதான் வாறீங்களா?" என்று வரவேற்றது இரட்டை அதிர்ச்சியைக் கொடுத்தது. தொடர்ந்து அவளது போக்கும் உபசரிப்பும் அவனுக்கு மட்டுமல்ல பவளத்துக்கும் வியப்பையே அளித்தது.

சத்தியாக்கிரகப் போராட்டத்தைப் பற்றியும் அங்கு நடந்தவைபற்றியும ஆவலோடு கேட்டு அறிந்துகொண் டாள். ஒரு கை இயலாத நிலையில் அவனுக்கு உதவியாக நின்று பணிசெய்தாள். அவளது உபசரிப்பில் அவன் மனம் குளிர்ந்தேபோனுன். ஆனல் பேரிடி மழைக்கு முன்னர் சில் லென்று வீசுகின்ற காற்றின் குளிர்மையது. அந்தக் குளிர் மையைத் தொடர்ந்து பிரளயமாக மழை பொழியவிருந்தது.

சந்திராவில் ஏற்பட்டிருந்த மாற்றத்தின் பொருள் மறு நாட் காலையில்தான் அவனுக்குப்புரிந்தது.

“சந்திரா, நான் சத்தியாக்கிரகத்தில கலந்துகொண்டதுபற்றி உனக்கு என்மேல் இப்போது கோபமில்லைத் தானே?'' என்று அவன் கேட்டபோதுதான் அவள் தனது திட்டத்தை அவன்முன் போட்டுடைத்து அவனைத் திகைக்கவைத்தாள்.

''இல்லை அழகு. நீங்க போனதுக்குப்பிறகு சிந்தித்தேன் அட்போதான் நான் செய்தது, நடந்துகொண்டது எல்லாம் தவறு என்று உணர்ந்தேன் ..''

''அப்பாடா இப்பொழுதெண்டாலும் உனக்குப் புத்தி வந்ததே.''

''உண்மைதான் ஒருவருடைய மனச்சாட்சியின்படி அவர் சரியெனக்கண்டு. அதையே அவர் தனது இலட்சியமாகவும், புனிதப் பணியாகவும் கொண்டு செயல்படுற போது அதற்கு மற்றவர் தடையாய் இருக்கிறது மிகவும் அற்பத்தனமானது இல்லையா?''

''அந்த அளவுக்கு உனக்குத் தெளிவு வந்திற்று! மிகவும் நல்லதாய்ப் போச்சு.''

''ஆனல், எனக்கு ஏற்பட்ட அளவுக்குத் தெளிவும், மனமாற்றமும் உங்களுக்கும் ஏற்படவேண்டும் என்பதுதான் என்னுடைய பிரார்த்தனை... என்ன புரியல்லையா?''

''இல்லை சந்திரா, நீ ஏதோ புதிர் போடுறாய்...''

''விளக்கமாகச் சொல்லுறன் கேளுங்க. உங்களுடைய இலட்சியங்கள், கனவுகள்,ஆசைகள் எல்லாம் உயர்ந்தவை, புனிதமானவை என்று உணர்ந்து உங்கட வழியில் குறுக்கே நிற்கக்கூடாது என்று நான் விலகிக்கொள்ளுறன். அதே போல என்னுடைய ஆசைகளும், கனவுகளும், விருப்பங்களும் என்மட்டில் உயர்ந்தவை என்று கருதி என் பாதையில் நின்று நீங்களும் விலகிக்கொள்ளவேணும் என்றது தான் என்னுடைய கோரிக்கை.''

''சந்திரா!''

''ஏன்? நான் பேசுறது உங்களுக்கு ஆச்சரியமாய் இருக்கா. நான் சொல்லுறதில என்ன தவறு இருக்கு? உங்கள் விஷயத்தில நீங்க சுதந்திரமாக முடிவு எடுக்க இருக்கிற உரிமை என் விஷயத்தில் நான் எடுக்க இருக்கக்கூடாதா? இல்லாட்டி இதுவரையில் நீங்களும், உங்கட குடும்பமும் என்மேல் காட்டின அன்புக்கும், செய்த உதவிகளுக்குமாக நான் உங்கள் வீட்டில ஆயுள் தண்டனைக் கைதியாகவே இருக்கவேணும் என்று விரும்புறீங்களா?

''சந்திரா நீ என்ன பேசுருய். இதுவரையில எங்களில யாரும் உன்னைப்பற்றி அப்படி நினைச்சிருக்கிருங்களா?''

''அம்மாவை நான் சொல்லேல்ல, நீங்க அப்படி நினைக் கேல்லையா?''

''உண்மையாகச் சொல்லு நான் உன்னை அப்படியா நினைக்கிறன்.''

''நான் உங்களுக்கு வாழ்க்கைப்பட வேணும் என்று நீங்க நினைக்கேல்ல?''

''அது தவரு? அதில உனக்கும் சம்மதம் தானே?''

''நினைக்கிறதுக்கும், தீர்மானிக்கிறதுக்கும் வித்தியாச மிருக்கு அழகு. நினைக்கிறது தவறு இல்ல. தீர்மானிக்கிறது தான் தவறு. நான் உங்களுக்கு நிரந்தரமாகவே அடிமை யாக வேணும் என்று நீங்க தீர்மானிச்சிட்டீங்க...''

''சந்திரா என் காதுகளையே என்னல் நம்ப முடியாமல் இருக்கு... நீ தாஞ இப்படிப் பேசுருய். வாழ்விலும் சாவி லும் என்னோட இணையவேண்டும் என்று சொன்ன நீதாஞ இப்பிடிப் பேசுருய்.''

''நான் இல்லையென்று சொல்லேல்ல அழகு. இணைப்பு என்பது இரண்டுபேரும் சேர்ந்துகொண்டால்தான் ஏற்படும்.

அந்த இணைப்புக்கு இரண்டுபேரிடமும் இசைவு இருக்க வேணும் ஆனல் இரண்டு பேரும் வெவ்வேறுதிசைகளுக்குத் திரும்பினதற்கு பிறகு இணைப்பு எப்படி ஏற்படமுடியும்?''

''சரி உன்னால முடியலாம். நீ இல்லாம என்னால முடியாதே.''

''அது உங்களுக்குள்ள இருக்கிற வீண் பிரமை. என்னுடைய இசைவு பெற்றுக் கொண்டுதான் சத்தியாக்கிரகத்துக்குப் போனீர்களா? என்னுடைய துணையில்லாமலே சத்தியாக்கிரகத் தியாகி என்ற உங்களுக்கு விருப்பமான விருதை நீங்க பெற்றுக் கொள்ள இல்லையா? நான் காதலிக்கிறது அழகு என்ற அற்புதக் கலைஞனை - அரசியல் போராளி என்ற இன்னுமொருவன் அவரோடு கலக்கிறதை நான் அனுமதிக்கமுடியாது. என்னைவிட உங்களுக்கு அரசியல் இல்லாமல் வாழ முடியாது என்று நீங்க எப்போ தீர்மானிச்சீங்களோ அப்பொழுதே உங்கட இதயத்தில நான் முழுமையாக இல்லை என்பது தெளிவாயிற்று. முழுமையான அன்பை, உரிமையை உங்களிடமிருந்து எதிர்பார்க்க முடியாத நான் உங்களுக்கு வாழ்க்கைப் படுறது என்பது எனக்கு அடிமைச்சீட்டு எழுதிக்கொள்ளுறது என்பதுதான். அத்தகைய அடிமையாக வாழ நான் விருப்பேல்ல.''

''சரி, கடைசியாக நீ என்னதான் சொல்லுகிறுய்?''

''இதுவரை சொன்ன விளக்கங்களைவிடத் தெளிவாக நான் சொல்லவேண்டியதில்லை. அழகு, உங்கள் பாதை வேறு, என் பாதை வேறு. உங்களுக்கு மனைவியாக இல்லாமலே உங்கள் ரசிகையா என்னால இருக்கமுடியும். ஆனல் நான் உங்களுக்கு மனைவியாக இருந்தால் உங்களால் அரசியல் போராளியாக இருக்கமுடியாது. அதற்கு நான் அனுமதிக்க மாட்டேன். உங்களுடைய போராட்டம் ஒரு மனைவியோட நடக்கிற போராட்டமாக அமைய வேண்டாம். எனக்கு வேண்டியது, அன்பான கணவன், அமைதியான

வாழ்க்கை. உங்களிடம் அன்பைத் தரமுடியுமே தவிர அமைதியைத்தர முடியாது. எனவேதான் கேக்கிறன் தயவு செய்து என்னை என்வழியில் போகவிடுங்க...'

சந்திராவின் இந்த முடிவு அழகுமணிக்கு மட்டுமல்ல பவளத்துக்கும் பெரும் கலக்கத்தைக் கொடுத்தது. நான் இல்லாத காலத்தில் அழகுவுக்குத் தாயாகவும், மனைவியாவும் விளங்கக் கூடியவள் சந்திரா என்று அவள் கட்டி வைத்திருந்த மனக்கோட்டைகள் சரிந்து விழுந்துவிட்டன. அழகுவின் சத்தியாக்கிரகப்போராட்டப் பயணம் அவளுக்கு ஆத்திரத்தையூட்டியிருந்தது என்று அவள் அறிவாள். ஆனால் இப்படியானதொரு விபரீத முடிவுக்கு வந்து நிற்பாள் என்று எண்ணிக்கூடப் பார்க்கவில்லை. கொழும்பில் இருந்து அழகு வந்தபோது அவள் இன்முகம் காட்டி வரவேற்றதைக்கண்டு மகிழ்ந்த பவளம் பிரச்சினை தீர்ந்துவிட்டது என்றே நினைத்தாள். ஆனால் அவளது சிரித்த முகத்தின் பின்னே இப்படியொரு எரியீட்டியை மறைத்துவைத்துள்ளது இப்பொழுதே புரிந்தது.

சந்திராவின் முடிவினை அடுத்து அழகு படும் வேதனையைத் தாங்கமாட்டாதவளாகத் தானே நேரடியாக விசாரித்து இருவரையும் சமாதானப்படுத்துவது என்று தீர்மானித்தாள். சந்திரா அந்தக் குடும்பத்தில் ஒருத்தியாக வந்து சேர்ந்த காலம்தொட்டு பெற்ற பிள்ளையாகவே கருதும் அவளது பேச்சைத்தட்டமாட்டாள் என்ற நம்பிக்கை அவளுக்கு இருந்தது. ஆனால், சந்திராவின் முடிவும், அவள் சொன்ன காரணமும் அவளையும் வாய்மூடச் செய்தது.

''அம்மா! நான் உங்களிடம் வந்த காலம் தொட்டு உங்கள் பிள்ளையைப்போல என்னை வளர்த்து வாறீங்க .. அந்த நன்றிக்காக ஆயுள் முழுவதும் உங்களுக்குக் கடமைப் பட்டவள் நான். ஆனால் என்னை வளர்த்த பிள்ளையாக இல்லாமல் பெற்ற பிள்ளையாக நினைச்சுப்பாருங்க அம்மா!

உங்கட சொந்தப் பெண்ணுக இருந்தால் உங்கட மகன் போல உள்ள ஒருவருக்கு மனச்சந்தோஷமா கட்டிவைப்பீங்களா? சத்தியாக்கிரகப் போராட்டத்துக்குப் போய்வந்த அவர் இந்தமுறை கைமுறிவோட வந்துசேர்ந்தார். நான் என்னை ஒறுத்து அன்போட வாங்கிக்கொடுத்த என் நினைவுச்சின்னமான மணிக்கூட்டையே பறிகொடுத்திட்டு வந்து நிற்கிறார். இது அவர் என்னுடைய நினைவுகளையே துறந்த மாதிரி தானே. ஒருவேளை இந்தமுறை அவருடைய உயிருக்கு ஏதாச்சும் நடந்திருந்தால் நிலைமையை எண்ணிப் பாருங்க. சரி உங்க விருப்பப்படியே நான் அவருக்குக் கழுத்தை நீட்டுறது என்று வைச்சுக்கொள்ளுங்க. போராட்டம் என்றால் உங்க பிள்ளை சும்மா இருக்கப்போறதில்லை. நீங்களும் அவரைத் தடுக்கப்போறதில்லை. நான் தடுத்தால் அவர் நிற்கப்போறதுமில்லை. அந்த நேரத்தில நடக்கக் கூடாதது ஏதும் நடந்தால் நான் தாலி அறுந்தவளாக மீண்டும் உங்களுக்குச் சுமையாநிற்கிறதை விரும்புறீங்களா? நீங்க என்னை வளர்த்து, படிப்பிச்சு ஆளாக்கினது இப்படி ஒரு தண்டனையைத் தரத்தானு... அதுதான் உங்க விருப்பமென்றுல் சொல்லுங்க? உங்க விருப்பத்துக்காக, நீங்க என்னை வளர்த்து ஆளாக்கின நன்றிக்கடனுக்காக... நான் உங்க பிள்ளைக்கு வாழ்க்கைப்படுறன்''...

சந்திரா சொல்லிக்கொண்டே போனுள். ஆணித்தரமான அவளது விவாதம் அவளையே குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி குறுக்கு விசாரணை செய்வதாக இருந்தது... அவளால் பதில் பேச முடியவில்லை...

சந்திராவின் கருத்துகள் பவளத்தை மட்டுமல்ல அழகுமணியையும் சிந்திக்க வைத்தது. இனி அடுத்த கட்டமென்ன என்று சிந்தித்தான், முடிவுக்கும் வந்துவிட்டான். அவனது திட்டத்தை சந்திராவுக்கும் பவளத்துக்கும் விளக்கியபோது !

''சந்திரா உன்னுடையவும் என்னுடையவும் நல்வாழ்வுக்காக நான் நல்ல முடிவுக்கு வந்துவிட்டேன்...?'' என்ற பீடிகையோடு ஆரம்பித்தபோது...!

என்ன முடிவு? அவளுக்காக அவன் அரசியலைத்துறக்க தீர்மானித்து விட்டானு? அந்தக் கற்பனையில் அவள் மனம் அந்தரத்தில் பறந்தது......

நாவண்ணன்



# பயணம் தொடர்கின்றது

## அத்தியாயம் 10

பந்தத்தை நீக்கிவிடு - அல்லாலுயிர்
பாரத்தைப் போக்கிவிடு.

— பாரதியார்

ஓட்டப்பந்தயத்தில் முதலாவதாக ஓடிவந்தவன் எல்லையை நெருங்கும் போது இடறி விழுந்தது போலாயிற்று அழகுமணியின் காதல். அந்தத் தோல்வியைத் தாங்கிக் கொள்ளும் மனவலிமை அவனுக்கு ஏற்பட்டதுபற்றி அவனுக்கு வியப்பாகவே இருந்தது.

மலையகத்திலே சுதந்திரமற்றவர்களாகவும் தோட்ட முதலாளிகளுக்கு கூலிகளாகவும் வாழும் மக்களை முன்னேற்றும் நல்ல நோக்கோடு தமிழர் வாழுகின்ற ஏனைய பிரதேசங்களுக்கு அழைத்தால் —'நாங்கள் மலையகத்தில் அடிமைகளாய் வாழ்ந்தது போதாது என்று உங்கள் பகுதிகளுக்கும் வந்து உங்களுக்கு அடிமைகளாய் வாழச் சொல்கின்றீர்களா?' என்று அவர்கள் கேட்பதுண்டு. கேட்காவிட்டாலும் எண்ணுவதுண்டு.

இத்தகைய மனப்பான்மை சாதாரணமான ஒரு மலையகப் பெண்ணுக்கோ ஆணுக்கோ இருப்பதில் வியப்பில்லை. ஆனல் முழுக்கமுழுக்கக் கிழக்கின் ஒரு பெண்ணுகவே மாறிவிட்ட சந்திராவுக்கு ஏற்பட்டது ஆச்சரியமானதே.

தமிழ்த் தலைவர்கள் மலையகத்து மாணவர்களை வடக்குக் கிழக்குக்கு அழைத்து வந்து அந்தப் பகுதியின் ஏனைய மாணவர்கள் போன்று கல்வி அறிவு பெறுவதற்கு ஒழுங்கு செய்கின்றார்கள். அவர்கள் இப்பொழுது நினைத்த இதே பணியை அழகுமணியின் தந்தை எப்பொழுதோ நினைத்து செயல்பட்டதால் அன்றோ சந்திரா இன்று கிழக்கு மாகாணத்தின் படித்த ஒரு பெண்ணுகவே பரிணமித்துள்ளாள். அப்படியிருந்தும் அவளிடமிருந்து தன்னை அடிமைகொள்ள

நினைக்கின்றார்கள் என்ற பொருளில் எழுந்த வார்த்தைகள், சாதாரணமான ஒரு பெண்ணினும் கீழ் நிலைக்கு அவள் இறங்கி விட்டதாகவே அவனை எண்ணவைத்தது.

அவனிடமிருந்து அவள் விரும்புவது கவிதை எனும் ஒரே ஓர் அம்சத்தைத்தான் என்பதை அவள் தெளிவாகக் கூறியதன் பின்னர் அந்த ஒரே காரணத்துக்காக அவள் இணையவேண்டும் என்று எதிர்பார்ப்பதில் என்ன நியாயம் இருக்கமுடியும்? அவனது கவிதைகளைப் பாராட்டி எத்தனையோ பெண்கள் கடிதம் எழுதுகிறார்களே. அவர்கள் எல்லாம் அவன் இரசிகைகள் என்பதற்காக எல்லோரும் தன்னைக் காதலிக்கிறார்கள் என்று கருதமுடியுமா? அவர்களைப் போன்று, அவர்களில் இவளும் ஒருத்தி. எனவே சந்திராவின் வாழ்க்கையில் குறுக்கே நிற்கக்கூடாது. அவளுக்கு வேண்டியது அமைதியான வாழ்க்கை. அந்த வாழ்க்கையை அவனால் அவளுக்கு அளிக்கமுடியாது என்ற நிலையில் அவனாக விலகிவிடுவதே தன் ஆண்மைக்கு அழகு என்ற முடிவுக்கு வந்தவனாகச் சந்திராவிடமும் பவளத்திடமும் தனது முடிவை வெளியிட்டான்.

''சந்திரா உன்னுடையவும், என்னுடையவும் நல்வாழ்வுக்காக நான் நல்ல முடிவுக்கு வந்துவிட்டேன். என்னுடைய சுயநலத்துக்காக உன்னுடைய எதிர்ப்பார்ப்புகளையும், வாழ்க்கையையும் நான் சிதைக்க விரும்பேல்ல. நீ எப்படி நல்வாழ்க்கையை அடைய வேண்டும் என்றதில உறுதியாக இருக்கிறாயோ அதேபோல என்னுடைய இலட்சியத்தில் நான் உறுதியாக இருக்கிறேன். அதனால உனக்குப் பொருத்தமான கணவனைத் தேடி எடுக்கிறதில இன்று முதல் நான் முயற்சி எடுக்கப்போறன். நீ விரும்பிய வாழ்வை என்னாலதான் தரமுடியாவிட்டாலும் நிட்சயமாக நான் உனக்குத் தேடித்தரும் கணவனிடமிருந்து அது கிடைக்கும்''

சந்திராவும், பவளமும் வாயடைத்துப்போயினர். தன்னுடைய தீவிர எதிர்பார்ப்பால் ஒருவேளை அழகு தனது போக்கை மாற்றிவிடக்கூடும் என்ற அடிமனத்தில் வைத்திருந்த அற்ப நம்பிக்கையையும் அவள் இழந்துவிட்டாள். அவளைவிட்டு அவன் விலகிவிடப்போவதை உறுதியாகக் கூறியதன் பின்னர் அவளால் அந்த இடத்தில் நிற்கவும் முடியவில்லை. வாய்விட்டு அழவேண்டும் போல் இருந்தது.

அவனைவிட்டு விலகி விடுவது என்று தான் முடிவு எடுத்தபோதும் அதனை அவனிடம் கூறியபோதும் அவளுக்கு இருந்த மனோபலம் அதே வார்த்தைகளை அவன் கூறியபோது இல்லை. அவளால் தாங்கிக் கொள்ள முடியாமல் இருந்தது... அப்படியானால் அவள் இதயத்தால் அவனை வெறுக்கவில்லையா... எடுத்த முடிவுகளும், கூறிய வார்த்தைகளும் போலியானவையா... இந்தப் பெலவீனத்தின் பெயர் தான் பெண்ணுள்ளமா. 'அழகு எனக்காக உங்கள் வாழ்க்கையை மாற்றி அமைத்து எனக்கு வாழ்வு தர மாட்டீர்களா' என்று கால்களில் விழுந்து கேட்க வேண்டும் போல் இருந்தது.. அந்த நினைவு செயலுக்கு வருமுன்னரே அவன் அந்த இடத்தை விட்டுப் போய்விட்டான். வெளிக்கதவைத் திறந்து வீதியிலே போய்க்கொண்டிருப்பதையே அவளால் காணமுடிந்தது.

அப்பொழுது அழகுமணிக்குத் தேவைப்பட்டது அமைதியான ஒரு சூழல். சந்திராவோடு பேசியதில் இழந்துவிட்ட அமைதியை ஏதோ ஒரு தனிமையான சூழலிற்போய் அமர்ந்தாலே பெறமுடியும் என நினைத்தான். அவனது கட்டுப்பாடில்லாமலே கால்கள் நடைபோட்டுக் கொண்டிருந்தன. அவன் சென்றுகொண்டிருந்த இடம் கோணேசர் மலை.

காதலர்களின் பிரச்சினையை அந்தக் கோணேசர் பெருமான் எந்த அளவுக்குத் தீர்த்துவைக்கிறானே! ஆனல்

பல காதலர்களின் பிரச்சனைக்கு கோணேசர்மலை தீர்வு கண்டிருக்கிறது என்பது மட்டும் உண்மை.

காதலில் தோல்வி, வேலையின்மை, வறுமை, குடும்பப் பிரச்சினைகளுக்கெல்லாம் கோணேசர் மலையில் உள்ள மரணப்பாறை தீர்வுகண்டிருக்கிறது. என் பிரச்சினைக்கு நீ தான் தஞ்சம் என்று மலையில் இருந்து கடல் அன்னையின் மடியில் குதித்த பலபேரை கடலன்னை தன் மடியில் ஏற்று அலைக்கரத்தால் தாலாட்டி உறங்க வைத்திருக்கிறுள். அப்படியொரு ஆறுதலைப் பெறத்தான் அவன் அங்கு வந்தானே என எண்ணும்படியாக விருந்தது.

'இராவணன் வெட்டு' என அழைக்கப்படும் பாறைப் பிளவின் விளிம்பில் வந்து நின்றுன். அதனுள் தவறி விழுந்தாலோ - வேண்டுமென்று குதித்தாலோ எலும்புகூட மிஞ்சப் போவதில்லை. அந்த ஒரு முடிவுக்குத்தான் அவன் கால்கள் அவனை இட்டுவந்திருக்கின்றன. அவன் பார்த்துக் கொண்டிருந்தான்...இன்னும் சிறிது நேரத்தில் ஒரு கவிஞன் சிதைந்துவிடப் போகிறுன்...

சிந்தையில் ஒரு மின்வெட்டு. அவன் விழித்துக் கொண்டான். அவன் பகுத்தறிவு விழித்துக்கொண்டது.

,சே... என்ன காரியத்தைச் செய்யத் துணிந்துவிட்டான்! சந்திராதான் அவளது அறியாமையால் ஏதோ முடிவுக்கு வந்துவிட்டாள் என்றுல் அவன் செய்யத் துணிந்தது அதைவிடப் பைத்தியக்காரத்தனமான செயல் அல்லவா'

ஆயிரமாயிரம் உள்ளங்களில் தன் கவிதையால் விழிப்புணர்வை ஏற்படுத்தி இன உணர்வுக்கு வழிகாட்ட வேண்டிய அவனே நிலைதடுமாறுவதா? அவனுக்கு சந்திரா இல்லாமல் ஏற்படக்கூடிய இழப்போடு கவனிக்காமல் நாட்டுக்கு ஏற்படக்கூடிய இழப்பை ஒப்பிட்டுப்பார்க்க முடியுமா?

அவனையறியாமலே அவன் செய்யவிருந்த காரியத்தை இப்பொழுது எண்ணிப்பார்க்கவே வெட்கமாக இருந் தது. பிறப்பும் இறப்பும் ஒரு முறை தான் ஒருவன் வாழ் வில் நிகழக் கூடியது. குப்பை மேட்டில் பிறந்தவன்கூட ஓர் உயர்ந்த இலட்சியத்துக்காக உயிர் விடும் போது அவனால் இந்த உலகமே பயன்படுகின்றது. எனவே என்றோ ஒரு நாள் பிரியப்போகும் அவன் உயிர் ஏன் தன் இனத் துக்காகப் பிரியலாமே - இதே உணர்வினால் தானே அன்று வைத்தியசாலையின் வெளியே நின்ற காடையர்கள் கையில் அகப்படுவதை அவன் விரும்பவில்லை!

இந்த நினைவுகள் எழுந்து அவன் சிந்தையில் மாற் றத்தை ஏற்படுத்தவே கடமையை உணர்ந்தவனாக அருகில் இருந்த பாறையில் உட்கார்ந்துகொண்டான். அடுத்து அவன் செய்யவேண்டியது என்னவென்பதுபற்றி அவன் மனம் திட்டமிட்டது.

அவனது தாயாரும் தந்தையும் சந்திராவை மலையகத் தில் இருந்து அழைத்து வந்ததன் நோக்கம் தங்கள் வீட்டு மருமகளாக்கிக் கொள்வதற்காகவல்லவே. சமூகத்தில், கல்வி யால், கலாச்சாரத்தால், உழைப்பால், அரசியலால் ஒதுக்க படும் மலையக சமூகத்தில் ஒருவரையாவது தனது குடும்பம் முன்னுக்குக் கொண்டுவரும் பணியைச் செய்யவேண்டும் என்ற நல்லெண்ணம் ஒன்றே ஆரம்பத்தில் இருந்தது. அவளைத் தங்கள் குடும்பத்தில் ஒருவளாய் ஆக்கிக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இடையில் புகுந்ததொன்றே. அவ்வெண்ணத்துக்கு அவனே ஆதரவளிக்காத போது அவளை அதற்கு வற்புறுத்துவது எந்த விதத்தில் முறையான தாகும்? எனவே அவளுக்குப் பிடித்த அவளது அபிலாசை களை நிறைவேற்றக் கூடிய ஒரு கண்ணிறைந்த கணவனை அவளுக்குத் தேடிக்கொடுப்பதே அவன் செய்யக்கூடிய

கடமை. அவனது தந்தையார் இருந்திருந்தாலும் அதனையே செய்திருப்பார். பெற்றவனின் பணியை பிள்ளை தொடர்ந்து செய்வதுதானே கடமை.

இந்தத் தீர்மானத்துக்கு வந்ததும் அவனது மனச்சுமை குறைந்தது போலிருந்தது. ஒரு முடிவுக்கு வந்தவனாக எழுந்து நடந்தான்.

வீட்டை விட்டுக் கிளம்பியவன் நெடுநேரமாகியும் வராமல் போகவே பெண்கள் இருவரது மனங்களும் அடித்துக்கொண்டன. பெற்றமனம் அல்லவா, பிள்ளைக்காகத் துடிக்கத்தானே செய்யும்? அடிக்கடி வீதிக்குச் சென்று மகனின் வரவை எதிர்பார்க்கத் தொடங்கிவிட்டாள்.

சந்திராவின் மனமோ நிலைகொள்ளாமல் தவித்தது. போனவன் ஒருவேளை திரும்பி வராமலே போய்விட்டால்! அவளுக்கு எண்ணிப்பார்க்கவே பயங்கரமாக இருந்தது. எல்லாவற்றுக்கும் தானே காரணம் என எண்ணும்போது மனம் அமைதி அழிந்து தத்தளித்தது.

வீட்டிற்குள் சென்றவள் அவனது கவிதைகளை வெட்டி ஒட்டி தான் தயாரித்த கோவையை திறந்தாள். அவள் திறந்த பக்கத்தில் அந்தப் பாடல் - அவன் எழுதிய அந்தப்பாடல்...

அன்பிற் கினியாளே
ஆவியோ என்றனுக்கு
என்போடு ரெத்தமென
எங்கும் கலந்தவளே

அந்த அடிகளைப் படித்தபோது அப்பாடல் எழுதப்பட்ட அந்தச் சம்பவம் நினைவுக்கு வந்தது...

இந்த முதல் அடியினை எழுதும் போதே அவள் வந்து விட்டாள்,

'அழகு! யார் இந்தப் பாக்கியசாலி? உங்கள் அன்புக்கு இனியவளாய், உங்கள் உயிராய், எலும்பு, இரத்தம் எல்லாம் கலந்துவிட்ட அவள் யார்?''

''ஏன் உனக்குப் பொறுமையாய் இருக்கிறதா?''

''பின்னே இருக்காதா?''

'நீ கவலைப்படாதே, என்னைப் பொறுத்தவரை இந்தக் கவிதையில் நான் நினைத்துப் பாடுகிறவள் நீதான். இந்தக் கவிதை பத்திரிகையில் வெளியான பிறகு எத்தனைபேர் தம் காதலிகளுக்கு இதே வரிகளை எழுதப்போகிறார்களோ! ஆனால் இதனை எழுதும் முதற் கவிஞன் உன்னை நினைத்துக் கொண்டே எழுதியிருக்கிறான் போதுமா?''

இந்த வார்த்தைகளால் அவள் பூரித்துப்போனாள்... ''அழகு! எனக்கு எவ்வளவு பெருமையாக இருக்கிறது தெரியுமா?''

இந்த நினைவுகளில் திளைத்திருந்தவளுக்கு அழகு திரும்பி வந்துவிட்ட அரவமும், அவன் தாயோடு பேசுகின்ற குரலும் கேட்டது... அவன் என்ன சொல்லுகிறான் என்பதைக் காதைக் கூர்மையாக்கிக் கொண்டு கேட்டாள்.

''அம்மா... சந்திராவுக்கு நல்ல இடத்தில், அவள் விரும்புற எல்லா அம்சங்களும் பொருந்திய மாப்பிள்ளையாய் ஒழுங்கு செய்திருக்கிறேன். நாளைக்கு நல்ல நாளாம். நாளைக்கே பெண்பார்க்க வாறாங்களாம்...''

சந்திரா சிலையானாள்... கையில் இருந்த கவிதைக் கோவை நழுவி விழுந்தது...

● நாவண்ணன்



# பயணம் தொடக்கின்றது

## அத்தியாயம் 11

எல்லையற்ற இன்பம் - நெஞ்சே
ஏனோ இன்னும் துன்பம்.

— *பாரதிதாசன்.*

சந்திராவுக்கு எல்லாம் கனவுபோல் தோன்றியது. விடிந்தால் திருமணம்! இவ்வளவு சீக்கிரத்தில் தனக்குத் திருமணம் நடைபெறும் என்றோ, அதுவும் தான் முன் பின் அறிந்திராத ஒருவருக்கு வாழ்க்கைப்படவேண்டும் என்றோ அவள கனவுகூடக் கண்டதில்லை.

அழகு மணமகனை ஏற்பாடு செய்துவிட்டு வந்து அறிவித்த போதும், அதைத் தொடர்ந்து சில நாட்களும் அவள் அடைந்த கலக்கமும், துயரமும் இப்பொழுது இல்லா விட்டாலும், அழகுவுக்கு மனைவியாகும் பேற்றினை தான் இழந்துவிட்டது பெரும் ஏமாற்றமாகவே இருந்தது.

அழகு தன் போக்கினை மாற்றாதவரை அவனோடுவாழ முடியாது என்ற தீர்மானத்தை அவள்தான் முதலில் எடுத்தவளும், வெளியிட்டவளும். எனவே அழகு அவள் விருப்பப்படியே திருமண ஏற்பாட்டைச் செய்துவிட்டு அறிவித்த பொழுது மறுத்துரைக்க முடியாதவளாகத் தவித்தாள். அவன் தன் மனதைமாற்றி அவளை ஏற்றுக்கொள்ள மாட்டானா என்ற ஏக்கமும் துடிப்பும் ஆரம்பத்தில் இருந்தாலும் பின்னர் நிதானமாகச் சிந்தித்ததில் அவன் செய்த முடிவினை அப்படியே ஏற்றுக்கொள்வதே சிறந்ததெனப் பட்டது. சத்தியாக்கிரகத்தில் கலந்து கொள்ள அழகு சென்றிருந்த அன்று அவள் சிந்தித்து எடுத்த தீர்மானத்திற்குச் சாதகமானதே என்ற தெளிவினைக் கொடுத்தது.

தனக்குக் கணவனாக வரப்போகின்ற கமலநாதனை, அவளை அவன் பெண்பார்க்க வந்தபோது ஒரே ஒரு முறை மட்டும் பார்த்திருக்கின்றாள். அவனுடைய குணநடைகள்

இலட்சியங்கள் முழுவதையும் அழகு விளக்கமாகக் கூறியிருந்தானுகையால் முதற் சந்திப்பிலேயே அவளுக்கும் அவனைப் பிடித்துக் கொண்டது. அவனுக்கும் அவளைப் பிடித்துக் கொண்டது.

அன்று கோணேசர் மலையில் இருந்து சென்ற அவன் நேரடியாகக் கமலநாதன் வீட்டிற்கே சென்றான். கமலநாதனின் வாழ்க்கைக் கனவுகளை அவன் அறிந்திருக்கின்றானையால் சந்திராவை மணக்கச் சம்மதிப்பான் என்று உறுதியாக நம்பினான்.

தனக்கு வரவிருக்கும் மனைவி எப்படியெல்லாம் அமைய வேண்டும் என்று கமலநாதன் கற்பனை பண்ணினானே அத்தனை அம்சங்களும் சந்திராவிடம் அமைந்துள்ளன'

"எனக்குச் சீதனமோ, சாதியோ, அழகோ தேவையில்லை. அவள் ஒன்றுக்கும் வழியில்லாத அனாதையாக இருந்தாலும் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இருக்கின்றேன்'' என்று அன்றைய பிரயாணத்தில் சந்தித்தபோது கமலநாதன் கூறியது மேலும் நம்பிக்கை ஊட்டியது.

ஒரு பெண்ணுக்கு வரன்தேடுவது என்பது சுலபமான காரியமா? ஆனால் சந்திராவின் விடயத்தில் மிக இலகுவாக அமைந்துவிட்டது. சந்திரா பற்றிய விபரங்களைக் கூறிய போது அவளைப் பெண் பார்ப்பதற்கு அவன் இசைந்தது மட்டுமல்ல, பெண்பார்த்துச் சம்மதத்தையும் தெரிவித்து விட்டான்.

சந்திரா இல்லாத வாழ்க்கையைக் கற்பனை பண்ணிப் பார்க்கவும் முடியாதவனாக இருந்த அழகு, இன்று தானே அவளுக்குத் திருமணம் முடித்துவைக்கும் பொறுப்பில் இருக்கின்றான். அந்த அளவுக்கு அவன் மனம் எப்படிக் கல்லாகியது என்பது அவனுக்கே வியப்பாக இருந்தது.

விடிந்தால் திருமணம். அதற்கான ஆயுத்தங்கள் சோடனைகள் பரபரப்பாக இருந்தன. அழகுவின் நண்பர்களும், அவனுடைய மாணவர்களில் சிலரும் அங்குவந்து உதவி செய்துகொண்டிருந்தார்கள்.

பவளத்துக்கும் ஒரேவேலை. அழகுவுக்கும் அவளுக்கும் செய்து வைத்து மகிழவேண்டிய திருமணத்தை இன்னொருவருக்குச் செய்துவைக்கவேண்டி ஏற்பட்டது பற்றிய அங்கலாய்ப்பு அவள் மனதில் இருந்தாலும் தன் பெண்ணுக்குத் திருமணம் என்றால் எப்படிச் செய்வாளோ அதே நிலையில் இருந்து. பொறுப்போடு நின்று பம்பரமாய்ச் சுழன்றுவந்தாள்.

மணப்பெண்ணுகையால் சந்திராவுக்கு யாரும் தொல்லை கொடுக்கவில்லை. அவளுக்குத் தோழியர் என்று சொல்லிக் கொள்ள குறிப்பாக யாரும்மில்லையாதலால் அவளைக்கேலி செய்யவோ சீண்டவோ எவருமில்லை. அன்றைய நிலையில் அவள் மனம் தனிமையை நாடியது. நேரம் இரவு பத்து மணியைத் தாண்டிவிட்டாலும் கண்களைத் தூக்கம் தழுவ மறுத்தது.

அழகுவும் கமலநாதனும் மாறி மாறி அவள் மனத்திரையில் காட்சியளித்தார்கள். அழகுவை உயிராக நேசித்தவள் இன்று எப்படி இன்னுமொருவனுக்குக் கழுத்தை நீட்டச் சம்மதம் தெரிவித்தாள்? அவளுக்கே நினைத்துப் பார்க்க வியப்பாக இருந்தது. அழகுவாகவே அவளை இன்னுமொருவனுக்கு மனைவியாக்கத் தீர்மானித்து, வரனும் ஏற்பாடு செய்ததன் பின்பு அவள் அவனுக்காக ஏங்குவது என்பது முறையற்றது என்றே அவள் முடிவு செய்தாள். அழகு தனக்குக் கிடைக்கமாட்டாள் என்பது உறுதியானதன் பின்னர், அவள் அந்த வீட்டில் என்ன உரிமையைக் கொண்டு வாழ்வது? என்றோ ஒருநாள் எவனுக்கோ மனைவியாகப் போகின்றவள், அழகு ஏற்பாடு செய்தவனுக்கு

வாழ்க்கைப்பட்டு அந்த வீட்டை விட்டு வெளியேறுவதன் மூலம் அந்தவீட்டில் தான் ஒரு வேண்டாத சுமையாக இருக்காமல் வெளியேறிவிடுவதே நல்லது என்ற முடிவுடனேயே இந்தத் திருமணத்துக்குச் சம்மதம் தெரிவித்தாள். தன் கணவன் என்ற உரிமையை அழகுவுக்குக் கொடுக்கா விட்டாலும் அவள் இதயத்தில் அந்தக் கவிஞனுக்கு என்று ஒதுக்கப்பட்ட இடம் காலியாகாமல் அவனுடையதாகவே இருந்தது. இனியும் அப்படியேதான் இருக்கும். கண்களை மூடிக்கிடந்த அவள் காதுகளில் யாரோ நடந்து வரும் காலடி ஓசை கேட்டது. கண்களைத் திறக்காமலே கிடந்தாள். ''சந்திரா தூக்கமா?,, அழகுவின் அந்தக்குரல் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்தாள்.

'பரவாயில்லை, இரு சந்திரா. உன்னுடைய நித்திரையைக் குழப்பிவிட்டேனா? என்று மன்னிப்புக்கோரும் குரலில் பேசினான்.

''இல்லை... சொல்லுங்க''

''இந்த நேரத்தில் உனக்குத் தொந்தரவு தாறத்துக்கு என்னை மன்னிச்சிடு சந்திரா. எனக்கென்னவோ உன்னோடை கொஞ்சநேரம் பேசவேணும் போல இருந்தது. அதுதான் வந்தேன். உனக்குத் தடையேதும் இல்லையே.''

அவளால் பேச முடியவில்லை. உள்ளத்தை என்னவோ செய்தது' கண்களைத் தாழ்த்திக்கொண்டாள். திருமண ஏற்பாட்டைச் செய்து விட்டேன் என்ற உறுதியோடு இது வரை நின்ற அழகுமணியாக அவன் அப்பொழுது இல்லை. இதயம் நொறுங்கியவனாக அவள்முன் காட்சி தந்தான். அவனை அந்த நிலையில்காண அழுதுவிடுவாள் போல தோன்றியது. தன் உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு 'சொல்லுங்க, என்றாள்.

'சந்திரா! நாம் விருமபினுலும் விரும்பாவிட்டாலும் சில நோய்களுக்கு சத்திரசிகிச்சை தான் பரிகாரம் என்ருல் நாம் செய்தே ஆகவேண்டி இருக்கும். தேவை என்ருல் சில அங்கங்களேயே வெட்டி எறிஞ்சுதான் உயிரைக் காப்பாற்ற வேண்டியிருக்கு. அப்படிப்பட்ட ஒரு அறுவை சிகிச்சைதான் இந்தக் கலியாண ஏற்பாடு. நான் உன்னே இழக்க விரும்பேல்ல. நீயும் என்னே இழக்க விரும்பேல்ல. ஆனுல் இரண்டு பேருடைய கோணங்களும் வெவ்வேருன பிறகு என்ன செய்கிறது? ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகளே, இரண்டும் உயிர்வாழ வேணும் என்பதற்காக வெட்டிப் பிரிக்கிறதில்லேயா? அதுபோலதான் எங்களுடைய உறவை நாங்கள் அறுத்துக் கொண்டோம். உன்னுடைய திருமண ஏற்பாட்டை நானே முன்னின்று செய்யவேண்டிய ஒரு துர்பாக்கியமான நிலே எனக்கு இவ்வளவு ஏற்பாட்டையும் செய்த பிறகும் இன்றைக்கு இதுவரை என்னுடைய சந்திரா நாளேமுதல் இன்னெருவனுக்கு சொந்தமாகப் போகின்ருளே என்ற ஏக்கம் என்னே என்னவோ செய்யுது. ஏதோ கடைசி நேரத்தில என் மனசில இருக்கிறதுகளே சொல்லவேணும் போல இருக்கு''

அழகுமணியின் போக்கைப் புரிந்துகொள்ள முடியாமல் இருந்தது. எவ்வளவு வைராக்கியத்துடன் திருமண ஏற்பாடுகளேச் செய்துமுடித்த அவன் இறுதிநேரத்தில இப்படி வந்து பேசுகின்றனே என்பது வியப்பின்மேல் வியப்பாக இருந்தது. சந்திராவுக்கு என்ன பதில் கூறுவது என்றே தெரியவில்லே' அவனே தொடர்ந்தான்.

''சந்திரா! கமலநாதன் கொடுத்துவைச்சவன். அவனுடைய இலட்சியங்களின் வடிவான உன்னே மனேவியாகப் பெறுவது அவனுடைய அதிஸ்டம். உன்னுல அவன் நிறைவான வாழ்வை அடையப் போகிருன். உனக்கும் நிறைவு தான்.

இந்த வார்த்தைகள் எத்தனை தூரம் உண்மையாக இருக்கும் என்பதை அவளால் உறுதியாகக் கொள்ளமுடியாமல் இருந்தது. சிறுவயதுதொட்டே பழகிய, உடன் வாழ்ந்த அழகுமணியே அவளுக்கு நிறைவானவனாக இல்லாத நிலையில் நேற்று அறிந்த கமலநாதன் எப்படி அமையப் போகின்றானோ!

''சந்திரா! நீ சந்தோஷமாய் வாழவேண்டும்- நான் மனம் நிறைந்து வாழ்த்துகிறேன். என்னைவிட அனைத்திலும் நீ விரும்பத்தக்க கணவன் உனக்குக் கிடைக்கப் போகின்றான். ஆனால் உன்னுடைய இடத்தை நிரப்ப உன்னைப் போன்றவள் என் வாழ்வில் கிட்டப்போவதில்லை. என் சந்திராவின் இடம் என்றும் என் இதயத்தில் காலியாகவே இருக்கும்.

''அழகு! அப்படியென்றால்...?

''இது சந்திரா என்ற காதல் தேவதை குடியிருந்த மூலஸ்தானம். இன்னுமொரு விக்கிரகத்துக்கு இங்கு இடமில்லை. இந்தக்கோயில் இடிபடும்வரை மூலஸ்தானம் அவளுடையதாகவே இருக்கும். நீ எங்கு வாழ்ந்தாலும், எவரோடு வாழ்ந்தாலும் உன் நல் வாழ்வுக்கான பிரார்த்தனையை இந்தக் கவிஞனின் அந்தராத்மா பாடிக் கொண்டே இருக்கும். அந்த இதயத்தின் நாதம் ஓய்ந்து விடும்போது, இந்தக் கோவில் தகர்ந்துவிடும் போது நீயிருந்தால் இவனுக்காக நீ உதிர்க்கும் இரண்டு சொட்டுக் கண்ணீர்த் துளிகள் போதும்.''

''அழகு! இது என்ன? ஏன் இப்படியெல்லாம் பேசுகிறீர்கள். தமிழில்லையேல் நீங்கள் இல்லை என்று அன்று சொன்னீர்கள்... இன்றைக்கு என்னவோ சொல்லி என்னைக் குழப்புகிறீர்களே!''

''இன்றைக்கும் அதைத்தான் சொல்லுகின்றேன். நீ போன பின்பும் அந்தத் தமிழ் தான் என்னை வாழவைக்கப்

போகின்றது. அந்தத் தமிழில் நான் பாடும் கவிதைகளில் நீ வாழப்போகின்றாய். நாளை மலரவிருக்கும் புதிய வாழ்வின் இனிய கனவுகளை நான் இனியும் கலைக்க விருப்பவில்லை. என் இதயம் திறந்து பேசிய நிறைவுடன் போகின்றேன்.''

என்னவென்று சொல்ல முடியாத உணர்வுகளால் பீடிக்கப்பட்டவளாக சந்திரா நின்றாள். அவள் இப்பொழுது கடந்துவந்த பாதைகளை விடக் கடக்கவுள்ள பாதைகளில் கவனத்தைச் செலுத்தவேண்டியவளாக நின்றாள். எதிர்காலக் கடைமைகளும், அதற்கான திட்டங்களும் அவள் முன்னே பரந்து விரிந்து கிடந்தன.

சந்திராவின் இதயம் திக் திக் என்று அடித்துக் கொண்டது. மணப்பெண்ணுக்கே உரிய பூரிப்பும், நாணமும் அவளிடம் குடிபுகுந்திருந்தது. காலையிலே கமலநாதனின் கரங்களினால் அவள் கழுத்தில் இடப்பட்ட தாலி அவள் தொடங்கிவிட்ட புதிய வாழ்வுக்குக் கட்டியம் கூறிக்கொண்டிருந்தது.

அந்த இரவு அவளுக்கும் அவனுக்கும் முதலிரவு... அவளிடம் ஆயிரம் கற்பனைகள்... அவள் தனித்திருந்தாள். அவன் வரப்போகின்றான்... அவனது காலடி ஓசை கேட்கின்றது. கதவு தாழிடும் சத்தம். அவள் இதயம் வேகமாக அடித்துக்கொண்டது. என்ன செய்வது என்று ஒன்றும் புரியவில்லை... அவனா, அவளா முதல் பேசுவது. குனிந்த தலை நிமிராது எழுந்து நின்றாள்...அவள் முதலில் பேசமாட்டாள். ஆனால் அவன் பேசப் போகும் முதல் வார்த்தை என்ன? அதனைக்கேட்கத் தன் காதுகளைக் கூர்மைப்படுத்திக் கொணடாள். அவன் பேசினான்.

''மூக்குத்தி போட்ட புள்ளே
முகம் சிவந்த சின்னப் புள்ளே
நாக்குச் சிவந்த புள்ளே
நான்தாண்டி உன் புருஷன்''

கனவுகள் அத்தனையும் சம்மட்டிகொண்டு சிதறடித்தது போன்றிருந்தது. திடுகிட்டு நிமிர்ந்து பார்த்தாள்... அங்கே அவன் சிரித்துக் கொண்டு நின்றான். அவளை அறியாமல் உடல் முழுவதும் நடுங்கியது.

# பயணம் தொடர்கின்றது

## அத்தியாயம் 12

"வசைக்கும் சிறைக்கும் குண்டுக்கும் எதிர்ப்புக்கும்
வாட்டிடும் படுகொலைச் சூழ் வரும் சாவுக்கும்
அசைக்க முடியாத மலையை நிகர்க்கும்
அஞ்சாமை ஒன்றே வேண்டும் தமிழர்க்கு"

— பாரதிதாசன்.

அந்தப்பாடல், அந்த மலையகக் காதல் பாடல், அவளுக்கே பரிச்சயமான அந்தப் பாடலை அழகுமணி பாடியிருந்தால் அவள் ஆச்சரியப்பட்டிருக்கமாட்டாள். ஏனெனில் அப்பாடல் அவளும், அவனும் அறியாப்பருவம் தொட்டு, ஒருவரை ஒருவர் விரும்பிய இளமைப் பருவம் வரை பாடி மகிழ்ந்த பாடல். அதனை அவளுடைய கணவன் கமலநாதன் பாடியபோது அவளுக்குப் பேரதிர்ச்சியாகவே இருந்தது.

அதனை அவன், அதுவும் இந்த நேரத்தில் ஏன் பாட வேண்டும்? தற்செயலாக அவனால் பாடப்பட்டதா அல்லது 'உன்னைப்பற்றி எனக்குத் தெரியுமடி' என்று குத்திக்காட்டுவதற்காகப் பாடப்பட்டதா, என்று புரிந்துகொள்ள முடியாதவளாக வியப்போடு அவனைப் பார்த்தாள். அப்பொழுதும் அவன் சிரித்தபடியே நின்றான்.

என்ன சந்திரா! இது உனக்கு விருப்பமான பாட்டுத் தானே? பிறகு ஏன் பாட்டைக்கேட்டு பயந்தவள் மாதிரி இருக்கிறாய்.

அவனது இந்த வார்த்தைகள் அவனுக்கு எல்லாமே தெரியும் என்பதை சொல்லாமல் சொல்லின. அடுத்து என்ன நடக்குமோ என்று உதறல் எடுத்தது.

''இந்தப்பாடல் எனக்கு எப்படித் தெரியும் என்று கேக்கிறியா. அழகுமணி தான் சொல்லித்தந்தான். இந்தப் பாட்டை மட்டுமல்ல இந்தப் பாட்டினுடைய சரித்திரத்தையே சொல்லியிருக்கின்றான். உங்கள் இரண்டு பேருக்கும் விருப்பமான இந்தப் பாடலைக் கேட்டால் நீ சந்தோசப் படுவாய் என்றுதான் பாடினேன்.''

அவள் உதடுகள் துடித்தன. தனது மணவாழ்வின் ஆரம்பமே அதிர்ச்சியோடு ஆரம்பிப்பதாக உணர்ந்தாள். அழகுமணி அவளைப் பழி வாங்கி விட்டதாகப் பயந்தாள்.

சந்திராவின் அஞ்சிய நிலையைக்கண்டு, அந்நிலையை மேலும் தொடர விரும்பாதவனாகத் தன்பேச்சின் தொனியை மாற்றினான். அவனிடமிருந்து நீண்ட பெருமூச்சு வெளியேறியது. ''பாவம் அழகுமணி, உன்னோடு வாழ அவனுக்குக் கொடுத்துவைக்கவில்லை.''

இந்த வார்த்தைகள் அவளை மேலும் குழப்பமடைய வைத்தன. அவனது போக்கினைப் புரிந்துகொள்ள அவளால் முடியவில்லை.

''பயப்படாதே சந்திரா. அழகுமணி மிகவும் நல்லவன். அவன் என்னிடம் எதையுமே மறைக்கேல்ல. ஆரம்பம் முதல் இறுதிவரை இரவு உன்னோடு பேசியதுவரை எல்லாவற்றையும் விளக்கமாய் எனக்குச் சொல்லிற்றான்.''

''அதுக்குப்பிறகும் நீங்கள்''... தட்டுத்தடுமாறி தடம்புரண்டு அவள்வாயிலிருந்து சொற்கள் புறப்பட்டன. அவனே அவளை இடைமறித்துப் பேசினான்.

''அதுக்குப்பிறகும் என்னை மணம்முடிக்க எப்படிச் சம்மதிச்சீங்க என்றுதானே கேட்கிறாய்? சந்திரா, கல்யாணத்துக்கு முதல் ஒருவனை ஒருத்தி விரும்புறது தவறு? காதலும் அதன் உணர்வுகளும் கடவுளால் வழங்கப்பட்ட கொடைகள். இளமையில் தன் தகுதிக்கும், வாழ்வுக்கும் பொருந்தாத ஒருவரை விரும்புறதும், பின்னர் உணர்ந்து விலகிறதும் இயற்கை, ஏன் தேவையானதும்கூட. அந்தப் பெலவீனம் உனக்கு மட்டுமல்ல, அழகுமணிக்கு மட்டுமல்ல உலகத்தில் எல்லோருக்கும் அமைந்தது. அதற்காக ஒருத்தனை விரும்பியபெண்ணுக்கு இன்னுமொருவன் வாழ்வளிக்கக் கூடாது என்பதில் என்ன நியாயம் இருக்கு? ஓர்

ஆணும் பெண்ணும் காதலர்களாகவோ அல்லது கணவன் மனைவியாகவோ வாழுகின்ற அந்தக் காலகட்டத்தில் ஒரு வருக்கு ஒருவர் துரோகம் செய்யாமல் வாழ்ந்தாலே போதும் என்பதில் நம்பிக்கை உள்ளவன் நான்.''

''அழகுமணிக்கும் உனக்கு மிடையில் இருந்த ஏன் இப்பொழுதுகூட இருக்கிற அன்பு பரிசுத்தமானது என்று எனக்குத் தெரியும். திருமண வாழ்க்கையில் உங்கள் இரண்டு பேருடைய வாழ்க்கைச் சக்கரங்கள் சேர்ந்து போகா என்றதை உணர்ந்துகொண்டு நீங்கள் ஒருவரை ஒருவர் விட்டுவிலகிறீங்க. இதில் என்ன தவறு இருக்கும் என்று என்னுல் சொல்லமுடியேல்ல.''

கமலநாதன் பேசிக்கொண்டு போகும்போதே, சந்தி ராவுக்கு அவன் மீதிருந்த அச்சம் அகன்று அவளையறியா மல் தன் கணவன் மீது பக்தி ஏற்பட்டது.

தனக்குக் கிட்டாதவளின் வாழ்வு எப்படிப்போனுல் என்ன என்ற பழிவாங்கும் உணர்வு இல்லாமல் அவள் வாழ்வுக்கு உகந்த ஓர் உத்தமனையே தனக்குத் துணையா கத் தேடித்தந்துள்ள அழகுமணிக்கு அவள் மானசீகமாக நன்றி செலுத்தினுள்.

சந்திரா தனது கணவனேடு புகுந்தகம் போய்விட் டாள். வீடு வெறிச்சோடிக்கிடந்தது. பெண்ணைப்பெற்று சீராட்டி வளர்த்த ஒவ்வொருவருக்கும் ஏற்படும் அனுப வம் இதுதானே. அழகிய வீட்டைக் கட்டிமுடித்து இன்னெ ருவரை அதில் குடியமர்த்தியபின் வீட்டின் சொந்தக்கார னுக்கே அவ்வீட்டினில் உரிமையோடு நுழையும் சுதந்திரம் கிடையாதுதானே.

பெற்றபெண்ணைப் பாவித்து வளர்த்த சந்திராவின் பிரிவு பவளத்தைக் கடுமையாக வாட்டிற்று. என்றுலும் அழகுமணியை அவ்வளவாகப் பாதிக்கவில்லையென்றுதான்

கூறவேண்டும். பாடசாலையும் அரசியல் ஈடுபாடும் அவனை கவலைகளின் பிடியில் இருந்து விலக்கிவைத்திருந்தது.

ஜூன் ஐந்தில் தனிச்சிங்கள மசோதாவை எதிர்த்துக் காலிமுகத்திடலில் தமிழர் அகிம்சைப் போர் நடாத்திய போதும் அரசு தனது தீர்மானத்தை மாற்றிவிடவில்லை. ஜூன் பதினைந்தாம் நாளன்று அதனை அமுல் படுத்தியது. ஆகவே தொடர்ந்து போராடுவது என்ற தீர்மானத்துக்குத் தமிழர்கள் வந்திருந்தனர். இலங்கை வாழ் தமிழர்களின் ஒன்றித்த எதிர்ப்பைக் காட்டுவதற்காகத் திருமலை யாத்திரை ஒழுங்குசெய்யப்பட்டது. இலங்கையில் நாலா பக்கங்களி லும் இருந்து வரவிருக்கும் தமிழர் படையை வரவேற்ப தற்கும், அவர்களுக்கு வேண்டிய வசதியைக் கவனிப்பதற் கும் தொண்டர்கள் பலர் தேவைப்பட்டனர். அந்த தொண்டர்களில் ஒருவனைகத் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு அழகுமணி தனது கவலைகளை மறந்து உழைத்தான்.

ஆவணி மாதம் பதினும் நாள் - அடிபட்டாலும் தமி ழன் அஹிம்சைப் போர் செய்யவும் அஞ்சமாட்டான் என் பதை அகிலம் அறியச் செய்து காட்டிய நாள்.

அன்றைய தினத்தின் பத்து நாட்களுக்கு முன்னரே, ஊர்காவற்றுறை, பருத்தித்துறை, மன்னார், திருக்கோவில் ஆகிய இடங்களில் இருந்து தமிழர் படையின் பாதயாத் திரைத் திட்டத்தை ஏற்கனவே பிரதமருக்கு அறிவித்த போது அதைத் தடைசெய்வேன் என்று அவர் எச்சரிக்கை விடுத்தார். ஜூன் ஐந்தில் சத்தியாக் கிரகிகள் பெற்ற பாடம் தனது இந்த எச்சரிக்கையைக்கேட்டு தமிழர் படையை பின்வாங்கச் செய்யும் என்று எண்ணினர் போலும். ''எந்தவிதத் தடையையும் மீறிச் செல்வோம்'' என்று சூளுரைத்த தமிழர் படை திருமலை நோக்கிக் கிளம் பியது. ''திருமலைக்குச் செல்லுவோம் சிறுமை அடிமை வெல் லுவோம்'' என்று தொடங்கும் பண்டிதர் இளமுருகனரின்

திருமலை யாத்திரைப் பாடலை முழங்கியவாறு படைகள் தம் பயணத்தைத் தொடங்கின. தடைசெய்வோம் என்று எச்சரித்த அரசு என்ன நினைத்ததோ - அடுத்தடுத்து அடாவடித் தனங்களை அனுமதித்து அகில அரங்கில் அவமானத்தைத் தேடிக் கொளளக்கூடாது என்று நினைத்ததோ, இம்முறை பாதயாத்திரை செய்தவர்களோடு பாதுகாப்புப் படையினரையும் அனுப்பிவைத்தது.

உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்துக்கென சாந்தி அடிகள் செய்த தொண்டியாத்திரை எப்படி வெள்ளை அரசாங்கத்தை உலுப்பியதோ அதேபோன்று திருமலை யாத்திரையும், தொடர்ந்து திருமலை முற்றவெளியில் நடந்த மூன்றுநாள் மாநாடும் ஆட்சியாளரை அதிரவைத்தது.

''1959ம் ஆண்டு ஆவணி மாதம் 20ம் திகதிக்கிடையில், பிரதமமந்திரியும் இலங்கைப் பாராளுமன்றமும், இலங்கைச் சமஷ்டி அரசை நிறுவத் தேவையான நடவடிக்கை எடுக்கத்தவறின் அவ்விலட்சியத்தை அடைவதற்கு சாத்வீக வழியில் கட்சி நேரடி நடவடிக்கையில் இறங்கும்.'' என்று பகிரங்க அறிக்கை விடுத்தது. இந்தத் திருமலைத் தீர்மானம் அரசுக்குத் திகிலூட்டும் தீர்மானமாக அமைந்தது.

அழகுமணி மட்டுமல்ல பவளமும் பெண்கள் தொண்டர் அணியோடு சேர்ந்து தனது பங்களிப்பைக் கொடுத்துக்கொண்டிருந்தாள். சந்திராவை மருமகளாகக் கற்பனை பண்ணி ஏமாந்த பவளம் இப்பொழுது மகளாக எண்ணி தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டாள்.

சந்திராவும் அடிக்கடி வந்து போய்க்கொண்டிருந்தாள். தன்னுடைய பிரிவு அந்தக் குடும்பத்தில் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்திவிடக் கூடாது என்பதில் அதிக அக்கறை காட்டினாள்.

அழகுமணியின் அரசியல் ஈடுபாடும், போராட்ட உணர்வுகளும் நாளுக்குநாள் அதிகரித்துவருவதைக் காணும் போதும் அவளுக்கு வேதனையாகவே இருந்தது. ஆனல் அவன் வழியில் குறுக்கிடவோ கண்டிக்கவோ இருந்த உரிமையை அவள் இழந்துவிட்ட பின்னர் என்ன செய்யமுடியும்? அத்தகைய ஒரு வாழ்வை வெறுத்தபடியாற்றுனே அவள் அவனிடமிருந்து விலகித் தனக்கென்று ஒரு வாழ்வை அமைக்கச் சம்மதித்தாள். அரசியல் வேகம் என்பது ஒரு சில இளைஞர்களுக்குக் குறிப்பிட்ட காலத்தில் மட்டுமே பீடித்திருக்கும் வியாதி. அரசியல் ஈடுபாட்டால் அழகுமணியின் வாழ்வில் ஏற்படும் தோல்விகளும், இழப்புகளும், விரக்திகளும், அவனை நின்று நிதானிக்கவைத்துத் திசைதிருப்பி விடும் என எதிர்பார்த்தாள். ஆனல் அவள் எண்ணியதற்குமாறுக அவன் வேகமும், ஈடுபாடும் அதிகரித்துக் கொண்டே வந்தது. அதற்குத் துணையாக 'ஸ்ரீ' எதிர்ப்புப் போராட்டம் வேறு வந்து அமைந்தது.

அரசுக்குச் சொந்தமான வாகனங்களின் இலக்கத் தகடுகளில் இதுவரையில் பொறித்திருந்த ஆங்கில எழுத்துகளுக்குப் பதிலாக சிங்கள 'ஸ்ரீ' யை பொறிப்பது என்ற திட்டத்தைக் கொண்டுவந்தது.

இதனை அடுத்து 1957 ஜனவரி 19ம் நாள் சிங்கள ஸ்ரீ எதிர்ப்பியக்கம் ஆரம்பித்தனர். சிங்கள ஸ்ரீக்குப் பதிலாக தமிழர்கள் தமது வாகனங்களில் தமிழ் ஸ்ரீயைப்பொறித்தனர், இந்தப் போராட்டம் நாளடைவில் சிங்களப் பகுதிகளில் தமிழ் எழுத்துக்களை அழிக்கும் போராட்டமாகவும் தமிழ்ப் பகுதிகளில் சிங்கள எழுத்துக்களை அழிக்கும் போராட்டமாகவும் விரிந்துகொண்டே போனது. இந்தப் போராட்டங்களில் அழகுமணியின் பங்களிப்பு அதிகமாகவே இருந்தது. அழகுமணியின் இந்தகட்டுப்பாடற்ற வேகத்தைக் கண்டு சந்திரா கலங்கினள். இது எங்குபோய் முடியுமோ

என்று அஞ்சினாள். ஆனால் அவளால் என்ன செய்யமுடியும்? அவனைக் கட்டுப்படுத்தும் உரிமையைத்தான் அவள் இழந்து விட்டாளே. அழகுமணிக்குத் தான் வாழ்க்கைப்படா விட்டாலும் இன்னுமொருவனுக்கு மனைவியாக இல்லாமல் இருந்திருந்தால் ஏதோ ஓரளவு உரிமை உண்டு என்று சொல்லலாம். ஆனால் இப்பொழுது என்ன செய்யமுடியும்?

தனது கணவன் மூலம் தடுத்துவிட, அவனுக்கு அறிவுரை வழங்கவும் முயற்சி செய்தாள். ''சந்திரா இது விடயத்தில் நான் என்ன செய்துவிட முடியும். அது அவன் விருப்பம் ஒருவேளை உன்னை இழந்த கவலையை மறக்கத் தான் இப்படித் தீவிரமாக இருக்கிறானோ என்னவோ!'' என்று ஒரே போடாகப் போட்டு விட்டான். மேற்கொண்டு அவள் என்ன செய்ய முடியும்? அனைத்துக்கும் தானே தான் காரணமா என்று தன்னையே சபித்து மௌனமாக அழுது கொண்டாள்.

அழகுமணியின் வேகத்தின் உச்சக்கட்டமாக சுதந்திர தின எதிர்ப்புப் போராட்டம் அமைந்துவிட்டது. தமிழ் மக்களின் உணர்வுகளை மதிக்காத அரசுக்குத் தமது எதிர்ப்பைத் தெரிவிக்கும் நாளாகச் சுதந்திர தினத்தை அனுட்டிக்க முடிவு செய்தனர்.

1957 பெப்ரவரி நான்காம் நாள் இலங்கையின் சுதந்திர தினம். அந்நாள் கரிநாளாக, துக்கதினமாக அனுட்டிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் தமிழர்களின் உணர்வுகளை மதியாது திறக்கப்பட்ட கடைகளின் முன்னரும் பஸ் வண்டிகளின் முன்னரும் பெண் தொண்டர்கள் சத்தியாக்கிரகம் இருந்தும், படுத்துக்கிடந்தும் போராடினர். அவர்களில் திருமதி கோமதி வன்னியசிங்கம், காரைநகரில் திருமதி நாகம்மா வேலுப்பிள்ளை ஆகியோரும் குறிப்பிடத் தக்கவர்கள்.

திருமலையிலும் துக்கதினம் அனுட்டிக்சப்பட்டது. அழகு மணியின் மனதிலே ஒரு புதிய எண்ணம். திருமலையில் சிங்களவரின் ஆதிக்கத்தில் இருக்கும் சந்தைக் கட்டிடத் துக்கு அண்மையில் இருக்கும் மணிக்கூண்டுக் கோபுரத்தின் உச்சியில் கறுப்புக் கொடியைப் பறக்க விட வேண்டும் என்பது.

அன்று சுதந்திரதினம். விடுப்பு நாளாகையால் கமல நாதனும் சந்திராவும் வீட்டிற்கு வந்திருந்தனர். தனது திட்டத்தை அவர்களிடம் வெளியிட்டபோது கமலநாதனும் சந்திராவும் தடுத்தனர். பவளத்தின் மனதில்கூட ஒருவித அச்சம் பரவியது. அனைவரது ஆணைகளையும் மீறி கறுப்புக் கொடி ஏந்தியவனாக அழகுமணி வெளியேறினான்.

அவன் போன சிறிது நேரத்தில் அந்தப் பயங்கரச் செய்தி திருமலை நகரத்தையே திகைக்கவைத்தது. "மணிக் கூட்டுக் கோபுரத்தில் ஏறி கறுப்புக்கொடி கட்ட முயன்ற இளைஞன் சுட்டுக் கொலைசெய்யப்பட்டான்.

சந்திரா அலறினாள். மயக்கமுற்றே விழுந்தாள். கமல நாதன் மணிக்கூண்டை நோக்கி ஓடினான்.

# பயணம் தொடர்கின்றது

## அத்தியாயம் 13

"பழியோடு வாழ்வதிலும் பட்டழிதல் சிறப்பென்ற
பண்பால் உந்தித்
தெளிவான துணிபொன்றைத் திருமலையைக் கேட்கிறதெம்
தீரர் கூட்டம்"

— எருவில் மூர்த்தி.

கமலநாதன் எவ்வளவு முயன்றும் அவனது மனவேகத் துக்கு ஈடுகொடுத்து அவனல் ஓடமுடியவில்லை கால்கள் பின்னுப்படுவதுபோல் இருந்தது. இப்பொழுது அவன் நகர சபை மண்டபத்தைத் தாண்டி முற்றவெளிக்கருகாமையில் ஓடிக்கொண்டிருந்தான். அப்பொழுது அவன் வீதியில் ஆங்கு கண்ட காட்சி மேற்கொண்டு ஓடவிடாமல் கால் களுக்குத் தடைவிதித்தது. அவன் கண்களை நம்பமுடியாத வனுக வியப்போடு நின்றன். அவனிடமிருந்து நிம்மதிப் பெருமூச்சு வெளியேறியது.

சாட்சாத் அழகுமணி அவன் முன்பு உயிரோடு வந்து கொண்டிருந்தான். ஆனல் அவன் சுய உணர்வுள்ள மனித னுக வந்து கொண்டிருந்தான என்பதை நம்பமுடியாமல் இருந்தது. கையிலே கறுத்தக் கொடியைப் பிடித்த வண் ணம் வெறிபிடித்தவனுகக் கோஷமிட்டுக் கொண்டிருந்தான். அவனை நான்கு பேர் அடக்கிப் பிடித்துக் கட்டுப்பாட்டுக் குள் கொண்டுவரப் பகீரதப் பிரயத்தனம் செய்து கொண்டி ருந்தனர். அவர்கள் பிடியில் இருந்து விடுபட்டு ஓடுவதற்கு அழகுமணி முயன்று கொண்டிருந்தான்.

''என்னை விடுங்கடா... செத்தாலும் ஒரு நாளைக்குத் தானே சாகிறது. நடராஜனல முடியாமல் போன காரி யத்தை நான் செய்துகாட்டுறன்... தயவுசெய்து விடுங்க என்னை''

இதே வார்த்தைகளை அழகுமணி மீண்டும் மீண்டும் சத்தமிட்டுச் சொல்லிக்கொண்டிருந்தான். அவனை அமுக் கிப் பிடித்து அழைத்து வருபவர்களோடு கமலநாதனும்

சேர்ந்து கொண்டான். அவனை வீடு கொண்டு சேர்ப்பதற்குள் போதும் போதும் என்ருகிவிட்டது. அழகுமணியைக் கண்டதன் பின்னர்தான் சந்திரா நிம்மதியாக மூச்சு விட்டாள்.

வீடு வந்து சேர்ந்த பின்னரும் அழகுமணியால் நிம்மதியாக இருக்கமுடியவில்லை. தான் எதைச் செய்ய நினைத்தானோ அதனை இளைஞன் நடராஜனும் செய்யத் துணிந்து நினைத்ததை நிறைவேற்ற முடியாவிட்டாலும் இலங்கைத் தமிழர் வரலாற்றில் அழியாத இடத்தைப் பெற்றுவிட்டானே. என்ஞல் அந்த இடத்தைப் பெறமுடியாமல் போய் விட்டதே என்று ஏங்கிஞன். மணிக்கூண்டுக் கோபுரத்தின் உச்சியில் கறுப்புக்கொடியை கட்டுவதற்கு ஏறிய இளைஞன் நடராஜனை சந்தைக் கட்டிடத்துள் மறைந்து நின்ற மாற்ருன் ஒருவன் அவனது இன உணர்வை காணச் சகிக்க முடியாதவஞகச் சுட்டுக் கொன்றுவிட்டான். இலங்கைத் தமிழர் வரலாற்றில் இனத்துக்காக உயிர்விட்ட முதல் தியாகி என்ற பெயரை நடராஜன் பெற்றுவிட்டான். அந்தப் பெரும்பேறு தனக்குக் கிட்டாமல் போய்விட்டதே என்பது தான் அழகுமணியின் கவலை.

ஈழத் தமிழினத்தின் முதல் தியாகி நடராஜனின் மரணச் சடங்கு விடுதலை வீரனுக்குரிய மதிப்போடு முடிவடைந்துவிட்டது. இது விடயத்தில் அழகுமணி காட்டிய ஆர்வமும். துடிப்பும் சந்திராவுக்கு எரிச்சலையே ஊட்டியது. சுதந்திர தினத்தன்று சற்று முன்னர் சென்றிருந்தால் நடராஜனுக்குப் பதில் அழகுமணியல்லவா பலியாகியிருப்பான். இதனை எண்ணிப்பார்க்கவே கலக்கமாயிருந்தது. அவனுக்கு அவள் வாழ்க்கைப்படாதது ஒரு பக்கம் இருந்தாலும் அவன் உடல் நலத்தோடு நீண்டகாலம் உயிர் வாழவேண்டும் என்பதில் அவளுக்கு விருப்பமில்லையா? சுதந்திர தினத்தன்று அழகுமணி நடந்துகொண்டதுபற்றி

அவனைக் கண்டித்து சூடாகவே நாலு வார்த்தை பேச வேண்டும் என்று சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள்.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை கமலநாதனும் வார இறுதியில் வந்திருந்தான். அன்று மாலை இருவரும் அழகுமணியின் வீட்டிற்கு வந்தபோது அவனும் அங்கிருந்தான். சந்திரா எதிர்பார்த்திருந்த சந்தர்ப்பம் அன்றுதான் கிட்டியது. ஆரம்பத்தில் அமைதியாகத் தொடங்கிய பேச்சுவார்த்தை இறுதியில் உச்சக்கட்டத்தையே அடைந்துவிட்டது.

"என்னவாயிருந்தாலும் அழகு நீங்கள் கொஞ்சம் கட்டுப்பாடாய் இருக்கவேணும். அன்றைக்கு நீங்கள் கொஞ்சம் முந்திப் போய் இருந்தால் என்ன நடந்திருக்கும்"

''என்ன நடந்திருக்கும், நடராஜனுக்கு கிடைத்த பாக்கியமான வீரமரணம் எனக்குக் கிடைச்சிருக்கும். இலங்கையில் இனப் போராட்டத்துக்காக உயிர்விட்ட முதல் வீரன் என்று தமிழர் வரலாற்றில் என்னுடைய பெயர் எழுதப்பட்டிருக்கும்''

''இப்படி முரட்டுத்தனமாகவும் யோசனை இல்லாமலும் கதைக்காதீங்க அழகு. உங்களுக்கு ஒன்று நடந்தால் உங்கட அம்மாவுக்கு, ஏன் இந்த இனத்துக்கே எத்துணை இழப்பு என்று யோசிக்கிறீங்களா?''

''தொண்டர்களைத் தூண்டிவிட்டு தங்களைக் காப்பாற்றிக்கொள்ள நினைக்கிற தலைவர்கள் பட்டியலில் இடம் பெறவேணும் என்ற ஆசை எனக்கில்ல சந்திரா. 'செய் அல்லது செத்துமடி இதுதான் என்னுடைய கொள்கை''

''சரி. இன்றைக்கு நடராஜன் செத்திற்றுன். நடராஜனுக்குப் பெயர்தான். ஆனுல் அவனை நம்பியிருந்த தாய்க்கும் மற்றைய ஜீவன்களுக்கும் யார் பொறுப்பு?''

'ஒரு போராட்ட வீரனுக்கு முன்னால் குடும்பமென்ற குறுகிய வட்டமல்ல, இனம் என்ற பெரிய வட்டம்தான் முக்கியம். ஆயிரக்கணக்கான குடும்பங்களைக் கொண்ட இனத்தைக் காக்கவேண்டி, ஒரு சிறிய குடும்பத்தின் ஓர் உறுப்பினனான அவன் உயிர் விடுறதை ஒரு பெரிய காரிய மாய் அந்த வீரன் என்றைக்குமே கருதமாட்டான்''

''இன்றைக்கு நடராஜன் செத்ததால என்ன சாதிச் சிற்றான்?''

''ஒரு நடராஜனின் உயிர்த் தியாகம் ஓராயிரம் நட ராஜன்களை உருவாக்க வித்தாகியிருக்கு''

''ஓராயிரம் வீரர்கள் என்ன ஒரு இலட்சம் வீரர்களை உருவாக்கினாலும் இலங்கையைப் பொறுத்தவரையில் சாத் வீகப் போராட்டம் சரிப்பட்டு வராது அழகு'' என்று இடையிலே குறுக்கிட்டான் கமலநாதன்.

''சூரியனே அஸ்தமிக்காத ஆட்சிபுரியும் பிரிட்டிஷ் காரனே சத்தியாக்கிரகப் போராட்டத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் பின் வாங்கினபோது, எங்களாலமட்டும் ஏன் எதையும் சாதிக்க முடியாது என்று நீ நினைக்கிறாய்''

''வெள்ளைக்காரன் வெளியேறினான் என்றால் காரணம் நீ சொன்னாயே சூரியன் அஸ்தமிக்காத ஆட்சியென்று அது தான். உலகமெல்லாம் தன்னுடைய கொடியைப் பறக்க விட்டுக்கொண்டிருக்கிற அவனுக்கு இந்தச் சுண்டைக்காய் நாடு ஒரு பொருட்டல்ல. இந்தியாவான இந்தியாவையே விட்டு வெளியேறினபிறகு, இதையொரு நாடு என்று கட் டிப் பிடிச்சுக்கொண்டு மாரடிக்க அவனுக்கென்ன பைத்தி யமா? அதோட இந்த நாட்டில் எவ்வளவு உறிஞ்ச முடி யுமோ அவ்வளவையும் அவன் உறிஞ்சியாயிற்று''

அவனை இடைமறித்தாள் சந்திரா. ''அதுமட்டுமில்ல. வெள்ளைக்காரன் இந்த நாட்டில இருந்து ஆதாயம்

பெற்றன் என்றல் இங்கே உள்ள சிங்களவராலேயும், தமிழராலேயுமல்ல அங்க இருந்து வந்த இந்தியாக்காரனிலதான் அவன் தங்கியிருந்தான். இப்போ இந்தியாவுக்கு சுதந்திரம் குடுத்தாச்சு. இனி இந்தியர்களையெல்லாம் இந்தியா திரும்பி அழைச்சிட்டா இஞ்ச இருக்கிறவங்களை நம்பியிருக்கிறது பயனில்லை என்றும் எண்ணியிருக்கலாம்''

மீண்டும் கமலநாதன் தொடர்ந்தான். ''நான் சொல்ல வந்தது என்னவென்றல் பிரிட்டிஷ்காரன் இந்தியாவை விட்டுவிட்டுப் போனன் என்றல் சத்தியாக்கிரகப் போராட்டம் கொடுத்த தொல்லையோடு, அவன் இந்தியாவை மட்டும் நம்பி இருக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இல்லையென்பதும் ஒரு காரணம். அவனுக்கு ஒரு நாடில்லாட்டி இன்னுமொரு நாடு. ஆனல் இப்ப இலங்கையில் ஆட்சி செய்து கொண்டிருக்கிற சிங்களவர்களுக்கு இலங்கையை விட்டால் வேறு இடங்கிடையாது. வேற போக்கிடம் இல்லாதவன் என்ன செய்வான். அதோட இந்த நாட்டின் பெரும்பான்மை இனமும் அவன்தான். எனவே நீங்கள் எப்படித்தான் சாத்வீகப் போராட்டம் நடத்தினலும் அவன் வளைஞ்சுகொடுக்கமாட்டான். இந்த நாட்டில உரிமையில்லாத வெள்ளைக்காரன் ஆட்சியில் எப்படி இந்த நாட்டுல சுதேசிகள் இரண்டாம் தரப் பிரஜைகளாக நடத்தப்பட்டார்களோ அதேமாதிரித்தான் சிங்களவர்கள் தமிழர்களை நடத்துவார்கள். உங்கட சாத்வீகப் போராட்டம் இரத்தக் களரிகளையும், உயிர்ப்பலிகளையும் தான் ஏற்படுத்தும்''

''காந்திஜீயின் சத்தியாக்கிரகத்தை வெள்ளையன் அசட்டை செய்யப்போய் என்ன நடந்தது? சுபாஷ் சந்திர போஸ் போல தீவிரவாதிகளை உருவாக்கிச்சுது. அந்த நிலைமை இலங்கையிலும் ஏற்படலாம்''

சாத்வீகப் போராட்டத்தின் விளைவுகளையே எண்ணிப் பயந்து கொண்டிருந்த சந்திராவுக்கு சுபாஷ் சந்திர

போஸின் சித்தாந்தத்தைப்பற்றிப் பேசத் தொடங்கவே நடுக்கமாகவிருந்தது. "போதும் அழகு நிற்பாட்டுங்க. உங்கட கற்பனைகளுக்கு ஓர் அளவே கிடையாது"

"இல்லை சந்திரா உண்மைதயத்தான் சொல்லுறன். சாத்வீகம் தோல்விகாணுமானல் காலம் மாறுபட்ட சிந்தனைவாதிகளைத்தான் உருவாக்கும். இன்றைக்கு நான் ஐம்பத்தி ஏழாம் ஆண்டில சத்தியாக்கிரகம், சாத்வீகம் என்று பேசிக்கொண்டிருக்கிறன். இந்தச் சந்ததி அஹிம்சையில் நம்பிக்கைவைத்துப் போராடிக்கொண்டிருக்கிறது. இந்தப் போராட்டத்தில தமிழன் வாங்கிற ஒவ்வொரு அடியும், சிந்திற ஒவ்வொரு துளி இரத்தமும், கொடுக்கிற ஒவ்வொரு உயிர்ப்பலியும், இன்றைக்குச் சிறுவர்களாய், குழந்தைகளாய் தமிழ்ப் பெண்களின் வயிற்றில் கருக்களாய் வாழ்ந்து கொண்டிருக்கிற சந்ததிகளின் உடலிலும் உள்ளத்திலும் வீரத்தையும் வெறியையும் ஏற்படுத்திக்கொண்டே இருக்கும். இன்னும் இருபது வருஷத்துக்குப் பிறகு வாழப்போற சந்ததி எங்களைப்போல அடிவாங்கிக் கொண்டிருக்கிற சந்ததியாய் இருக்காது என்று நிச்சியமாய் நான் நம்புறன். இன்றைக்கு என்னுடைய உணர்ச்சிகளைக் கண்டு பயந்து ஒதுங்கிற நீ ஒரு காலத்தில் உன்னுடைய பிள்ளைகளின் உணர்ச்சிக்கு ஈடு கொடுக்க முடியாமல் உயிரையே விடப்போகிருய். அது மட்டும் நிட்சயம்"

அழகுமணியின் தத்துவரீதியான இந்தப் பேச்சு அங்கிருந்த அனைவரையும் மௌனத்தில் ஆழ்த்தியது. சந்திராவுக்கு உள்ள நடுக்கத்தை மேலும் அதிகப்படுத்தியது. சந்திராவின் இதயத்தில் இன்னுமொரு அச்சமும் கூடவே எழுந்தது.

அழகுமணியின் போக்கை எந்தச் சக்தியாலும் திருத்திவிட முடியாது. ஆனல் நாளடைவில் அவன் மற்றவர்களையும் தனது பக்கம் இழுத்துவிடக் கூடியவன்' அப்படி ஒரு

நிலைமை தனது கணவன் கமலநாதனுக்கு ஏற்படக்கூடாது என்பதே. இன்னும் சொல்லப்போனால் அவளுக்குப் பிறக்கும் குழந்தைகளைக்கூட இங்கு வைத்திருத்தல் கூடாது. அவை களின் பிஞ்சு நெஞ்சுகளிலே இவன் நஞ்சு ஊட்டிவிடுவான். எனவே வரப்போகும் ஆபத்தில் இருந்து அவளது குடும்பம் தப்பவேண்டுமானல் ஒரேவழி அழகுமணியிடம் இருந்து அவள் விலகியிருப்பதுதானே.

ஆயிரம் பேருக்கும் நிழல் கொடுக்கும் ஆலமரம் ஒன் றின் விழுது தன் வீட்டின் முகட்டில் ஊன்றுவதற்கு யார் தான் சம்மதிப்பார். அந்த விழுதையோ கிளையையோ தறித்து வீட்டைக் காப்பதுதான் பொருத்தமானது.

அவளது இதய உணர்வுகளைப் புரிந்து கொண்டவன் போல் அழகுமணி பேசினன். ''சந்திரா நீ இனியும் எனக் காகக் கவலைப்பட்டுக்கொண்டிருப்பதை நான் விரும்பவில்லை. என்னுடைய போராட்ட வாழ்வுகண்டு புறங்காட்டிய உனக்கென்று எல்லாவிதத்திலும் பொருத்தமான கணவனை உனக்குத் தேடித் தந்திருக்கின்றேன். உன் கணவனுக்காக வும், உன் குடும்பத்தின் எதிர்காலத்துக்காகவும் வாழ வேண்டியதே உன் கடமை. அனுவசியமாக என்னையிட்டு இனியும் நீ கலங்கிக் கொண்டிராமல் உனக்குள்ள பொறுப் பின் மீது கவனமாயிரு. அது போதும்'' என்றான்.

அவனது இந்தப் பேச்சு அவள் மனதைப் படம்பிடித் துக் காட்டுவதாக இருந்தது. அவளைக் கோழை, சுயநலக் காரி என்று குற்றஞ்சாட்டி அவமானப்படுத்துவது போல வும் இருந்தது. உறுதியான முடிவு மொழிகளை அவள் உத டுகள் உதிர்த்தன.

''உண்மைதான் அழகு. எனக்கு என் குடும்பமும் அதன் எதிர்காலமும்தான் முக்கியம். இனியும் உங்கள் நலனுக்காக நான் அழுவது என் கணவனுக்கு நான் செய்யும் துரோக மாய்கூட இருக்கலாம். இப்பொழுதுதான் நான் சரியான தொரு முடிவுக்கு வந்திருக்கிறேன். அந்த முடிவைக் கேளுங்கள்''

அவள் தன் முடிவைக் கூறியபோது எல்லோரும் வியப் போடு அவளைப் பார்த்தார்கள். கமலநாதன் கூட இந்த முடிவை எதிர்பார்க்கவில்லை. பவளத்துக்கு அழுகையே வந்துவிட்டது.



# பயணம் தொடர்கின்றது

## அத்தியாயம் 14

**உள்ளம் குளிராதோ - பொய்யாணவ**
**ஊனம் ஒழியாதோ**

— *பாரதி*

சந்திராவின் முடிவான வார்த்தைகளால் அதிகம் பாதிக்கப்பட்டவள் பவளம்தான். அவளுக்குப் பெண் இல்லாக் குறையைப் போக்கியவள் அவளே. தன் வயிற்றில் பிறக்காவிட்டாலும் அவளைத் தன் மகளாகவே கருதி வளர்த்தாள். தன் மகளாகக் கருதியவள் தன் வீட்டில் நிரந்தரமாக இருக்கவேண்டும் என்பதற்காகவே மருமகளாகவும் ஏற்க விரும்பினுள். ஆனல் அந்த எண்ணத்திலும் மண் விழுந்தது. என்றாலும் சந்திராவை அவள் வெறுக்கவில்லை. மீண்டும் தன் மகளாகவே மனதில் வரித்துகொண்டு தன் வயதான காலத்திலும் சந்திரா தன்னேடு வாழ வேண்டுமென்றே விரும்பினுள். ஆனல் அந்த ஆசைகூட இப்பொழுது நிறைவேருமல் போகிறதே என்பதனைத்தான் அவளால் தாங்கமுடியவில்லை.

அழகுமணியின் அருகில் இருந்து அவன் செயல்களை எண்ணி அவஸ்தைப்படுவதைவிட அவன் கண் காணுத இடத்துக்குப் போவதே சிறந்தது என்ற முடிவுக்கு வந்திருந்தாள் சந்திரா. அவளது கணவன் உத்தியோகம் பார்க்கும் பொலநறுவைக்கே போய்விடுவது தான் அவளது முடிவு. அதைக் கமலநாதனும் மறுக்கவில்லை. பவளமோ, அழகுமணியோ தடுக்கவும் இல்லை. அவள் தன் கணவனேடு போகத்தான் போகிருள். பிரயாணத்துக்கான ஆயத்தங்கள் நடந்து கொண்டிருந்தன.

அன்று காலை விடை பெற்றுச் செல்வதற்காக சந்திராவும் கணவனும் வந்திருந்தார்கள். அந்த ஒரு வாரத்தில் சந்திரா குடும்பம் பொலநறுவை செல்வதில் இருந்த கவலை பெருமளவு குறைந்து விட்டது.

அழகுமணியின் கையில் அன்றைய பத்திரிகை ஒன்று. அதிலிருந்த கவிதையொன்றைத் திரும்பத் திரும்பப் படித்துக் கொண்டிருந்தான். திடீரென ஏதோ நினைத்தவனாக "சந்திரா" என அழைத்தான். அவள் வந்தாள். வந்தவளிடம் அந்தக் கவிதையைக் காட்டி "இதைப் படித்துப் பார் சந்திரா" என்று கொடுத்தான். சந்திரா படித்தாள்.

கொடியேற்றும் போதினிலே
குண்டுக்குப் பலியாகிக்
குருதி பீற
அடியற்ற மரம்போல
அன்றங்கு வீழ்ந்திறந்த
அரிய வீரன்
நடராசன் கனவுகளை
நனவாக்கத் துடிக்கின்ற
நல்ல பண்பால்
திடமோடு களமேகத்
திருமலையைக் கேட்கிறதெம்
தீரர் கூட்டம்.

"எப்படி இருக்கிறது கவிதை"

"நல்லாத்தான் இருக்கிறது"

"பார்த்தாயா சந்திரா, நடராசன் தன் தியாகத்தால் கவிஞர்களின் கவிதைகளுக்குக் கூடக் கருப்பொருளாகி விட்டான்." உண்மைதான் அழகு நீங்கள் கவிதைகளுக்குக் கருப்பொருளாகவல்ல வரலாற்று வீரர்களை எல்லாம் சிரஞ்சீவிகளாக வாழவைக்கும் கவிஞனாகவே வாழவேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை. ஏன் இந்தக் கவிதையை உயிர்த்துடிப்போடு பாடியுள்ள கவிஞர் எருவில் மூர்த்தியைப் போன்று நீங்களும் வாழ முடியாதா?"

சந்திராவின் இந்தக் கேள்விக்கு அவன் உடனடியாகப் பதில் கூறவில்லை. மௌனமான புன்னகை அவன் இதழ்களில் "உண்மைதான் சந்திரா கவிஞன் எருவில் மூர்த்தியைப் போல உயிர்த்துடிப்புள்ள கவிஞனாக வாழவேணும் என்பது தான் என்னுடைய ஆசையும். ஆனால் அவருக்கு ஏற்பட்டிருக்கிற துர்ப்பாக்கியமான நிலமை எனக்கு ஏற்பட்டிருக்குமானால் நான் இன்றைக்கு உயிரோட வாழுவேனா? உயிர்த்துடிப்புள்ள கவிஞனாக இருப்பேனா என்பது சந்தேகம்தான்.

சந்திரா அவனை வியப்போடு நோக்கினாள்- "ஏன்"

"சந்திரா! அவருக்கு இரண்டு கண்களுமே இல்லை"

"என்ன?"

ஆமாம் சந்திரா, இயற்கையின் எழில்களிலே தன்னை மறந்து தான் காண்பவை தன்னைக் கவர்ந்தவை, அனைத்தையுமே கவிதையாகக் கொட்டி நேரடியாகக் காணாதவர்கள் கண்முன்னே கற்பனையில் சொற்களால் அந்தக் காட்சிகளை நிறுத்துகின்ற ஒரு கவிஞன் இருட்டுலகிலே வாழ்ந்துகொண்டே இதயத்துடிப்போடு கவிதை எழுதுவது சாதாரணமான காரியமா?...

"உங்களுக்கு இவரை நேரடியாகவே தெரியுமா?

'தெரியும், அவருடைய சொந்தப் பெயர் ஏரம்பமூர்த்தி. திருகோணமலையில் தான் வாழ்ந்தவர். மூன்றோ நாலோ வருடங்களுக்கு முன்னர் தான் வேலை கிடைத்து மட்டக்களப்புக்குப் போனார்"

"நீங்க என்ன சொல்லுறீங்க; இரண்டு கண்ணும் பார்வை இழந்தவர் என்று சொல்லுறீங்க- வேலைகிடைச்சு மட்டக்களப்புக்குப் போனார் என்கிறீங்க" "உண்மைதான் சந்திரா, அவர் பிறவியிலேயே பார்வை இல்லாதவரில்ல. போன வருஷம்தான் அவருக்குப் பார்வை போயிற்று."

போன வருஷமா?''

''ஆமாம் போன வருஷம் ஜூன் மாதம் 5ம் திகதி காலி முகத்திடல் சத்தியாக் கிரகத்தில நாங்க அஹிம்சைப் போர் செய்து அடிவாங்கினேம். ஆனல் மட்டக்களப்புத் தமிழனுக்கு அடிவாங்கிக்கொண்டு தமிழனுக இருக்கிறது பிடிக்கவில்லே. காலிமுகத்திடல் சம்பவத்துக்குப் பதிலடி கொடுக்கிற மாதிரிச் சிலசப் பவங்கள் நடைபெற்றன. இந்தச் செயல் சில தமிழின விரோதிகளுக்கு ஆத்திரமூட்டவே அப்பாவிகளான தமிழர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். ஒரு தமிழன் அந்த இடத்திலேயே இறந்து விட்டான். கவிஞன் எருவில்மூர்த்தியின் வலது பக்கமாக இருந்து பாய்ந்துவந்த துப்பாக்கிக்குண்டு ஒன்று அவரது வலப்பக்கக் கண்ணேச் சிதைத்துத் துளேத்து இடது பக்கக் கண்ணின் பார்வை நரம்புகளே அறுத்துக்கொண்டு இடது பக்கக் கன்னத்தால் வெளியேறிவிட்டது. இந்தச் சம்பவம் போன வருஷம் ஜூன் மாதம் 8ம் திகதி நடந்தது. அந்தக் குண்டின் பாதி இன்னும் அவர் கன்னத்தில் இருக்கிறதாம். பார்த்தாயா சந்திரா 'சிங்கத்தின் கால்கள் பழுதுபட்டாலும் சீற்றம் குறைவதில்லே' கண்களேயே இழந்த பின்னர் கூட அந்தக் கவிஞனின் சிந்தனேக் கண்கள் இருண்டுவிடவில்லே.''

சந்திராவின் கண்கள் கலங்கின, சற்றுநேரம் எதுவுமே பேசாதவளாக இருந்தாள். பிறகுபேசினுள். அவள் குரலில் சோகமும், கனிவும் இருந்தது.

''அழகு என்னே மன்னித்து விடுங்க- நான் கோழை. தாம் காணுவது கற்பனே என்ருலும் அந்தக் கற்பனே யோடேயே ஒன்றித்து வாழுகின்றகவிஞர்களோடுஒன்றித்து வாழும் துணிவு எனக்கு இல்லே. இப்படிப்பட்டவர்களுக்குத் துணேயாக வாழ்வதற்கு வேண்டிய தியாகச் சிந்தையும், வீரமும்எனக்கில்லே. அதனுலதான் நான்புறமுதுகுகாட்டி ஓடி விட்டேன். நீங்க இனிமேல் உங்கட இலட்சியப் பயணத்தை

தொடங்குங்க அதற்கு நான் எந்த விதத்திலும் தடையாக இருக்கப்போறதில்லே. நான் என் கணவனுக்கு விசுவாசமுள்ள பனேவியாகவும் இந்தக் கவிஞனின் உண்மையான இரசிகையாகவும் வாழுகிறதுதான் என் இலட்சியம். நான் உலகத்தில் எந்த மூலேயில் இருந்தாலும் உங்கள் இரசிகையாகவே வாழ்வேன். உங்கட கவியுள்ளத்தில் இது வரையில் ஏற்படுத்தின காயங்களுக்காக மன்னிப்புக் கோருகிறேன்.''

அப்பாடா இப்பொழுதாவது அவள் என்னே உணர்ந்தாளே என்ற நிறைவில் நிம்மதியான பெருமூச்சொன்று அவனிடமிருந்து கிளம்பியது. அவள் மனமாற்றத்துக்குக் காரணமான கவிஞர் எருவில்மூர்த்திக்கு இதயத்தால் நன்றி கூறினன்.

சந்திரா குடும்பம் பொலநறுவையில் குடியேறி ஆண்டு ஒன்று கடந்துவிட்டது. அந்த ஒரு வருடத்தில் இரண்டு தடவைகள் திருகோணமலேக்கு வந்து போய்விட்டாள். எப்படியும் வாராவாரம் அவளிடமிருந்து கடிதம் வந்து கொண்டே இருக்கும். சந்திரா தாய்மையடைந்திருந்தாள். ஜூன்மாதத்தில் பிரசவத்துக்காக திருமலேக்கு வரவிருப்பதாகக் கடைசியாக வந்த கடிதத்தில் குறிப்பிட்டிருந்தாள்.

சந்திரா தாய்மை அடைந்ததன் பின்னர் அழகுமணி அவளேக்காணவில்லே. பொலநறுவைக்குச் சென்று அவளேப் பார்க்கவேண்டும் என்ற ஆவல் இருந்தும்கூட போகமுடியாத அளவுக்குக் கடமைகள் அவனேத் தடைசெய்து கொண்டிருந்தன.

1958ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8ம் நாள் பிரதமர் பண்டாரநாயக்கா எடுத்த முடிவு தமிழினத்தையே கொதிப்படயச் செய்திருந்தன. மொழி உணர்வைத் தூண்டிவிட்டு அதன்மூலம், ஆட்சியில் அமர்ந்த பிரதமரால் அவர் சிங்கள மக்களுக்கு வாக்களித்த தனிச் சிங்களச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியவில்லே.

திருமலை மாநாட்டில் கொடுத்த காலக்கெடுவான 1958 ஆகஸ்ட் 20ம் நாள் நெருங்கிக்கொண்டிருந்தது. இடையிடையே தமிழர்கள் நடாத்திய கறுப்புக் கொடிப் போராட்டங்கள்- பகிஷ்கரிப்புகள் யாவும் தமிழை (This on of the lowest of the Indian Languages) இந்திய மொழிகளிலே மிகவும் கீழ்த்தரமான ஒரு மொழி என்று நாத்தடிப்புடன் கூறிய பிரதமரை நடுங்க வைத்தன. இறுதியில் இறங்கி வந்தார். சமாதானத் தூதுகள் மூலம் இணங்கி வந்தார். ஒப்பந்தம் செய்வோம் என்ற உடன்பாட்டிற்கு வந்தார்.

1957 ஜூலை 26ம் நாள் தமிழருக்கு ஓரளவு பாது காப்பளிக்கக்கூடிய அந்த பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம் நள்ளிரவில் கைச்சாத்திடப்பட்டது. 1958 ஆகஸ்ற் 20 விடுத்த போராட்டமும் கைவிடப்பட்டது.

தமிழனுக்கு ஓரளவு உரிமைகள் தானும் கிடைப்பதை விரும்பாத சில எதிர்ப்புச் சக்திகள் வெறியாட்டம் ஆடின. 'முதல் அடி' என்ற முகப்பிட்ட பிரசுரங்கள்- தமிழருக்கு சிங்கள இனம் விற்கப்பட்டது, என்ற பிரச்சாரங்கள் ஜே. ஆர். ஜெயவர்த்தன தலைமையிலான கண்டன ஊர் வலம், பௌத்த பிக்குகளின் போராட்டங்கள், மீண்டும் தமிழினம் கொதித்தெழுந்தது. மீண்டும் சிறீ எதிர்ப்புப் போராட்டங்கள்- தொண்டர்கள் கைது. தமிழ் எழுத்துக் களை மலையகத்தில் அழித்தவர்களுக்கு எதிராகப் போர்க் கொடி தூக்கியகாரணத்துக்காக- மலையகத் தொழிலாளர் களான பொகவந்தலாவைத் தமிழ் மறவர்கள் பிரான்சிஸ் ஐயா ஆகியோர் பொலிசாரின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாகினர்.

ஒருகாலத்தில் கிறீஸ்தவராக இருந்து பதவிக்காக பௌத் தனுக மாறிய பண்டாரநாயக்காவைப் பௌத்த பிக்குகளின் போராட்டம் பணியவைத்தது. எனவேதான் ஒப்பந்தம்

கைச்சாத்திடப்பட்ட எட்டு மாதங்களின் பின்னர் 1958 ஏப்ரல் 8ம்நாள் தமிழ்த் தந்தை செல்வநாயகத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை அவரது ஆலோசனையைக் கேட்காது கிழித்தெறிந்ததால் அதன் மூலம் 25 இலட்சம் தமிழர்களின் இதயங்களை அவர்களின் ஏக்கங்களைக்கிழித்தார்.

நம்பி ஏமாந்த தமிழன் மீண்டும் போராடவேண்டும் என்ற முடிவுக்கு வந்தான். இந்நிலையை ஆராய மே மாதம் 23ம் 24ம் 25ம் திகதிகளில் வவுனியாவில் மாநாடு கூட்டுவது என்று தமிழ்த் தலைவர்கள் தீர்மானித்தனர். மாநாடு ஆரம்பமானது. அழகுமணியும் அதற்குச் சென்றிருந்தான். மாநாட்டில் கூடியிருந்தவர்களை ஏன் இலங்கைத் தமிழ் இனத்தையே சலங்கவைக்கும் பயங்கரச் செய்திகள் மாநாட்டின்போது எட்டியது.

மாநாட்டில் கலந்து கொள்ள மட்டக்களப்பில் இருந்து தொண்டர்கள் வந்த புகையிரதம் பொலநறுவையில் அடித்து நொருக்கப்பட்டது.

பொலநறுவையில் நகர சுத்தித் தொழிலாளி அடித்துக் கொலை செய்யப்பட்டார். கர்ப்பிணிப் பெண் ஒருத்தி நடு வீதியில் வைத்து வயிறுகிழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டாள்.

இந்த உண்மையான செய்திகளைக் கேட்டதும் அழகு மணியின் உதிரம் உறைந்தது. பொலநறுவையில் இருக்கும் கர்ப்பிணியான சந்திராவுக்கும் கணவனுக்கும் என்ன நடந்ததோ என்று கலங்கினான்.



# பயணம் தொடர்கின்றது

## அத்தியாயம் 15

........ .. ................................... .. நிதம்

பரிதவித்ததே உயிர் துடிதுடித்துத்

துஞ்சி மடிகின்றாரே - இவர்

துயர்களைத் தீர்க்கவோர் வழியில்லையே!

— *பாரதி*

பொலநறுவையில் இனக்கலவரம் ஆரம்பமானதைக் கேள்விப்பட்டு வவுனியாவில் நின்றவாறே அங்கு புறப்படத் துணிந்த அவனைத் தடுத்தனர். அவன் செய்யத் துணிந்தது பைத்தியகாரத்தனமான செய்கையென்று கூறினர். ஆனால் சந்திராவுக்கும், கமலநாதனுக்கும் என்ன நடந்திருக்குமோ என்பதை எண்ணும் போது எந்தவித ஆபத்துக்களையும் எதிர்கொள்ளத் தயாரானவனாக உடனே புறப்பட்டு விட்டான்.

ஆனால் அவன் புறப்பட்ட தன் பின்னர் பிரயாணத்தின் போது மற்றவர்கள் பேசிக் கொண்டதுகளைக் கேட்கும் போது அவன் எத்தகையதொரு ஆபத்தான செய்கையில் இறங்கியிருக்கின்றான் என்பதை உணர்ந்து உள்ளம் நடுங்கினான். சந்திராவும் கமலநாதனும் உயிரோடு இருக்கிறார்களா என்பதை அறியுமுன்னர் தான் உயிரோடு பொலநறுவையைச் சென்றடைவேனோ என்ற ஐயம் அவனுக்கு ஏற்பட்டது.

நகரசுத்தித் தொழிலாளி ஒருவன் அடித்துக் கொல்லப் பட்டான் என்றும், பிரசவத்தை எதிர்நோக்கியிருந்த பெண் ஒருத்தி நடுவீதியில் வைத்து வயிறு கிழிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டாள் என்றும் மற்றவர்கள் பேசுவதைக்கேட்க கர்ப்பிணியாகவிருந்த சந்திராவையே அவன் கற்பனை பண்ணிப் பார்த்தான். அப்படி ஏதும் அவளுக்கு நடந்திருந்தால்! அவன் இரத்தமெல்லாம் உறைவது போலிருந்தது.

அழகுமணி வழியில் எவரோடும் பேசிக்கொள்ள வில்லை. மௌனமாகவே இருந்தான். ஒருவகையாகப்

பொலநறுவையை போயடைந்தான். பொலிஸ் பாதுகாப்பு அதிகமாகவிருந்ததால் மனதில் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு சந்திராவின் வீட்டை நோக்கி நடந்தான்.

சந்திராவின் வீட்டை அடைந்தபோது, அவன் அறிந்து கொண்ட செய்திகள் அவனை அதிரவைத்தன. கமலநாதன் வைத்தியசாலையில் மரணப்படுக்கையில் இருப்பதாகவும், சந்திரா பொலநறுவையில் அகதிகள் முகாமில் இருப்பதாகவும் அறிந்து துடித்தான். தொடர்ந்து என்ன செய்வது என்று புரியாதவனுகக் கலங்கினுன்.

சிங்கள மக்கள் எல்லாரும் கொடியவர்கள் அல்ல என்பதற்குச் சான்ருக சந்திராவின் பக்கத்து வீட்டில் குடியிருந்த குடும்பம் விளங்கியது. முன்னர் ஓரிரு தடவைகள் அழகுமணி சந்திரா வீட்டுக்குச் சென்றிருந்தபோது அவர்கள் அவனுக்கும் அறிமுகமாகியிருந்தனர். அவர்கள்தான் சந்திராவுக்கும் கமலநாதனுக்கும் நிகழ்ந்த கொடுமைகளை முதலில் சொன்ஞர்கள்.

அழகுமணி அந்த ஆபத்தான சூழ்நிலையில் அங்கு வந்ததையே அவர்கள் விரும்பவில்லை. அவனை வெளியே நிற்க விடாமல் உடனே வீட்டிற்குள் அழைத்துச்சென்று உபசரித்தார்கள். பின்னர் அவர்களே கமலநாதன் அனுமதிக்கப்பட்டிருந்த வைத்தியசாலைக்கும், பின்னர் சந்திரா இருந்த அகதிகள் முகாமுக்கும் பாதுகாப்பாக அவனை அழைத்துச் சென்றனர்.

கமலநாதனை வைத்தியசாலையில் அந்தக் கோலத்தில் கண்டதும் அவன் திடுக்கிட்டுப் போஞன். ஆளே உருவம் தெரியாத அளவுக்குக் கொடியவர்கள் அவனைச் சிதைத்திருந்தார்கள். உடம்பெல்லாம் ஏற்பட்டிருந்த வெட்டுக்காயங்களுக்குக் கட்டுப் போடப்பட்டிருந்தும் அழகுமணி பார்க்கச்

சென்றிருந்தபோது அவன் சுய நினைவுடனேயே இருந்தான். டாக்டரும், தாதிமாரும் அவனை அதிகம் பேச அனுமதிக்க வேண்டாம் என்று சொல்லிவைத்தனர்.

அழகுமணியைக் கண்டதும் கமலநாதன் குமுறிக் குமுறி அழுதான். அழகுமணி எவ்வளவுதான் ஆறுதல் கூறிய போதும் அவனால் அடங்கி இருக்க முடியவில்லை. தான் சொல்லவேண்டியவை யாவற்றையும் சொல்லிவிடவேண் டும் என்ற தவிப்பும் வேகமும் அவனிடம் காணப்பட்டது. தன்மனதில் இருப்பனவற்றையெல்லாம் சொல்லுமுன்னர் தன் உயிர் பிரிந்துவிடுமோ என்ற அச்சம் அவனுள் குடி கொண்டிருந்தது. மெல்லிய குரலில் அவன் பேசினான்.

''அழகு .. எங்கே உன்னையெல்லாம் காணாமல் நான் போய்விடுவேனோ என்று பயந்துகொண்டிருந்தன். ஆனால் கடவுள் என்னைக் கைவிட இல்லை. என் கடைசிக் கடமையை செய்யிறதுக்கு எனக்குச் சந்தர்ப்பம் தந்திருக்கிறார்.''

''கமலநாதன் உனக்கு ஒன்றும் நடக்காது... நீ சுகமாகி வரத்தான் போறாய் இப்ப எதற்கு இந்தப் பேச்செல்லாம்?''

கமலநாதன் இதழ்களில் மெல்லிய இளநகையோடியது.

''என்னையே நான் ஏமாற்றிக் கொள்ள விரும்பேல்ல அழகு. உன் பேச்சைத் தடுத்து வாதாடக்கூடிய நிலையில நானில்லை. அதனால என்னோட வாதாடாமல் நான் பேசு றதுக்குச் சந்தர்ப்பம் தா... நான் சொல்லுறதைமட்டும் கவனமாகக் கேளு.''

அழகுமணிக்குக் கமலநாதனின் உண்மை நிலைமை புரிந் தது. எனவே அவன் சொல்லுவதை அமைதியாகக் கேட் கத் தொடங்கினான்.

''அழகு... உன்னுடைய பெரியவட்டத்துக்குள்ள வாழ அஞ்சி என்னுடைய குறுகிய வட்டத்துக்குள்ளே நானும் என் குடும்பமும் வாழ நினைச்சோம்... ஆனால் உன்னுடைய

இந்தப் பெரிய வட்டத்துக்குள்ளதான் என்னுடை குறுகிய வட்டமும் இருக்குது என்கிறதை நான் நினைக்க இல்லே. இப்போ ஆபத்தை தவிர்க்க நினேச்ச நாங்க பலியாகிற்ரேம்...... எனக்கு வாழக்கிடைச்ச கொஞ்சக் காலத்தையும் உன்னைப்போல பயனுள்ளதா வாழ்ந்திருக்கலாம் என்று நினைக்கிறன்.''

இவ்வளவையும் ஒரே மூச்சில் பேசி முடித்ததும் தொடர்ந்து பேசமுடியாதவனுகக் கமலநாதன் இளேத்தான்.

''போதும் கமலநாதன் நீ அதிகம் பேசக்கூடாது.''

''நான் இப்போ பேசாட்டி... இனிமேல் உன்னேடை பேசக்கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லே அழகு... எனக்கு உள்ள ஒரு பெரிய குறை என்னதெரியுமா? சந்திராவோட இந்த மூன்று வருஷமும் நான் நடத்தின அன்பான குடும்ப வாழ்க்கையில எங்களுடைய அன்பின் சின்னமாய் பிறக்கப்போற பிள்ளையைப் பார்க்காமல் போகப் போறேனே என்றுதான்... அழகு இனிமேல் நீதான் என் பிள்ளைக்குத் தகப்பனு இருந்து எல்லாத்தையும் கவனிக்க வேணும்...'

'தகப்பனுயிருந்து' என்ற அந்த வார்த்தையிலே இன்னுமொரு பொருள் இருப்பதை உணர்ந்த அழகு அவனைக் கடிந்துகொண்டவனுக ''கமலநாதன் இதுவெல்லாம் என்ன பேச்சு?'' என்ருன்.

அழகுமணியின் குரலில் இருந்தக் கண்டிப்பை உணர்ந்து கொண்டகமலநாதன் மெல்லச் சிரித்தான். அவன் கண்கள் பேசின... தொடர்ந்து 'விதவைகளுக்கு மறுவாழ்வு கொடுக்கிறதைப்பற்றி நீ என்ன நினைக்கிருய்...''

''கமலநாதன் நீ இப்படியெல்லாம் பேசினல் நான் இதில நிற்கமாட்டன்.''

கமலநாதனின் கரம் ஒன்று அழகுமணியின் கரத்தை இறுகப் பற்றிக்கொண்டது. அவன் கண்கள் கலங்கின.. ''நான் இப்படிப் பேசுறதையிட்டு நீ கோபிக்காத அழகு.. என்னுடைய வேண்டுகோளை நீ நிறை வேற்ருமல் போகலாம்... ஆனல் சாகப்போகிற உன்னுடைய நண்பனுடைய ஆத்ம திருப்திக்காகவென்ருலும் நான் சொல்லுறதைக் கேளு'' அவன் கண்கள் இப்பொழுது கெஞ்சின.

''சந்திரா நீ எனக்குத் தந்த உன்னுடைய சொத்து. அது நான் இல்லாத காலத்தில உன்னைவந்து சேருறதில என்ன தவறு... காலையில என்னைப் பார்க்கவந்த சந்திராவிடமும் நான் இதைத்தான் சொன்னேன். அவள் என்னேட கோபித்துக்கொண்டு போயிற்ருள்... நான் செத்த பிறகும் என் மனைவி விதவையாக... ஒதுக்கப்பட்டவளாக என் நினைவாகவே தவம் கிடக்க வேண்டும் என்று எண்ணுற குறுகின புத்தி எனக்கில்லை...''

தான் மரணப்படுக்கையில் கிடக்கையில் தன் மனைவி மறுமணம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்ட, புரட்சிக் கவிஞன் பாரதிதாசனின் முற்போக்குச் சிந்தையில் பிறந்த சயரோகக் கணவனின் உயிர் வடிவமாக அழகுமணிக்குக் கமலநாதன் தோன்றினன்.

''வேறு எதுக்காக இல்லாட்டிலும் என் குழந்தையை உன் குழந்தையாய் வளர்த்தெடுக்கவேணும் என்கிறதுக்காக என்ருலும் நீ என் கோரிக்கையை நிறைவேற்றணும் என்று நான் விரும்புறன். ஆனல் உன்னை நான் வற்புறுத்தவில்லை... அது உன்னுடைய விருப்பத்தைப் பொறுத்தது.

இவ்வளவையும் மூச்சு விடாமல் பேசிய அவன் மிகவும் உணர்ச்சி வசப்படிருந்தான். அவன் கண்களில் ஒரு சோர்வு. இன்னும் எதுவோ பேச முயன்ருன் முடியவில்லை... அவன் கண்கள் மேலே சொருகிக் கொண்டன... கை சோர்ந்து படுக்கையில் விழுந்தது.

அழகுமணி பயந்துபோய் ''கமலநாதன்'' என்று அலறியே விட்டான்... சத்தம்கேட்டு 'நேர்ஸ்' ஓடிவந்தாள்...

கமலநாதனுக்கு மூச்சு வந்துகொண்டிருந்தது.

''அவரை அதிகம் பேச விடவேண்டாம் என்று சொன்னேன். நீங்கள் அதிகம் பேச்சுக் கொடுத்துவிட்டீர்கள்.'' என்று அவள் கடிந்து கொண்டாள். தொடர்ந்து அவள் கமலநாதனின் மயக்கம் போக்கும் சிகிச்சையில் ஈடுபட்டாள்.

அழகுமணிக்கு நெஞ்சம் அடித்துக்கொண்டது. இதுவரையும் அவன் பேசிக்கொண்டிருந்தவைகள் அவன் மனதில் மீண்டும் மீண்டும் ஒலித்துக் கொண்டிருந்தன. எத்தனை பெரிய ஆசைகளையெல்லாம் சுமந்துகொண்டு கமலநாதனின் உடற்கூடு உயிரோடு போராடிக்கொண்டிருக்கிறதோ என்று கலங்கினன்.

தொடர்ந்தும் இவன் அங்கு நிற்பதை டாக்டரோ தாதியோ விரும்பவில்லை. கமலநாதனுக்கு மீண்டும் நினைவு திரும்ப எவ்வளவு நேரம் பிடிக்குமோ என்றும் தெரியவில்லை. அப்படித்தான் நினைவு திரும்பினாலும் அவனைத் தொடர்ந்து பேசுவதற்கும் அவர்கள் அனுமதிக்கப்போவதில்லை. கமலநாதனைப் பார்த்தாயிற்று. இனிச் சந்திராவைக் கண்டு அவளுக்கு ஆறுதல் கூறவேண்டும் என்ற எண்ணம் வேறு எழுந்து தவிக்கச் செய்தது. ஆனால் கமலநாதனை இந்த நிலையில் எப்படி விட்டுப் போவது என்ற எண்ணமும் எழுந்து தடுத்தது.

உயிரோடு போராடிக்கொண்டிருக்கும் கமலநாதனின் முகத்தைக் கூர்ந்து பார்த்தான். அந்த உருவத்துக்குள் தான் எத்தனை உயர்ந்த இலட்சியங்கள்! சந்திரா இவனைக் கணவனாகப் பெறக் கொடுத்து வைத்தவள். கடவுளே இவனுக்கு ஒன்றும் நிகழ்ந்துவிடக்கூடாது, என்று மானசீகமாக வேண்டிக்கொண்டான்.

இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தவனாக அங்கிருந்து கிளம்பத் தீர்மானித்தான். அங்கு அரசாங்க அதிபரினால் அமைக்கப்பட்டிருக்கும் அகதி முகாம் இருக்கும் இடத்தை தாதி ஒருத்தியிடமே விசாரித்து அறிந்து கார் ஒன்றினை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு புறப்பட்டான்.

தமிழன் ஒருவன் தனித்து வாடகைக் காரில் போவது கூட ஆபத்தானது. எனவே அதே தாதிதான் நம்பிக்கைக்குரிய கார் ஒன்றினை ஒழுங்கு செய்து கொடுத்தாள்.

வீதிகளில் எரிந்த வீடுகள், கடைகள், நடந்து முடிந்த அவலங்களுக்கு சாட்சிபகர்ந்து கொண்டிருந்தன. அகதி முகாமைக் கார் சென்றடைந்தது.

அகதி முகாமைச் சுற்றிப் பலத்த காவல் போடப்பட்டிருந்தது. பரிதாபமான கோலத்தில் சந்திராவைக் காணப் போகின்றோமே என்பதை எண்ணுகையில் மனம் தீவிரமாக அடித்துக் கொண்டது.

காரைவிட்டு இறங்கினான். பேசிய தொகையைச் சாரதியிடம் கொடுத்துவிட்டு முகாமை நோக்கி நடை போட்டான்.

இன்னும் சிறிது நேரத்தில் அவனுக்கு மட்டுமல்ல, அங்கு இருந்தவர்கள் அனைவருக்கும் பேரதிர்ச்சி அளிக்கக் கூடிய பயங்கரம் காத்துநின்றது.



# பயணம் தொடர்கின்றது

## அத்தியாயம் 16

"எண்ணற்ற நல்லோர் இதயம் புழுங்கியிரு
கண்ணற்ற சேய்போற் கலங்குவதும் காண்கிலையோ?"

— பாரதி

அன்றைய இனக்கலவரத்தின் போது காவல்துறையினர் ஆற்றிய சேவையும், தமிழ் மக்களுக்குக் கொடுத்த பாதுகாப்பும் இன்றியமையாதன. இன மத உணர்வுகளைக் கடந்து தேசத்தின், பொது மக்களின் காவலர்கள் தாங்கள் என்ற உணர்வோடு செயல்பட்டனர் என்பதற்கு பொலநறுவை அகதிகள் முகாமில் நடந்து முடிந்த சம்பவங்கள் சாட்சி.

முகாமுக்கு வந்த அவன், சந்திரா பற்றிய விபரங்களைக் கொடுத்து முகாமின் பொறுப்பதிகாரியிடம் விசாரித்துக் கொண்டிருக்கையில்தான் அந்தப் பயங்கர சம்பவம் நிகழ்ந்தது.

முகாமை நோக்கிப் பெரும் காடையர் படையொன்று திரண்டு வந்துகொண்டிருந்தது. அவர்கள் கைகளில் எல்லாம் பயங்கர ஆயுதங்கள். வீடுகளில் இருக்க அஞ்சி முகாமில் தஞ்சம் புகுந்திருந்த தமிழ் அகதிகளை ஒன்ருகச் சிதைத்து அழிப்பதுதான் அவர்களின் நோக்கம்.

வருபவர்களின் நோக்கத்தை அறிந்த காவல்துறையினர் அவர்களைத் திரும்பிப் போகும்படி எச்சரித்தனர். அவர்கள் திரும்பிப் போவதாய் இல்லை. காவலர்கள் சிங்களவர்கள் என்ற எண்ணமும், காடையர்களுக்குப் பின்துணையாக நின்ற அரசியல் சக்திகளின் பலமும் அவர்களுக்கு அப்படியொரு துணிவை ஊட்டியிருந்தன. அவர்கள் காவற்துறையினரின் எச்சரிக்கையை அசட்டை செய்தது மட்டுமல்ல காவல்துறையினரை அவமானப்படுத்தும் வகையில் கேலி செய்யவும் தொடங்கினர்.

* அவர்களில் முன்னணியில் வந்துகொண்டிருந்தவன் தனது இடையில் கட்டியிருந்த ஆடையை உயரத் தூக்கி நிர்வாண நடனம் ஆடினன். அந்தக் குண்டர் படை முகாமை நெருங்கிவிட்டது. நிலைமை கட்டுக்கடங்காமல் ஆபத்தை நெருங்குகின்றது என்பதைக் கண்ட காவல் துறைப் பொறுப்பதிகாரியிடம் இருந்து கட்டளை பிறந்தது. தொடர்ந்து காவல்துறையினரின் துப்பாக்கிகள் குண்டு களைக் கக்கின. குண்டர்களில் முதலில் சுருண்டு விழுந்தவன் நிர்வாண நடனம் ஆடியவனே.

தொடர்ந்து மூவர் அவ்விடத்திலேயே சுருண்டு வீழ்ந் தனர். இப்படியானதொரு எதிர்த் தாக்குதலை எதிர்பாராத குண்டர் கூட்டம் சிதறி ஓடியது. அங்கு நடக்கவிருந்த பயங்கர சம்பவம், கசாப்புக் கடைக் காட்சி காவல்துறை யினரின் சமயோசிதமான உடன் நடவடிக்கையால் தவிர்க் கப்பட்டது. ஆனல் அந்தக் காடையர்கள் கொல்லப்பட்ட தற்கு பொலநறுவையின் அன்றைய பாராளுமன்றப் பிரதி நிதி கண்டனம் தெரிவித்ததாகவும் தெரியவருகிறது.

ஆனல் காவல்துறையினரின் துரித நடவடிக்கை தீவிர மடைந்தது. அந்தச் சுற்ருடல்களில் மழித்த தலையும் மஞ் சள் உடையுமாகத் தோன்றிய புதிய முகங்கள் அனைத்தை யும் கைது செய்தனர். புனிதரான புத்தபகவானின் தொண்டர்களின் உடைக்குள் குண்டர்கள் புகுந்து செய்ய முற்பட்ட தீமைகளும் அதனல் தடுக்கப்பட்டன.

அழகுமணி இன்னும் சில நிமிடங்கள் தாமதமாக வந் திருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதைக் கற்பனை

---

* பொலநறுவையில் நடந்ததாகக் கூறப்படும் கலவரச் சம்பவங்கள் திரு. தாஸி வித்தாச்சி எனும் பிரபல சிங்கள எழுத்தாளரால் எழுதப்பட்ட "EMERGENCY 58" எனும் நூலில் இருந்து எடுக்கப்பட்டன.

பண்ணிப் பார்க்கவே அவனுக்கு நடுக்கம் எடுத்தது. இறைவனுக்குத் தன் இதயத்தால் நன்றி கூறிக்கொண்டான்.

சந்திராவுக்கு ஏற்பட்ட முதல் அதிர்ச்சியோடு அவள் கண்முன்னுலே நிகழ்ந்துவிட்ட இந்த நிகழ்ச்சிகளும் சேர்ந்து அவளைக் கலங்கடித்துக் கொண்டிருந்தது. அந்தக் கலக்கமான நிலையில் அவள் முன்னே அழகுமணி திடீரென்று தோன்றியதை அவள் கண்களால் நம்பவே முடியவில்லை. அந்த அதிர்ச்சியில் இருந்து மீளச் சில விநாடிகள் எடுத்தன.

''அழகு...'' என்று அலறியவளாக அவன் கால்களைக் கட்டிக்கொண்டு அழுதாள். அந்த நிலைமையில் அவளுக்கு எப்படி ஆறுதல் கூறுவது என்று தெரியாமல் அவனும் அழுதான். அவள் அழுகை அடங்க சில நிமிடங்கள் எடுத்தன.

கலைந்த முடியும் - கசங்கிய உடையும் - அழுதே காய்ந்து கறுத்த முகமுமாக சந்திரா காணப்பட்டாள். முகாமில் கொடுக்கப்பட்ட உணவைக்கூட உண்ணும் நிலையில் அவள் இல்லை. அதிலும் சர்ப்பிணியாக இருந்த அவள் தோற்றம் இன்னும் பரிதாபமாக இருந்தது.

''சமரசம் உலாவுமிடமே'' என்று மயானத்தைப் பற்றி ஒரு கவிஞன் பாடியிருக்கிறுன். ஆனுல் அவன் கூற்றைப் பொய்யாக்குவது போல் இருந்தது, அந்த முகாமின் தோற்றம். அந்தக் கவிஞன் இப்படி ஒரு முகாமைப் பார்த்திருப்பானுகில் நிச்சயமாக சமரசம் உலாவும் இடமாக அகதி முகாமைத்தான் பாடியிருப்பான்.

நேற்றுவரை சொந்த வீடுகள்-தன் குடும்பம்-சுகபோக வாழ்வு என வாழ்ந்தவர்களில் பலர் இன்று அனைத்தையும் இழந்தவர்களாக, தம் நிலையை மறந்தவர்களாக, ஓர் ஊரே குடும்பமாகியதுபோல் அங்கு கூடியிருந்தனர். ஒவ்வொருவரும் தமக்குத் தமக்கு நடந்த நிகழ்வுகளைத் திரும்பத்

திரும்பக் கூறி மற்றவர்களுக்கு நிகழ்ந்தவைகளோடு தமது அனுபவங்களை ஒப்பிட்டுப் பார்த்துக்கொண்டனர்.

சந்திராவும் தனக்கு நிகழ்ந்தவற்றைக் கண்ணீர் மல்க அழகுமணியிடம் விபரித்துக் கொண்டிருந்தாள். அவள் குரல் இடைக்கிடையே அழுகுரலாகித் தளதளத்தது.

ஊரில் அசம்பாவிதங்கள் நடைபெறுவதைக் கேள்விப் பட்டதுமே கமலநாதன் வீட்டைவிட்டு வெளியே கிளம்பா மல் உள்ளேயே இருந்தான். நடைபெற்றுவரும் பயங்கரங் களைக்கேள்விப்படக் கேள்விப்பட இருவருக்கும் கலக்கமாகவே இருந்தது. அதிலும் கர்ப்பிணிப் பெண் ஒருத்தி வயிறு கிழிக்கப்பட்டு கொல்லப்பட்டாள் என்ற சேதி அவளுக்கு நடுக்கத்தையே ஏற்படுத்திவிட்டது. அவளால் எழுந்து ஒரு வேலையைச் செய்வதற்குக்கூட முடியாமல் இருந்தது. கமலநாதனின் அணைப்பிலேயே அவள் இருக்க விரும்பினாள்.

அப்பொழுதுதான் கமலநாதன் கூறினான் ''சந்திரா, இந்த நிலைமையிலதான் அழகுமணியினுடைய போக்கில இருக்கிற நியாயங்களை என்னால் ஏற்றுக்கொள்ளமுடியுது, நாம, நம்மட குடும்பம் என்று ஒதுங்கிவாழ நினைச்சாலும் இனத்துக்கு ஓர் ஆபத்து என்று வருகிறபோது அந்த இனத் தில நாமும் ஒருவர் என்றதால நாமும் பாதிக்கப்படு கிறோம். இந்தா பாரு, நம்மைப்போல எத்தனை பேரு இன் றைக்கு உயிரைக் கையில் பிடிச்சுக்கொண்டு கலங்கிப்போய் நிற்கிறோம். இந்த எங்களுடைய கலங்கின நிலைமை நம்மட இனத்துக்கு நிரந்தரமானதாக மாறிவிடக்கூடாது என் பதற்காகத்தான் அழகுமணி மாதிரி உள்ளவங்க தங்கட உயிரையும் பொருட்படுத்தாமல் உழைக்கிறாங்க. நாங்க இப்போ எங்கட உயிரைக் காப்பாற்றிக் கொள்ளத் தவிக்கிறோம்''

திடீரென்று கமலநாதன் கேட்டான் ''சந்திரா, இந் தக் கலவரத்தில எனக்கு ஏதும் நடந்துவிட்டால் நீ என்ன செய்வாய்?''

இப்படி அவன் கேட்டுவிட்டதை அவளால் தாங்கிக் கொள்ளமுடியவில்லை "சும்மா விசர்க்கதை கதைக்காதீங்க. உங்களுக்கு ஏதும் நடந்தால்... அது எனக்கும்தான் நடக்கும். இரண்டு பேருமே ஒன்ருய்ப் போவோம்"

"அது எல்லாம் உன் கையில இருக்கு... சந்திரா, நான் சொல்லுறதைக் கேளு. இந்த நிலைமையில் எதுவும் நடக்கலாம். ஒருவேளை எனக்கு ஏதும் நடந்து நீ உயிர் தப்பிற்ரு.. என் பிள்ளையைக் கவனமாய் வளர்த்து எடுத்துப் போடு. இந்தாபாரு, இந்தக் கொலைகளையும் கொடுமைகளையும் நீ நேரிலேயே கண்டு பெறுகிற அனுபவங்களையும் உணர்வுகளையும் உன் வயிற்றில் வளர்ந்தவாறே பெற்றுக் கொண்டிருக்கிற நம்ம குழந்தை... எதிர்காலத்தில எங்களுடைய உணர்வுகளிலும, கொள்கைகளிலேயும் முற்றிலும் மாறுபட்டதாகத்தான் வாழப்போகுது. இப்போ அழகுமணியும் கூட்டமும் அகிம்சை, சத்தியாக்கிரகம் என்று திரியுருங்க... ஆனல் இன்னும் இருபது இருபத்தைஞ்சி வருஷத்துக்குப் பிறகு இருக்கப்போற சமுதாயம்... இந்தக் காந்தீயப் போராட்டத்திலையெல்லாம் நம்பிக்கை இல்லாத சமுதாயமாகத்தான் மாறும்"

"உங்களுக்கு வேற பேச்சு இல்லாட்டி பேசாமல் இருங்களேன்"

"இல்லைச் சந்திரா... நான் யதார்த்தமாய்தான் சிந்திக்கிறன். அழகுமணி நல்லவன்... பரந்த இலட்சியத்துக்காக வாழ்கிறவன்... எனக்கு ஏதும் நடந்தால் என் பிள்ளையை அவனிடமே ஒப்படைச்சிடு. அவனைப் பெத்த அப்பனை அழிச்ச சக்திகளைப் பழிவாங்கிற பிள்ளையாக என் பிள்ளையை அவன் வளர்த்தாலும் நீ அதுக்குத் தடையாக நிற்கக் கூடாது.."

நாவண்ணன்

சந்திரா அவனை முறைத்துப் பார்த்தாள். ''இன்னும் ஏதாவது சொல்லப் பாக்கி இருக்கா?'' என்று எரிச்சலோடு கேட்டாள்.

''இன்னுமொரு மிக முக்கியமான விஷயம் இருக்கு. எனக்கு ஏதும் நடந்திற்று உனக்கும் பிள்ளைக்கும் அழகு மணியைத் தவிர வேறு ஆதாரமே இல்லை. நீங்கள் இரு வரும் சம்மதிச்சா மீண்டும் ரெண்டுபேரும் சேர்ந்து வாழ வேணும் என்று விரும்பிறன்.''

கமலநாதனின் இந்த மொழிகளைக் கேட்டதும் சந்திரா வின் ஆத்திரம் எல்லைமீறிப் போனது. கணவன் என்றுகூட மதிக்காமல் அவன் முகத்தில் ஓங்கி அறையவேண்டும்போல் இருந்தது. அவள் தனது உள்ளத்து உணர்வை வெளிப் படுத்து முன்னரே அங்கு நிலைமை மாறிவிட்டது...

வீட்டுக்கு வெளியே ஆட்கள் நடமாடும் சப்தம்... தொடர்ந்து கதவு தட்டப்பட்டது. அவர்கள் எதிர்பார்த் துக்கொண்டிருந்த ஆபத்து வந்துவிட்டதை உணர்ந்து இரு வரும் ஒருவர் முகத்தை ஒருவர் அச்சத்தோடு பார்ததுக் கொண்டனர். சந்திரா விம்மத் தொடங்கிவிட்டாள்.

மீண்டும் கதவு பலமாகத் தட்டப்பட்டது. உள்ளே இருந்து பதில் வராமல்போகவே ''அடே பற தெமளு... தொற அரிண்ட'' என்ற ஆவேசமான வார்த்தைகள் ஒலித் தன. தொடர்ந்து கதவை உடைக்கும் முயற்சிகள் இடம் பெறும் சப்தங்கள் கேட்டன.

இவ்வளவு நேரமும் தயக்கத்துடன் சந்திராவை அணைத்துக்கொண்டிருந்த கமலநாதனிடம் ஒரு துணிவு பிறந் தது. ''சந்திரா, நாம் சாகப்போறது என்னவோ உண்மை தான். ஆனால் ஏன் கோழையாகச் சாகவேணும்'' என்று சந்திராவைத் தள்ளிவிட்டு அங்கே மூலையில் இருந்த கோடரியைக் கையில் எடுத்துக்கொண்டான்.

'ஒருவனையாவது கொன்றுவிட்டுச் சாகின்றேன்'' என்றான், அந்தவேளையில் அவர் நின்ற நிலையைக் காண அவளுக்கே பயங்கரமாக இருந்தது. என்ன செய்வது என்று தோன்றா தவளாக அவள் நடுங்கிக்கொண்டிருந்தாள்.

கதவு உடைக்கப்பட்டது. திமுதிமுவென்று குண்டர் கள் உள்ளே பாய்ந்தனர். கமலநாதன் கையில் இருந்த கோடரியை ஓங்கி வீசினன். அதற்குள் காடையன் ஒருவன் வீசியெறிந்த கடப்பாறை அவன் நெஞ்சில் மோதியது. கமலநாதன் தடுமாறி விழுந்தான். அவன் எழுந்திருக்கு முன்னர் அவர்கள் அவனை மொய்த்துக் கொண்டனர். அதன் பின்னர் நடந்தவை!

கமலநாதனை இரத்தவெள்ளத்தில் உருட்டி எடுத்தனர். அவன் குற்றுயிராகினன். திடீரென அக்கும்பல் திட்டத்தை மாற்றியது. அவன் அவர்களை எதிர்க்க நினைத்தற்கு அவன் கண் முன்னே நல்ல பாடம் கற்பிக்க நினைத்தது. அவனைத் தூக்கித் தூணோடு கட்டினர். அந்நிலையில் அவனைப் பார்ப் பதே பயங்கரமாகவிருந்தது. பார்வை சோர்ந்திருந்தது.

அலறித் துடித்துக்கொண்டிருந்த சந்திராவை நோக்கி அவர்கள் திரும்பினர். இருவர் அவளைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்ள... அவள் திரௌபதையாக்கப்பட்டாள். திரௌபதைக்காவது அன்று கண்ண பரமாத்மா சேலை கொடுத்து உதவினர். இன்று சந்திராவுக்கு யார் துணை? 'ஐயோ கடவுளே' என்று மட்டும் கூக்குரல் இட்டாள்.

கடவுளுக்கு அவள் அழைத்தது கேட்டிருக்கவேண்டும் போலும் - காடையர்கள் தாம் நினைத்ததை முடிக்கமுன் னரே 'டுமீல்...டுமீல்...டுமீல்...' என்று துப்பாக்கி வேட்டுக் கள் வெளியே முழங்கின ... 'பொலிஸ் .. பொலிஸ்...' என்று ஓலமிட்டுக்கொண்டே காடையர் கூட்டம் ஓடி மறைந்தது. சந்திரா அரைவாசி குலைந்த ஆடையை சீர் படுத்திக் கொண்டாள்.

பொலிஸ் அதிகாரியும், வீரர்களும் உள்ளே நுழைந்தனர். ஆபத்தாண்டவனாக அவ்விடத்தில் தோன்றிய பொலிஸ் அதிகாரியின் கால்களில் விழுந்து நன்றிப்பெருக்கோடு அழுதாள் சந்திரா... முதியவரான அந்த சிங்களப் பொலிஸ் அதிகாரியின் கண்களும் கசிந்தன.

பொலிசார் கமலநாதனின் கட்டை அவிழ்த்துவிட்டனர். இதற்குள் பக்கத்து வீட்டுக் குடும்பத்தவரும் ஓடி வந்துவிட்டனர்.. பொலிஸ் வண்டியிலேயே கமலநாதன் வைத்தியசாலைக்கு அழைத்துச்செல்லப்பட்டான். சந்திரா இருந்த அதிர்ச்சியில் அவளைப் பக்கத்து வீட்டுக் குடும்பத்திடம் பொறுப்பாக ஒப்படைத்துவிட்டுப் பொலிசார் சென்றனர். காடையர்கள் அவர்கள் வீட்டை முற்றுகையிட்டபோது பொலிசுக்கு சமயத்தில் தகவல் கொடுத்தவர்கள் அவர்கள் தான் என்பது பின்னர்தான் சந்திராவுக்குத் தெரியவந்தது. அந்தக் குடும்பத்தவர் சந்திராவைத் தம்மோடு வைத்திருந்தால் சந்திராவுக்கு மட்டுமல்ல தமக்கும் ஆபத்து ஏற்படலாம் என்று அஞ்சி அரசாங்க அதிபர் அமைத்திருந்த அகதிகள் முகாமில் அவளை ஒப்படைத்தனர்,

சந்திரா கமலநாதனுக்கும் தனக்கும் நடந்த உரையாடல் தவிர ஏனைய விபரங்களையெல்லாம் அழகுமணிக்குக் கூறினாள். அழகு அந்தச் சிங்களக் குடும்பத்துக்கு மானசீகமாக நன்றி கூறினான்.

மறுநாள் காலை சந்திராவும் அழகுமணியும் கமலநாதனைப் பார்க்க வைத்தியசாலைக்கு வந்தபோது கமலநாதனைப் படுக்கையில் காணவில்லை. பக்கத்துக் கட்டில்காரரைக் கேட்டபோது அவர் சவக் கிடங்குப் பக்கம் கையைக் காட்டினார்' சந்திரா சோர்ந்து விழுந்தாள்.




# பயணம் தொடர்கின்றது

## அத்தியாயம் 17

"தொழுத கையுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்
அழுத கண்ணீரும் அனைத்து"

— குறள்



**1959** செப்டம்பர் 26ம் நாள் இலங்கை வரலாற்றில் பாரியதொரு மாற்றம் ஏற்பட்ட நாள். பிரதமர் பண்டாரநாயக்கா துப்பாக்கிக்குப் பலியான துர்ச்சம்பவம் நிகழ்ந்த நாள். நாடே துக்கம் கொண்டாடியது. தொடர்பு சாதனங்கள் ஒப்பாரி வைத்தன. ஒரு நாட்டின் பிரதமரின் இழப்பு என்றபடியால் உலக நாடுகளின் தலைவர்களின் இரங்கற் செய்திகள் வந்து குவிந்து கொண்டேயிருந்தன. ஒருவன் மறைந்துவிட்டால் அவனைப்பற்றிய நல்ல விடயங்களைப் பற்றிப் பேசுவதும், எழுதுவதும் இயல்பான காரியங்கள். அந்த சம்பிரதாயப்படி பத்திரிகைகள் எல்லாம் பக்கம் பக்கமாகப் படங்களோடு செய்திகளைப் பிரசுரித்துக் கொண்டிருந்தன.

அமரர் பண்டாரநாயக்காவின் பூதவுடல் அடக்கம் செய்யப்பட்ட பின்னரும் அவை தொடர்ந்து கொண்டே இருந்தன. வானொலியைக் கேட்டபோதென்ன பத்திரிகைகளைப் படித்தபோதென்ன அழகுமணியின் மனதில் ''தெய்வம் நின்று கொல்லும்'' என்ற பழமொழியே மீண்டும் மீண்டும் ஒலித்துக்கொண்டிருந்தது.

நூற்றுக் கணக்கான தமிழ் மக்கள் கொலை செய்யப்படவும், பெண்கள் மானபங்கப்படுத்தப்படவும், கடைகள் வீடுகள் கொள்ளையடிக்கப் படவும், எரியூட்டப்படவும் வழிகோலிய 1958ம் ஆண்டு இனக்கலவரத்தைத் தூண்டிவிட்டது பிரதமர் பண்டாரநாயக்காவின் பொறுப்பற்ற வானொலிப் பேச்சு என்பது உலகறிந்த உண்மை.

தனிப்பட்ட காரணங்களுக்காக மட்டக்களப்பில் இனம் தெரியாதவர்களால் கொலைசெய்யப்பட்ட செனிவிரெத்தின

என்பவரின் மரணத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து பண்டாரநாயக்கா வானொலியில் நிகழ்த்திய உரையைக் கேட்டே நாடெங்கிலுமுள்ள சிங்கள மக்கள் தமிழர்களுக் கெதிராகக் கிளர்ந்தெழுந்தனர். ஆனால் செனிவிரெத்தி னவின் மரணத்துக்கு இரு தினங்களுக்கு முன்னரே பொல நறுவையில் புகையிரதம் தாக்கப்பட்டது என்பதை உலகம் அறியும். ஆகையால் செனிவிரெத்தினவின் மரணம்தான் இனக்கலவரத்துக்குக் காரணம் அல்ல என்பது படித்த, விடயம் அறிந்த சிங்கள மக்களே ஏற்றுக்கொண்ட உண்மை.

பிறவியில் கிறித்தவரான பண்டாரநாயக்கா பதவியை வேண்டிப் பௌத்தராகினர்.

தமிழ் மக்களுக்கு ஓரளவு சலுகைகளை வழங்கக்கூடிய தாகவிருந்த பண்டா - செல்வா ஒப்பந்தத்தைப் பௌத்த பிக்குகளின் எதிர்ப்புக்கு அஞ்சிக் கிழித்துத் தீயிலிட்டார். எனினும் பண்டாரநாயக்காவின் வாழ்வு பௌத்த துறவி ஒருவரின் துப்பாக்கிக் குண்டுக்குத் தான் பலியானது.

''கும்பிடும் கைகளுள்ளும் கொலைக்கருவி இருக்கும்'' என்று வள்ளுவன் கூறியது மகாத்மா காந்தியின் விடயத்தி லென்ன பண்டாரநாயக்காவின் விடயத்திலும் சரியாகி விட்டது. அன்று வணக்கம் கூறிக்கொண்டே கோட்சே சுட்டான்- இன்று வணக்கம் கூறிய பண்டாரநாயக்கா சுடப்பட்டார். ஆனால் வணங்கும் கரங்களாலே தான் வாழ்வு முடிந்தது.

காலிமுகத்திடலில் குருதி கொட்ட அடிபட்ட தமிழர் களை இரக்கக் கண்கொண்டு பாராத பௌத்தரான பண் டாரநாயக்கா இன்று குண்டுகளால் துளைக்கப்பட்டுக் குருதி கொட்ட வீழ்ந்துவிட்டார்.

● நாவண்ணன்

பண்டாரநாயக்காவின் வானொலிப் பேச்சின் விளைவு தானே சந்திராவை விதவையாக்கியது. மஞ்சள் குங்குமத்தோடு பூத்துக்குலுங்கிய அவள் வாழ்வைப் பாழடித்தது.

சந்திராவின் திருமணத்தால் ஏற்பட்ட தாக்கம் - கமலநாதனின் மரணத்தால் ஏற்பட்ட தாக்கம் என்று அடுத்தடுத்து வந்த தாக்கங்கள் பவளத்தையும் நோயாளியாக்கி அந்த ஒரு வருடத்துள் அவளையும் பறித்துக்கொண்டு போய்விட்டன.

இன்று சந்திராவுக்கு உறவு என்று சொல்லக் குழந்தை மதி இருக்கிறாள். ஆனால் அவனுக்கு என்று யார் இருக்கின்றார்கள். சந்திராவுக்கும் அவனுக்குமிடையில் இப்பொழுது இருக்கும் உறவு - இருவருமே ஏற்றுக்கொள்ள விரும்பாமல் ஒருவரை ஒருவர் தாங்கிக்கொண்டிருக்கும் செயற்கையான உறவு.

மரணத்தின் முன்னர் கமலநாதன் மட்டுமல்ல, பவளமும் ஒரே கருத்தையே வலியுறுத்திச் சொல்லியுள்ளாள். ஆனால் அது எந்த அளவுக்குச் சாத்தியமாகும் என்பதில் அவனுக்குச் சந்தேகமே.

பவளம் இருக்கும்வரையில் திருகோணமலையில் இருப்பதை ஒரு பிரச்சனையாக அவன் நினைக்கவில்லை. ஆனால் பவளத்தின் மறைவுக்குப்பின்னர் சந்திராவுடன் ஒரே வீட்டில் வாழுவது என்பது நாகரீகமானது என்று அவனால் நினைக்கமுடியவில்லை. எனவே தான் யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம்கோரி வந்துவிட்டான்.

ஒருவேளை கமலநாதன் நல்ல கணவனாக இல்லாதிருந்தால் சந்திரா இந்த நிலையில் என்ன செய்வாளோ! ஆனால் அவனையே எண்ணி உருகும் அளவுக்கு அவனோடு வாழ்ந்த கொஞ்சக்கால வாழ்க்கை அமைந்துவிட்டது. அவன்வாழ்ந்த போது மட்டுமல்ல,வாழ்வுக்குப்பின்னாலும் அவளது வாழ்வில்

அக்கறை கொண்டுள்ள படியால்தானே அந்த ஆபத்தான கட்டத்திலும் அவளை அழகுமணியுடன் இணைந்து விடும்படி கூறினன். அன்று அந்த நிலையில் அவளுக்கு அவன் மீது கட்டுக்கு மீறிய ஆத்திரம் வந்தாலும் இன்று அதை எண்ணிப் பார்க்கும்போது அவள் பார்க்கும் திசையெல்லாம் அவன் உருவம் தோன்றுவதாக எண்ணித்தொழவேண்டும்போல் இருந்தது.

பவளத்தையும் - அழகுமணியையும் வீட்டுத் தூரவாழ நினைத்தவளுக்கு மீண்டும் சுவரில் எறிந்த பந்தாக அவர்கள் காலடியிலேயே வந்து விழவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. அதைவிட, அழகுமணிக்கு வாழ்க்கைப்பட்டால் தான் விரைவிலேயே விதவையாகவேண்டிவரும் என்று அன்று பவளத்திடம் கூறியவள் இன்று பாதுகாப்பான வாழ்க்கை தேடப்போய் இவ்வளவு சீக்கிரத்தில் தாலியைப்பறி கொடுத்து விட்டுவந்து நிற்கிருள் என்பதை எண்ணிச் சங்கடப்பட்டாள்.

ஆனல் பவளமோ, அழகுமணியோ பழையவைகள் எதையும் நினைத்ததாகத் தெரியவில்லை, கமலநாதனின் மறைவுக்காக உருகி அழுதனர். சீர்குலைந்துவிட்ட அவள் வாழ்வுக்காக வேதனைப்பட்டனர்.

குழந்தை மதி பிறந்த பின்னர் தான் அந்த வீட்டில் சாவுக்களை மாறி மீண்டும் கலகலப்பு தலைகாட்டத் தொடங்கியது மதி தந்தையின் மறு பிறவியாகாவே இருந்தாள். அவள் வளர்ச்சியும் - சிரிப்பும் மழலை ஒலிகளும் பாலைவனத்தில் வசந்தத்தை உருவாக்கிக் கொண்டிருந்தன.

அழகுமணி, மதியை எவரும் சொல்லாமலே தன் குழந்தையாகச் சுவீகரித்துக் கொண்டான். மதி அவனை மழலைச் சொல்லால் 'அப்பா' என்று அழைக்கும்போது அவளுக்கும் அவனுக்கும் அது சங்கடமாக இருந்தபோதும் கூட அதைத் தவிர்க்கவோ தடுக்கவோ முடியவில்லை. ஏனெனில் பிறக்கும்

குழந்தைக்குத் தந்தையாக வாழும் பொறுப்பைக் கமல நாதனே இறக்குமுன்னர் இருவரிடமும் கூறிவிட்டானே.

'அப்பா' என்று மதி தானுகவே அழைக்கத் தொடங்கி விட்டதும் பவளத்தின் மனதில் கருகிவிட்டிருந்த நம்பிக் கைத்துளிர் மறுபடியும் தழைக்கத்தொடங்கிவிட்டது பவ ளத்தின் மனதில் அந்த ஆவலை அடக்கி வைத்திருக்க முடிய வில்லை. தன்சொந்த மகளுக்கு மறுவாழ்வு கிடைப்பதை எந்தத் தாய்தான் விரும்பமாட்டாள்? அப்படி ஒரு தாயின் நிலையிலே பவளம் நின்றவளாகத் தன் எண்ணத்தை இரு வரிடமும் வெளியிட்டாள்.

அன்பே உருவாக வாழ்ந்த கணவனை இழந்து ஓர் ஆண்டு நிறைவதற்குள் பவளத்தின் வாயால் இப்படி ஓர் ஆலோசனையைக் கேட்பது அவளால் ஜீரணிக்கமுடியாமல் இருந்தது. ''அம்மா நானும் பிள்ளையும் இப்படியேஇருப்பது உங்களுக்குச் சுமை என்று கருதினுல் சொல்லிவிடுங்கள் எங்கள் வழியை நாங்கள் பார்த்துக்கொள்வோம்'' என்று கூறிவிட்டாள். அதன் பின்னர் பவளம் இறக்கும்வரை அவளோடு பேசவே இல்லை.

ஆனுல் அழகுமணியிடம் அவள் சொல்லியிருந்தாள், 'என்றைக்காவது சந்திராவின் மனம்மாறி அவளுக்கு வாழ்க் கைத் துணையொன்று தேவை என்று தான் உணர்ந்தால் அதை நிறைவேற்றி வைக்கிறது உன் கடமை, எல்லாம் கைகூடினுல் - அவள் ஏற்றுக் கொண்டால் நீயே அவளுக்கு மறுவாழ்வு கொடுக்கிறதைத்தான் நான் விரும்புகின்றேன்.''

நிலத்தின் தன்மையைப் பொறுத்தே அதில் முளைக்கும் விதையின் தன்மையும் அமையும். தன்னிடம் இருக்கும் சீர் திருத்த சிந்தனைகளுக்குக் களம் பவளம் எனும் அவனது தாய் தான் என்பதை அவன் திடமாக நம்பினுன். அவளு டைய மகனுகத் தான் பிறந்ததே பெரும்பேறு என்று பெருமை கொண்டான்.

அத்தகைய அன்னையை ஒருவாரக் காய்ச்சல் அள்ளிக் கொண்டு சென்ற பின்னர் தான் தொடர்ந்தும் சந்திராவுடன் அதேவீட்டில் தான் வாழ்வதால் ஏற்படக்கூடிய விபரீதங்களை எண்ணி யாழ்ப்பாணத்துக்கு மாற்றலாகிச் சென்றான். திருகுறள் படித்த தமிழ் ஆசிரியன் அல்லவா ''மகளிர் நிறைகாக்கும் காப்பே தலை'' என் குறளடிகள் அவனுக்கு வழிகாட்டின.

சமலநாதனின் மறைவை அடுத்து ஏற்பட்ட பவளத்தின் இழப்பு மீண்டும் சந்திராவின் வாழ்வில் கலக்கத்தை ஏற்படுத்திவிட்டது. அதிலும் அழகுமணியின் தயவிலேயே தொடர்ந்தும் வாழவேண்டிநேரிட்டதைஅவளுக்குப்பொருத்தமானதாகக்கொள்ளமுடியவில்லை. கமலநாதனின் ஓய்வூதியப் பணத்துடன் வேறு எங்காவது தனித்து வாழமுடியும் என்றாலும் மதியின் எதிர்காலத்தைக் கணவன் அழகுமணியிடம் ஒப்படைத்துச் சென்றதன் காரணத்தால் அவளால் ஒன்றும் செய்யமுடியவில்லை. அல்லாமலும் அழகுமணியிடமிருந்து அவளுக்குப் பாதுகாப்பு மட்டுமே கிடைக்கும்போது அவள் எதைக் காரணமாகவைத்து அவனிடமிருந்து விலகிக் கொள்வது?

தாயையும் மகனையும் அவள் புறப்புகாட்டிப் பிரிய நினைத்தாலும் - குறிப்பாகப் பவளம் சந்திராவைத் தன் மருமகளாக்கிக்கொள்ள முயற்சித்ததை இப்பொழுது எண்ணும்போதுதான் அவளது நல்ல மனதைப் புண்படுத்திவிட்டதாகவே எண்ணி வருந்தினாள்.

பெரியவர்தொட்டு அழகுமணிவரை தன் நல்வாழ்வுக்காகவே உழைத்திருக்கும் போது, அந்தக் குடும்பத்துக்காக அவள் என்ன தியாகத்தைச் செய்தாள்? பெரியவர் தான் போகட்டும் குறைந்தது பவளத்தையாவது அவளால் மகிழவைக்கமுடிந்ததா? ஏன் அழகுமணிக்குக்கூட இப்படி ஒரு வாழ்க்கை அமைந்துவிட்டதற்குத் தான்தானே காரணம்.

இப்பொழுது தனது நன்றிக்கடனை நிறைவேற்றுவதற்கு அழகுமணி ஒருவனே இருக்கின்றான். அவன்மட்டில் தனக்கு ஒரு முக்கிய கடமை இருக்கிறது என்பதனை அவள் உணர்ந்தாள்.

கமலநாதனின் வேண்டுகோள் வேறு பிள்ளைக்கு அழகுமணியே தந்தையாக வாழவேண்டும் என்று கட்டளையிட்டு வலியுறுத்திக்கொண்டிருந்தது. குழந்தை மதியும் அவனை அப்பா என்று அழைத்துக்கொண்டிருக்கின்றான்.

இந்த இரண்டும்கெட்டான வாழ்க்கையை இன்னும் தொடரவிடாமல் ஒரு முடிவுக்குக் கொண்டுவர அவள் முனைந்தாள். சிந்தித்தாள் சீரழிந்துவிட்ட அவன் வாழ்வுக்குப் புத்துயிர் கொடுக்க விரும்பினாள். தன் வாழ்வைமட்டும் கருதாது குழந்தை மதியின் வாழ்வுக்காக என்றாலும் தான் அந்த முடிவுக்கு வருவதே சிறந்தது என்று அவள் மனம் கூறியது.

தன் உள்ளத்தில் தோன்றியவைகள் அனைத்தையும் எழுத்தாக... வடித்தாள். அவற்றை உறையிலிட்டுத் தபாலில் சேர்த்ததன் பின்னர்தான் ஏதோ பெரும் சாதனை செய்துவிட்டதுபோன்றதொரு அமைதி - நிறைவு ஏற்பட்டது.

அவள் அனுப்பிவைத்த கடிதத்தை அழகுமணி படித்தபோது அவனுக்குப் பெரும் ஆச்சரியமாக இருந்தது. இப்படி ஒரு கடிதத்தை அவன் அவளிடமிருந்து எதிர்பார்க்கவில்லை. கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முடிவு கடிதத்தின் மூலம் தீர்மானிக்கக் கூடியதல்ல. அவளோடு அதுபற்றி நேரடியாகவே பேசி எடுக்க வேண்டிய முடிவு.

எனவே, ஒருவாரம் விடுப்பு எழுதிக் கொடுத்துவிட்டு திருமலையை நோக்கிப் புறப்பட்டான்.

அழகுமணியின் வரவையே அவளும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். அவனும் வந்துசேர்ந்தான். அவனது முகக்குறிப்பில் இருந்து அவன் முடிவு என்னவாக இருக்கும் என்பதை அவளால் உணர்ந்து கொள்ள முடியவில்லை. அவனிடம் கேட்கவும் அவளுக்கு அச்சமாகவிருந்தது.

# பயணம் தொடர்கின்றது

## அத்தியாயம் 18

''சீரினும் சீரல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர்''

— (குறள் 962)

அழகுமணிக்கு நினைக்க நினைக்க ஆத்திரமாக வந்தது. சந்திராவின் உறுதியற்ற மனப் போக்கினால்தான் இன்று அவன் மட்டுமல்ல, அவளும் பிள்ளையும் கூட அனாதைகளாக்கப்பட்ட நிலையில் உள்ளனர். கமலநாதனின் பிரிவுக்குப் பின்னர் இருவரும் ஒருவர் ஒருவர் தயவில் வாழும் நிலைமையை விதி உருவாக்கிக் கொடுத்திருக்கின்றது. ஏற்பட்ட இழப்புக்கள், துயரங்கள் மத்தியில் இந்த நிலைமை ஒருவித ஆறுதலைக் கொடுத்துக் கொண்டிருந்தது. அந்த ஆறுதலையும் அமைதியையும் குலைத்துவிடக் கூடிய ஆலோசனையை அல்லவா அவள் இப்பொழுது கூறியுள்ளாள். சந்திராவுடன் அவளது கடிதம்பற்றி அவன் பேசிய போது சற்றுப்பொறுமையிழந்தே வார்த்தைகளைப்பிரயோகித்தான்.

''சந்திரா, இதுவரையில் நீ எனக்குச் செய்தவைகள் போதாதா? உன்னாலே நான் சுமந்து கொண்டிருக்கும் வேதனைகள் போதாதா? மேலும் மேலும் ஏன் என்னை உன் செய்கைகளால் சாகடிக்க நினைக்கின்றாய். என்னால் உன் பெயருக்கு களங்கம் ஏற்படக் கூடாது. என்னைப்பற்றி தவறான எண்ணம் உன்மனதில் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தானே நான் உன்னைவிட்டு இவ்வளவு தூரம் பிரிந்திருக்கின்றேன். இந்த நிலையிலும் என்னால் உனக்கு ஆபத்து, அல்லது உன் பெயருக்குக் களங்கம் ஏற்படப் போகின்றது என்று ஏன் அஞ்சுகிறாய்.''

அழகுமணி ஆத்திரப் படுவான் என்று அவள் அஞ்சிக் கொண்டிருந்தாள் என்றாலும் தனது கடிதத்துக்கு இப்படி தப்பான விளக்கம்கொண்டு பேசுவான் என்று அவள் எதிர் பார்க்கவில்லை.

''அழகு, என்னுடைய கடிதத்தை நீங்கள் தப்பாகப் புரிந்துகொண்டீர்கள். என்னுடைய பெயருக்கு உங்களால் களங்கம் ஏற்பட்டுவிடும் என்று எந்தச் சந்தர்ப்பத்திலும் நான் எண்ணிக்கூடப் பார்த்ததில்லை.''

''அப்படியென்றால் என்னை மணம்செய்து கொள்ளும்படி எந்த நோக்கத்தோடு உபதேசம் செய்ய முன்வந்தாய்?''

''என்னாலே சீரழிக்கப்பட்ட உங்கள் வாழ்க்கை மறுபடியும் சீரமைக்கப்படவேண்டும் என்பதற்காகத்தான். உங்கள் வாழ்க்கையில் வசந்தம் மலரவேண்டும். நீங்கள் வாழ்க்கையை முழுமையாக அனுபவிக்கவேண்டும் என்ற அந்த நல்ல எண்ணத்தோடுதான் நான் இந்த ஆலோசனையைக் கூறினேன்.''

''இந்த ஆலோசனையை நீ கூறவேண்டியதில்லை.''

''என்னைவிட்டால் வேறுயார் இருக்கிறார்கள் உங்களுக்கு?''

சந்திராவின் இந்தக் கேள்விக்கு அழகுமணி உடனடியாகப் பதில் கூறவில்லை. சந்திராவின் முகத்தை அனுதாபத்தோடு பார்த்தான். உதடுகள் அவனையும் மீறித் துடித்தன. அவன் கண்கள் பனித்தன. ஒரே சமயத்தில் ஆயிரக்கணக்கான வார்த்தைகள் அவன் உள்ளத்தில் தோன்றி உதடுகள் எனும் அணையை உடைத்துக்கொண்டு புறப்பட எத்தனித்தன. சில கணத்தில் அமைதியடைந்தவனாக அவன் கேட்டான்.

''அந்த வார்த்தைகளை மீண்டுமொருமுறை சொல் சந்திரா?''

''என்னை விட்டால் வேறுயார் இருக்கிறார்கள் உங்களுக்கு?''

'காலம் கடந்து இந்த உண்மையை நீ உணர்ந்து கொண்டிருக்கிறாய் சந்திரா. உன்னைவிட்டால் எனக்கு வேறு யாருமில்லை என்பதை நீ இன்று உணர்ந்து சொல்லுகின்றாய். இதே வார்த்தைகளை உன் திருமணத்துக்கு முன்னர் எத்தனை தடவைகளில் உன்னிடம் சொல்லியிருக்கின்றேன். அன்று நீ இதை உணர்ந்திருந்தால் இன்று நிலைமை இந்த அளவுக்கு வந்திருக்காது. அன்று முதல் இன்றுவரை இதே கேள்வியைத்தான் என் மனதில் கேட்டுக்கொண்டு அதே நினைவில் கிடைக்கும் ஆறுதலோடு நான் வாழ்ந்துகொண்டு வருகின்றேன். இந்த நிலையில் எனது வாழ்க்கையை இன்னும் ஒருத்தியோடு பகிர்ந்துகொள் என்று சொல்லும் துணிவு உனக்கு எப்படிச் சந்திரா வந்தது?''

என்னைவிட்டால் ஆலோசனை கூறுவதற்கு வேறுயார் இருக்கின்றார்கள் என்று அவள் கேட்கப்போய் அழகுமணி அவள் வார்த்தைகளைக் கொண்டே அவளை மடக்கி விட்டதை அவள் கண்டு கொண்டபோது என்னபதில் சொல்வது என்று தெரியாதவளாகத் தடுமாறினாள்.

''அழகு என்னை மன்னித்து விடுங்கள். உங்களுடைய இந்த விவாதத்துக்கு விளக்கம் கூறக் கூடிய நிலையில் நான் இல்லை. விளக்கம் கூற முற்பட்டாலும் நீங்கள் விபரீதமான முறையில் புரிந்துகொள்ளக்கூடிய பதிலைச் சொல்லிவிடுவேனோ என்று பயமாக இருக்கிறது. நான் உங்களை மணம் செய்து கொள்ளும்படி கூறியது உங்களுக்காக மட்டுமன்று என்னுடைய கணவரின் வேண்டுகோள்களில் ஒன்றினை உங்கள் மூலம் நிறைவேற்றிவைக்க வேண்டியுள்ள கடமையைச் செய்யவேண்டும் என்பதற்காகவும்தான்.

''கமலநாதனின் வேண்டுகோளா? இவள் எதனைக் குறிப்பிடுகிறாள்?'' இந்தக் கேள்விகளுக்கு அவன் பதில் காணுமுன்னர் அவளே கூறினாள்.

''என்னுடைய பிள்ளையை உங்கள் பிள்ளையாக வளர்த்தெடுக்கவேண்டும்'' என்று எனக்கு மட்டுமல்ல உங்களுக்கும் அவர் சொல்லியிருக்கின்றார். இப்படியே நீங்கள் பிரமச்சாரியாகவே வாழ்ந்து கொண்டு எனது பிள்ளையை எப்படி வளர்த்தெடுக்கப் போகின்றீர்கள்? என்பிள்ளை என்னோடு வாழும்வரை அவன் நிச்சயமாக உங்கள் பிள்ளையாக வாழ மாட்டான். உங்கள் பிள்ளையாக வாழவேண்டுமானால் அவன் உங்களோடுதான் வாழவேண்டும். வளரவேண்டும்.''

''அப்படியாயின் உனது நிலை?''

''என்னுடைய கணவனின் பென்சன் பணம் எனக்குப் போதும். உங்கள் பெற்றோர் எனக்குக் கொடுத்த கல்வியறிவு என் வாழ்க்கையைக்கொண்டு நடத்தப் போதுமானது. தயவுசெய்து என்னை என் வழியில் போக அனுமதியுங்கள்.''

''சந்திரா, நீ உன் கணவனின் ஒரு வேண்டுகோளைப் பற்றி மட்டும் தான் நினைக்கின்றாய். ஆனால் நான் கமலநாதனுடைய ஏனைய வேண்டுகோளை மட்டுமல்ல எனது தாயாருடைய வேண்டுகோள்களையும் நினைத்துக் கொண்டிருக்கின்றேன்.''

அழகுமணி மறைமுகமாக எதனைச் சொல்ல [illegible]ன்றான் என்பதை அவளால் ஊகிக்க முடிந்ததாயினு[illegible] அவள் வெளிக்காட்டவில்லை. அவனைத் தொட[illegible] மௌனமாக நின்றாள்.

''இன்னுமொன்றையும் நினைவுபடுத்துகின்றேன். சந்திரா உனக்கு நினைவிருக்கிறதா...? உனது திருமணத்துக்கு முந்தின இரவு நான் இறுதியாகச் சந்தித்து உனக்குச் சொன்ன வார்த்தைகள்! உனக்கு மறந்து போயிருந்தால் மீண்டும் நினைவுபடுத்துகிறேன். சந்திரா... இது... சந்திராவெனும் தெய்வம் குடியிருக்கும்.''

"வேண்டாம் அழகு... பழையவைகளை நினைவுபடுத்தாதீர்கள். நான் அவற்றையெல்லாம் மறந்து வெகுநாளாகிவிட்டது. இப்பொழுது என் நெஞ்சில் நிறைந்திருப்பனவெல்லாம் என் கணவரும் அவரோடு வாழ்ந்த நாட்களும்தான். தயவுசெய்து இத்தோடு நிறுத்திக்கொள்ளுங்கள். என் நெஞ்சத்தில் சலனத்தை ஏற்படுத்த முயலாதீர்கள். ஆண்களின் எந்தச் செயலுக்கும் ஏதோ ஒரு விதத்தில் அனுமதி அளிக்கும் இந்த உலகம் பெண்கள்மட்டில் பாதகமானதையே எண்ணும். அப்படியொரு பழிக்காளாகும் நிலைமையை எனக்கு உண்டாக்கி விடாதீர்கள் அழகு...

அவளுடைய அந்த வேண்டுகோளும், அழுத நிலையும் அவள் மீது அவனுக்கு இரக்கத்தையே தோற்றுவித்தது. அவள் கூறுவதில் உள்ள உண்மைகள் அவனைச் சிந்திக்கச் செய்தன. நவீனம், புதுமை, புரட்சி என்ற சொற்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் இன்றைய உலகில் - பெண்ணொருத்தி மரபு வழிவந்த பெண்மைக்கு உரிய பண்புகளில் இருந்து தன்னை விடுவித்து புதுமைவழிசெல்லப் புறப்பட்டால் ஏற்படக்கூடிய விபரீதங்கள்தான் எத்தனை!

சொந்த மனைவியோடு வாழும் வாழ்க்கையில் அமைதியில்லை. திருப்தி இல்லை என்று கூறி கணவன் ஒருவன் தவறான வழியில் செல்ல முற்பட்டால் அவன் கூற்றில் எவ்வளவு உண்மையுண்டு என்பதை ஆராயாமலே அவனுக்காக அனுதாபப்படவும் - அவன் மனைவிமீது பழிகூறவும் தயங்காத உலகம் அதே காரணங்களுக்காக அவள் அவனது வழியை அல்ல, அவள் கணவனை விலக்கி வைப்பதைத் தானும் இந்த உலகம் எவ்வளவு தூரம் ஏற்றுக்கொள்ளும்?

விதைவைகளுக்கு மறுவாழ்வு தரவேண்டும் என்று கொள்கையளவில் கூறும் இந்த சமுதாயம் சந்திரா அழகுமணியுடன் மறுவாழ்வுக்கு இசைந்தால் கமலநாதன்

உயிரோடு வாழும்போதே இவர்கள் இருவருக்கும் தொடர்பு இருந்தது என்று நாக்கில் நரம்பின்றி வசை கூறுது என்பதற்கு என்ன உத்தரவாதம்?

சந்திராவின் நிலையில் இருந்து யதார்த்தமாக இப்படிச் சிந்தித்த அழகுமணியால் எந்தவித முடிவுக்கும் வரமுடிய வில்லை. அவளுக்காக மென்மேலும் அனுதாபப்படவே செய்தான்.

அவளைப் பொறுத்தவரையில் இன்னுமொருத்தியுடன் புதுவாழ்வு தொடங்குவது என்ற பேச்சுக்கே இடமில்லை. சந்திராவாக மனம்மாறி வந்தால் அவளோடு வாழ அவன் தீர்மானம் செய்துவிட்டான். கமலநாதனுடையதும், பவளத்தினதும் ஆசைகளை நிறைவேற்றுவதில் உறுதியாக விருந்தான்.

சந்திராவால் அவன் இழந்துவிட்ட அமைதியை அவள் ஒருத்தியால்தான் மீண்டும் அவனுக்கு அளிக்கமுடியும் என் பதில் தளராத நம்பிக்கை கொண்டிருந்தான். அவளுக்கு மறுவாழ்வு அளிப்பது என்ற முடிவுக்கு அழகுமணி வந்த தற்கு அதுவுமொரு காரணம்.

சமத்துவம், பெண்கள் விடுதலைஎன்று பேச்சில் முழங்கும் அளவுக்கு தமக்குரிய உரிமைகளை நிலைநாட்டப் பெண்களுக்கு இன்னும் துணிவு ஏற்படவில்லை. கொடுப்பதற்கு மனமுள் ளவர்கள் இருந்தும் கொடுப்பதை ஏற்பதற்கு ஏற்கும் நிலை யில் உள்ளவர்கள் இல்லாவிடில் என்ன செய்து விடமுடியும்?

மறைமுகமாகவும் நேரடியாகவும் தனது உள்ளக் கிடக்கையை முடிந்த அளவு அவளுக்கு தெளிவுபடுத்திவிட் டான். அவளாக விரும்பினாலன்றி அவனால் என்ன செய்து விடமுடியும்? இது விடயத்தில் அவளை அவன் கட்டாயப் படுத்தினால் இதுவரையில் அவள் தனது மட்டில் வைத்தி ருந்த முழு மதிப்பையும் இழக்க வேண்டிவரும் என்று அஞ்சினான் அழகுமணி.

குழந்தை மதி வேறு அவனை 'அப்பா, அப்பா' என்று அழைத்துக்கொண்டிருப்பது அவனது உணர்வுகளுக்குத் தூப மிட்டுக் கொண்டிருந்தது. சட்டபூர்வமாகவே அவனுக்குத் தான் தந்தையாகி விடவேண்டும் என்ற ஆவலும் அவனுள் வளர்ந்துகொண்டிருந்தது.

அன்றிரவு மதி - அம்மாவும் அப்பாவும் தனக்குப் பக் கத்தில் கிடக்கவேண்டும் என்று அடம்பிடித்தான், அவனது அந்தப் பிடிவாதம் இருவருக்கும் தர்ம சங்கடத்தைக் கொடுத்தது. கடைசியில் அவளது அறையில் அவனே மதியை வைத்திருந்து தான் வழக்கமாகப் படிக்கும் 'பைபிளை' மதியின் கையில் கொடுத்து, விளையாட்டுக் காட்டி உறங்கவைத்தான். அழகுவும், சந்திராவும் வாழ்க் கையில் இணைவதற்குக் குழந்தை மதி உட்பட யார்தான் தடையாக இருக்கப்போகின்றார்கள்.

நேரம் நடு இரவைத் தாண்டிவிட்டது. அவனால் தூங் கவே முடியவில்லை. ஏதேதோ விபரீத உணர்வுகள் உள்ளத் தில் எழுந்து அலைக்கழித்தன. சந்திராவின் குழந்தைக்குத் தான் தந்தை, அப்படியானால் சந்திரா அவனுக்கு...? மீண்டும் மீண்டும் அதே உணர்வுகள்- நினைவுகள்.

சிற்றலைகளாக எழுந்த அந்த உணர்வலைகள் குமுறி மோதி ஒலித்தன. அந்த அலையின் மோதல்களிலே இதுவரை வாழ்ந்துவந்த கவிஞன் அழகுமணியின் இலட்சியங்கள் கரையத் தொடங்கின. ''மகளிர்நிறைகாக்கும் காப்பே தலை'' என்று வாழ்ந்த அழகுமணியின் உள்ளத்தின் ஏதோ ஒரு மூலையில் உறங்கிக்கொண்டிருந்த தீய உணர்வுகள் தீச்சுவாலைகளாக எழுந்து அவன் தூய்மையைக் கருக்கின.

சந்திராவை உடனே பார்க்கவேண்டும் என்ற உணர்வு உந்தித்தள்ள படுக்கையை விட்டு மெல்ல எழுந்தான். தனது அறைக்கதவைத் திறந்துகொண்டான். வழக்கமாக அக் கதவைத் திறக்கும் போது எழும் சாதாரண ஒலிதான்

அப்பொழுதும் எழுந்தது. ஆனால் அப்பொழுது அவனுக்கு இருந்த மன நிலையில் அவ்வொலி பயங்கரமாகக் கேட்டது.

நெஞ்சு பட படக்க சந்திராவின் அறைக் கதவை மெல்லத் திறந்தான். மெல்லிய விளக்கொளியில் அவள் அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தாள். சந்திராவின் சாந்தமான அந்த முகம் அவன் கண்களுக்குச் சந்திரனாகவே பட்டது. இந்த அழகைத் தனக்கு உரிமையாக்கிக் கொண்டாடும் தகுதி இல்லையே என்ற ஏக்கம் அவனைக் குடைந்தது.

அவனை மதி அணைத்தபடி கிடந்தான். ''மதிக்கு நான் அப்பாவென்றால், சந்திரா எனக்கு?'' மீண்டும் அதே கேள்வி அவனுக்குள் எழுந்தது. அவன் உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது. இதயம் மட்டுமல்ல உடம்பே படபடத்தது.

அந்த அமைதியான சூழ்நிலையில் அறையைச் சுற்றிப் பார்வையை ஓடவிட்டான். அப்பொழுது தான் அந்தப் பொருள் அவனது கண்களில் பட்டது.

குழந்தை மதிக்கு விளையாட்டுக் காட்டிய அந்தப் புத்தகம்- காலிமுகத்திடல் சத்தியாக்கிரகம் முதல் அவன் தன்னோடு வைத்திருக்கும் அந்தப் புத்தகம், உள்ளத்தின் அமைதியை இழக்கும் போதெல்லாம் ஆறுதல் வேண்டி அவன் அடிக்கடி படிக்கும் அந்த பைபிள்...

அது அவன் கண்களில் பட்ட மறுகணமே நெற்றிப் பொட்டில் மின்சாரம் தாக்கியது போன்றதொரு உணர்வு. அந்தக் கணம் முதல் அவனைப் பீடித்திருந்த உணர்வுகளில் ஒரு தளர்ச்சி, தடுமாற்றம், சோர்வு.

''ஒரு பெண்ணை இச்சையோடு நோக்குபவன் எவனும் ஏற்கனவே தன் உள்ளத்தில் அவளோடு விபச்சாரம் செய்தாயிற்று.''

பைபிளின் அந்த வாசகங்கள் அவன் மனதில் தோன்றி சாட்டைகளாகச் சாடின. ஒளியான கிறிஸ்துவின் அந்த வார்த்தைகள் அவன் இதயத்தில் பிடித்திருந்த இருளை விரட்டியடித்தன.

அவன் தன்னை உணர்ந்தான். கொண்டுவந்த உள்ளத்து உணர்வை மறந்தான். அச்சமும் பக்தியும் ஆட்கொள்ள அந்தப் புத்தகத்தைக் குனிந்து மெல்ல எடுத்தான்.

அப்பொழுதும் அவன் நடுக்கம் தீரவில்லை. திரும்பி வாசலைநோக்கி நடந்தான். கதவை நெருங்கிய போது அவனுக்கு இருந்த நடுக்கத்தில் பைபிள் தவறி கீழே விழுந்தது. ''பட்''

அந்தச் சத்தம் கேட்டு சந்திரா திடுக்கிட்டு எழுந்தாள். அழகுமணியை அவள் தன் அறையில் அந்த நேரத்தில் கண்டு திகைத்தாள். அவள் முகத்தில் சந்தேகத்தோடு கூடிய வினக்குறி தெறித்தது. அழகுமணிக்குத் தான் நிர்வாணியாக நிற்பது போன்ற உணர்வுதோன்றி அவனைக் கூனிக் குறுகவைத்தது.



# பயணம் தொடர்கின்றது

## அத்தியாயம் 19

"தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாகக்
கொள்வர் பழிநாணுவார்"

— குறள் 433.

உலகத்தில் கெட்ட குணங்களே இல்லாத நல்லவனும் இல்லை - நல்ல குணங்களே இல்லாத கெட்டவனும் இல்லை. நன்மைத்தனங்களும் தீக்குணங்களும் சேர்ந்த கலவைதான் மனித வாழ்வு. வாழ்நாளெல்லாம் கெட்டவனாகவே வாழ்பவன் சமயத்தில் செய்யும் நல்ல செயல் ஒன்றினால் அவன் செய்த தீமைகள் எல்லாம் மறக்கப்படுகின்றன. அதேபோல வாழ்நாள் முழுவதும் நல்லவனாகவே வாழும் ஒருவன் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் செய்யும் தவறினால் அவன் செய்த நன்மைகள் யாவும் மறக்கப்படுகின்றன. அவன் செய்த ஒரு தச்செயல் மட்டுமே மற்றவர்கள் கண்களுக்கு பூதாகரமாக்கப்பட்டு விடுகின்றது.

திருகோணமலையில் இருந்து அதிகாலையில் யாழ் நோக்கிப் புறப்பட்ட அழகுமணியின் உள்ளத்தில் இந்த எண்ணங்கள்தான் எழுந்தது. தான் எவ்வளவுதான் நல்லவனாக வாழ முயற்சித்தும் இரவு சில நிமிடங்களில் அவனை ஆட்கொண்ட பெலஹீனம் அவனை எந்த அளவுக்குக் கீழே தள்ளி விட்டது. கோபுரத்தின் உச்சியில் நின்றவன் இப்பொழுது படுபாதாழத்தில் அல்லவா வீழ்ந்து கிடக்கிறான்.

பைபிள் கீழே விழுந்த சப்தம் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்த சந்திராவுக்கு என்ன பதிலைச் சொல்வது என்று அழகுமணிக்குத் தெரியவில்லை.

''சந்திரா... இந்தப் புத்தகம்... நித்திரை வரவில்லை... அது தான் படிப்போம் என்று... உன் நித்திரையைக் குழப்ப வேண்டாம் என்று தான் உன்னை எழுப்பவில்லை.''

● நாவண்ணன்

தட்டுத்தடுமாறி அரையும் குறையுமாக அவன் உதடுகள் அந்த வார்த்தைகளை உதிர்த்தின. அவன் கூறியவற்றை அவள் எவ்வளவுதூரம் நம்பினுள் என்று அவனுல் கண்டு கொள்ளமுடியவில்லை. குனிந்து அந்த பைபிளை எடுத்தவன் விடுவிடுவெனத் தன் அறைக்கு வந்துசேர்ந்தான். அறைக் கதவை உள்ளே தாழிட்டுக் கொண்டான். அவல் மீதே அவனுக்கு வெறுப்பாக இருந்தது. பைபிளை கட்டிலில் போட்டு விட்டு தொப்பென்று கட்டிலில் விழுந்தான். அவன் முகத்துக்குக் கீழே அந்த பைபிள் கிடந்தது குமுறிக் குமுறி அழுதான். தனது அழுகைச் சத்தம் வெளியே கேட்டுவிடக் கூடதே என்று மிகவும் முயற்சி செய்து அடக்கி அழுதான்.

அவனைத் தொடர்ந்து மெதுவாக வெளியே வந்த சந்திரா கதவின் சாவித்துவாரத்தின் ஊடே அவனைக் கவனித்துக் கொண்டிருந்தாள். அவன் நிலையைக் காண அவளுக்கே இரக்கமாக இருந்தது. அவளை அறியாமல் அவளது கண்களும் கலங்கின. நெடிய பெருமூச்சு ஒன்று அவளிடமிருந்து வெளிக்கிளம்பியது. அவனுக்காக இரங்கி அவள் இதயம் அழுதது. தொடர்ந்து அந்த இரவு முழுவதும் அவனும் தூங்கவில்லை. அவளும் தூங்கவில்லை.

முதல் பஸ்ஸுக்கு இன்னும் நேரம் இருக்கின்றது என்றாலும் அவனுல் பொறுமையாக இருக்கமுடியவில்லை. அங்கிருந்து உடனே கிளம்பிவிட வேண்டும் என்று உள்ளம் துடித்தது. எழுந்து முகத்தைக் கழுவிக்கொண்டு புறப்பட ஆயத்தமானுன். ஆனுல் புறப்படுமுன்னர் சந்திராவிடம் சொல்லிக்கொண்டு புறப்பட வேண்டுமே .. அவளிடம் எந்த முகத்தோடு பேசுவது? அவள் முகத்தில் எப்படி விழிப்பது என்று அவன் தயங்கிக் கொண்டிருக்கும் போது சந்திராவே அவன் அறைக்கு வந்தாள். அவள் கையில் கோப்பிக்கோப்பை இருந்தது.

அவள் முகத்தை நிமிர்ந்து பார்க்கவே அவனுக்குக் கூச்சமாக இருந்தது. அவள் நீட்டிய கோப்பையை அவன் பெற்றுக்கொண்டபோது கைகள் நடுங்கின. தன் மனம் சுத்தமானது என்று அவனுல் நடிக்க முடியவில்லே. தான் அவளே மனதால் இச்சித்தவன் என்பதை அவளிடம் கூறி மன்னிப்புக் கோர விரும்பினுன். அதையும் அவளிடம் எப்படிக் கூறுவது என்று தெரியாதவனுக "என்னே மன்னித்து விடு சந்திரா" அதற்குமேல் அவனுல் பேசமுடியவில்லே. பெண்பிள்ளேபோல விம்மினுன்.

தொடர்ந்து சில நிமிடங்கள் இருவருமே ஒன்றும் பேசவில்லே. அந்த மௌனத்தைச் சந்திராவே கலேத்தாள். "உங்கள்மீது எனக்கு இன்னும் நம்பிக்கையுண்டு அழகு. நீங்கள் இந்த நிலேக்கு வந்ததற்கு நான் தான் காரணம். மனதை அலட்டாமல் போய் வாருங்கள். நடந்தவைகளே மறந்து விடுங்கள்"

அவள் இப்படிக் கூறிய போது அவனுக்கு நெஞ்சில் நின்று பெரும் சுமையே இறங்கியது போலவிருந்தது. அவளிடமிருந்து விடை பெற்றுக்கொண்டு வந்து விட்டான். குழந்தை மதியைக்கூட அவன் பார்க்கவில்லே.

இப்பொழுது அவன் ஒரு தீர்மானத்திற்கு வந்திருந்தான். அது, சந்திராவைத் தனிமையில் சந்திக்கக்கூடிய சந்தர்ப்பங்களே தான் தவிர்த்துக்கொள்வது. அதற்காகத் திருகோணமலேக்குப் போவதையே குறைத்துக் கொள்வது. இந்த நோக்கத்திற்காக மார்கழியில் வரக்கூடிய பாடசாலே விடுமுறைக்குத் தானும் திருகோணமலேக்குப் போவதில்லே என்ற உறுதிக்கு வந்துவிட்டான். ஆயினும் தான் உள்ளத்தால் வழுக்கிவிட்ட செய்கையை நினேக்கையில் வேதனேயாகவே இருந்தது. இதனுல் மதியைக் கூட தான் பார்க்கமுடியாமல் இருக்கவேண்டி வருமே என்பது வேறு அவனே வாட்டியது.

இலங்கைத் தமிழரின் அரசியல் வானத்தில் விடிவு கிடைப்பதற்கான அறிகுறி எதுவும் தோன்றவில்லை. பண்டாரநாயக்காவின் மரணத்தை தொடர்ந்து பதவிக்கு வந்த திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சியிலாவது ஒரு தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்த்த தமிழர்களுக்கு ஏமாற்றமே கிட்டியது.

வடக்கு, கிழக்கில் நியாயமான தமிழ்மொழி உபயோகத் திட்டம் கூட வழங்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் எதுவுமில்லை. அது தவிர ''மொழிப்பிரச்சனையின் மீது. போதிய அளவு காலம் செலவிட்டாயிற்று, இனிமேல் நாட்டின் பொருளாதாரத்தின் மீதே கூடிய கவனம் செலுத்தப்படும்'' என்று அரசு தரப்பில் உள்ளவர்கள் வேறு மேடைகளில் முழங்கத் தொடங்கிவிட்டார்கள். எனவே உரிமைகளை வென்றெடுப்பதற்கான உடனடி நடவடிக்கைகளில் இறங்கவேண்டியதன் அவசியத்தைப்பற்றித் தமிழ்த் தலைவர்கள் தீவிரமாகச் சிந்தித்தனர்.

1960ம் ஆண்டு நவம்பர் நடுப்பகுதியில் திரு. செல்வநாயகம் தலைமையில் அரசியல் தலைவர்கள் அடங்கிய குழு ஒன்று பிரதமரைச் சந்தித்தது- பயன் கிட்டவில்லை எனவே போராட்டம் வகுக்கப்பட்டது.

1961ம் ஆண்டு ஜனவரி 30ம் நாள் வடக்குக் கிழக்கில் உள்ள அரச ஊழியர்களுக்குப் பகிரங்க அறிக்கையொன்று விடப்பட்டது. அதில், சிங்கள மொழியில் அரச கடமைகளை ஆற்ற வேண்டாம். அரசுடன் கொள்ளும் தொடர்புகளை சிங்களத்தில் மேற்கொள்ளவேண்டாம். சிங்கள முத்திரைகளைப் பொறிப்பதையோ சிங்களத்தில் ஒப்பமிடுவதையோ தவிர்க்கும்படி கோரப்பட்டது.

தலைவர்களின் இந்த வேண்டுகோள்களுக்கு எதிர்பார்த்ததைவிட அதிக வரவேற்புக் கிட்டியது. சிங்களத்தில்

மட்டுமல்ல அதுவரையில் ஆங்கிலத்தில் கடமையாற்றி வந்த ஊழியர்களும் தமிழ் மொழியில் கடமையாற்றத் தொடங்கினர். அப்படியிருந்தும் அரசு தரப்பில் மனமாற்றத்துக்கான அறிகுறிகள் தோன்றவில்லை. அதனைத் தொடர்ந்து நேரடிப் போராட்டத்துக்கான நாள் குறிக்கப்பட்டது.

அரசியல் போராட்டம் என்றால் எள் எனும் முன்னர் எண்ணெய்யாக நிற்கும் அழகுமணிக்கு இது போதாதா? பெப்ரவரி இருபதாம் நாள் ஆரம்பிக்கவிருக்கும் கச்சேரி மறியல் போராட்டத்தில் கலந்துகொள்ளத் தன்னையும் ஒரு தொண்டனாகப் பதிவு செய்து கொண்டான். பாடசாலை நேரம் போக மிகுதி நேரத்தையெல்லாம் நாடளாவிய அளவில் ஆரம்பிக்கவிருக்கும் அறப்போருக்கான ஆயத்த வேலைகளிலே தன்னை ஈடுபடுத்திக்கொண்டான். சந்திராவையும் மதியையும் மறப்பதற்கு இந்தப் போராட்ட ஏற்பாடுகள் பெரும் துணையாக இருந்தன. நடக்கவுள்ள அறப்போரில் தனக்கு உள்ள ஈடுபாடுகள், தனது பங்களிப்பின் அளவு எதையுமே அவளுக்கு அவன் தெரிவிக்கவில்லை. அவளுக்கு அறிவிப்பதின்மூலம் மென்மேலும் பிரச்சனைகள் எழலாம். 1956 ஜூன் ஐந்து போராட்டத்துக்கு முன்னர் அவளுக்கும் அவனுக்கும் ஏற்பட்டவைபோன்ற கசப்பான நிகழ்வுகளை அவன் மீண்டும் சந்திக்க விரும்பவில்லை.

பெப்ரவரி இருபதாம் நாள் யாழ்ப்பாணம் கச்சேரியின் பிரதான வாயிலிலும், பழைய பூங்கா நுழை வாயிலிலும் தலைவர்களும் தொண்டர்களும் வந்து குழுமினர். சரியாக காலை 7-30. அறப்போர் ஆரம்பமாயிற்று.

பிரதான நுழைவாயிலில் தலைவர்கள் உட்பட சுமார் ஐம்பது அறப்போராளிகள் குழுமினர். தந்தை செல்வா தனக்கே உரித்தான புன்னகையுடன் அமர்ந்திருந்தார். வெண்ணுடை அணிந்த தொண்டர்கள், தலைவர்கள் சூழ்ந்

திருந்தனர். எதையும் தாங்கும் இதயம் கொண்டவர்களாக எதையும் எதிர்நோக்க உறுதிபூண்டவர்களாகப் போராளிகள் காணப்பட்டனர். பழைய பூங்கா நுழை வாயிலில் இருந்த தொண்டர்களோடு அழகுமணி உட்கார்ந்திருந்தான். பக்திப் பாடல்களும் பஜனைக் கீதங்களும் முழங்கத் தொடங்கின.

கச்சேரி ஊழியர்கள் எவரையும் வேலைகளுக்குச் செல்ல அனுமதியாது தடுப்பது, அதன் மூலம் கச்சேரி நிர்வாகத்தை செயல்படவிடாமல் செய்வது, அரச நிர்வாக இயந்திரத்தை இயங்கவிடாமல் செய்வதன் மூலம் தமிழ்ப்பகுதிகளில் தமிழ்மொழியை நிர்வாக மொழியாகப்பயன்படுத்த அரசைச் சம்மதிக்கச் செய்வது இதுவே அறப்போராளிகளின் முழு நோக்கமாக இருந்தது.

கச்சேரியில் கடமையாற்ற வந்த அரச ஊழியர்கள் அனைவரும் அறப்போராளிகளை மீறி கச்சேரியுள் நுழைய முடியாதவர்களாக வெளியே நின்றனர். இதன் விளைவு என்னவாக முடியப்போகிறது என்பதை அறியும் ஆவலுடன் பெருந்தொகையான மக்களும் பார்வையாளராகக் குழுமியிருந்தனர்.

சரியாக 8-45

பயங்கர வேகத்துடன் பொலிசாரைத் தாங்கிய ஜீப் வண்டி ஒன்று வந்து நின்றது. குண்டாந்தடி, தலைக்கவசம் கேடயம் தாங்கியவர்களாகப் பொலிசார் வண்டியிலிருந்து குதித்தனர்.

மேலும் ஐந்து நிமிடங்கள் கழிந்தன. பொலிஸ் அதிபர் ஜீப் வண்டியில் வந்தார். காவல்துறையினர் தம் கடமைகளைச் செய்வதற்கு எதுவிதத்திலும் அறப்போராளிகள் தடையாக இருக்கக்கூடாது என்று ஏற்கனவே கூறப்பட்டிருந்ததால் பொலிஸ் அதிபர் ஜீப் வண்டியில் உள்ளே செல்வதற்குப் போராளிகள் விலகி இடம் கொடுத்தனர்.

உள்ளே சென்ற பொலிஸ் அதிபர் ஜீப் வண்டியை விட்டிறங்கி வாயிலில் இருந்த சத்தியாக்கிரகிகளை நோக்கி வந்தார். சத்தியாக்கிரகிகளின் மறுபக்கம் பொலிசார் அணிவகுத்து நின்றனர்.

கச்சேரி ஊழியர்களை உள்ளேவர விலகி வழி விடும்படி அறப்போராளிகளுக்குக் கட்டளையிட்டார் பொலிஸ் அதிபர். எவருமே அவரது வார்த்தைகளுக்குச் செவிமடுத்ததாகத் தெரியவில்லை.

முன்புறம் நின்ற பொலிஸ் வீரர்களைச் சத்தியாக்கிரகிகளுக்கு ஊடாக இரண்டு வரிசையில் நிற்கும்படி உத்தரவிட்டார். அவர் கட்டளையின்படி பொலிசார் அப்படியே நின்றனர். அவர்களுக்கு ஊடாக வெளியே நின்ற ஊழியர்களில் ஒருவர் இருவர் உள்ளே சென்றனர். மேலும் ஊழியர்களை உள்ளே விடாது தடுக்கத் தீர்மானித்த தொண்டர்கள் வாசலுக்குக் குறுக்கே நீட்டி நிமிர்ந்து படுத்தனர்.

பொலிஸ் அதிபர் ஆர்ன்ட் பொறுமையிழந்தார். சத்தியாக்கிரகிகளை இழுத்து எறியும்படி பொலிசாருக்கு உத்தரவிட்டார். பொலிஸ் வீரர்கள் செயல்பட்டனர்.

காலிலே பிடித்துத் தரதர வென்று சிலரை இழுத்தெறிந்தனர். வேறுசிலரைக் கால்களிலும் கைகளிலும் பிடித்துத் தூக்கிச்சென்று வீதியிலே கற்களின் மீது தூக்கி எறிந்தனர். இன்னும் சிலரை தூக்கிச் சென்று மதிற்சுவருக்கு எதிராக வீசி எறிந்து அடித்தனர். போராளிகளின் உடலெங்கும் உராய்வுகள், காயங்கள், வீக்கங்கள்.

போராளிகளில், சிலாபத்தில் இருந்து வந்து கலந்து கொண்ட பிரான்சிஸ் பெரேரா என்பவர் மிகவும் துணிவாகப் பேராடினர். பொலிசார் போராளிகளை இழுத்தெறிந்த

போதிலும் மீண்டும் அவர்கள் எழுந்தோடிவந்து வாசலுக்குக் குறுக்கே கிடந்தனர். பிரான்சிஸ் பெரேரா ஐம்பது தடவைகளுக்கு மேலாகத் தூக்கிச் சென்று எறியப்பட்டார். அப்படியிருந்தும் அவர் தளராது மீண்டும் மீண்டும் தைரியமாகப் போராடினுர்.

போராளிகளுக்கு நடைபெறும் இம்சைகளைக் கண்டு சகிக்காதவர்களாகப் பார்வையாளர்களான பொதுமக்கள் உணர்ச்சிவசப்பட்டனர். தாமாகவே முன்வந்து பார்வையாளர்களில் பலர் வாசலுக்குக் குறுக்கே கிடந்து போராட்டத்தில் கலந்து கொண்டனர். இப்பொழுது இருநூறுக்கு அதிகமான போராளிகள் வாசலில் நிறைந்திருந்தனர். எதிர்பாராத இந்த பொதுமக்கள் பங்குபற்றிய நிகழ்ச்சி பொலிசாரை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

பதிவு செய்யப்படாதவர்களைப் போராட்டத்தில் கலந்து கொள்ளவேண்டாம் என்று தலைவர்கள் கேட்டுக்கொள்ள வேண்டியிருந்தது.

கச்சேரி வாசலில் நடைபெற்ற காட்சிகளைத் தொலைவில், பழைய பூங்கா நுழைவாயிலில் இருந்து அவதானித்துக்கொண்டிருந்த அழகுமணி தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாதவனுகத் துடித்துக் கொண்டிருந்தான். தானும் எழுந்தோடிச்சென்று கிடக்கவேண்டும் என்று தவித்தான். ஆனுல் அவன் இருக்கவேண்டிய இடம் பழைய பூங்காவீதி நுழைவாயில் என்பது தலைவர்களின் கட்டளையாதலால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு அங்கே உட்கார்ந்து கொண்டிருந்தான். ஆனுல் அங்கு நடப்பதைவிட பயங்கரமான அனுபவங்களை அழகுமணி பெறப்போகின்றுன் என்பதை அப்பொழுது அவன் உணரவில்லை.

அழகுமணி அன்று அதிகாலை அவளிடம் விடைபெற்றுக்கொண்டு சென்றபின்னர் சந்திராவால் அமைதியாக

இருக்கமுடியவில்லை. அவன் அவளிடம் மன்னிப்புக் கேட்ட பொழுது அவனது மனஅமைதிக்காக ஏதோ கூறிவைத்தாளே ஒழிய அவள் சமாதானமடைந்து விடவில்லை. இன்னும் எத்தனை நாட்களுக்குக் கொடுத்த வாக்கை அவனால் காப்பாற்றமுடியும் என்பதில் சந்தேகமாகவே இருந்தது. ஆனால் இருவரும் ஒருவர் மற்றவரது வாழ்க்கையுடன் விளையாடிக் கொண்டிருப்பதாகவே தோன்றியது.

இப்பொழுதெல்லாம் அழகுமணியிடமிருந்து அடிக்கடி கடிதம் வருவதில்லை. சம்பளம் எடுத்தவுடன் அவர்கள் செலவுக்குப் பணம் அனுப்பிவைக்கும் பொழுது எழுதும் சில வார்த்தைகளோடு சரி. அவளிடமிருந்து அவன் பதில் எதிர்பார்ப்பதாகவும் தெரியவில்லை. இதற்கெல்லாம் காரணம் அவனுக்குள் ஏற்பட்டிருந்த குற்ற உணர்வுகள் தான் என்பதை அவள் அறிவாள்.

ஆனால் அன்றைய தினசரி ஒன்றில் பிரசுரமாகியிருந்த அழகுமணியின் கவிதை ஒன்றின் சில வரிகள் அவனது உள்ளக்கிடக்கையைத் தெளிவாக்கின. அந்த வரிகள்:

உச்சி வானத்தில்
ஒளிர்கின்ற வெண்நிலவே
உன்னைப் பார்ப்பதற்கோ
உரிமை எனக்கில்லை
இச்சித் துணைப்பார்த்தே
இதயத்தா லிழித்தேன்
இல்லா உறவதற்கு
ஏங்கி ஏன் தவித்தேன்
பச்சைக் கிளிமொழியே
பழைய உறவெண்ணி
பாதை தவறிய என்
பண்பில் செயல்கண்டேன்
கொச்சைக் குணம்கொண்டே
கொள்கை பிறழ்ந்திட்டேன்
கோபம் கொள்வாயோ
சாபம் சொல்வாயோ

நாவண்ணன்

அவளை எண்ணி அவளுக்காகவே எழுதப்பட்டவை அக் கவிதை வரிகள் என்பது அவளுக்கு மட்டுமே புரிந்த உண்மை. அவனுக்காக இரங்கினாள்.

அரசியல் போராட்டம் ஆரம்பமாக உள்ள இந்நாட்களில் அழகுமணியால்அமைதியாக இருக்கமுடியாது என்பது அவள் அறிந்த விடயம். ஆயினும் அவன் என்ன செய்கின்றான் என்ற செய்திகளை அவளால் அறிந்துகொள்ளமுடியாமல் இருந்தது அவளுக்குச் சங்கடமாக இருந்தது. அவனோடு உள்ள தொடர்புகளைக் குறைத்துக் கொண்டதன் விளைவு இது. எவருடைய கட்டுப்பாடும் இல்லாது இருக்கும் அவன் என்ன செய்கிறானோ என எண்ணிக் கலங்கினாள்.

யாழ்ப்பாணம் கச்சேரி மறியல் போராட்டம் தொடங்கிய மறுநாள் வெளியான தினசரிகளைப் படித்த அவளுக்கு 'திக்' என்று இருந்தது. அதிலும் ஒரு பத்திரிகை, கவிஞர் அழகுவுக்கு முக்கியத்துவம் கொடுத்துச் செய்திவெளியிட்டிருந்தது. அழகு உயிராபத்தான நிலையில் இருக்கின்றான். இந்தச் செய்தியை அவளால் ஜீரணிக்கமுடியவில்லை.

# பயணம் தொடர்கின்றது

## அத்தியாயம் 20

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்றுபவர்

— குறள் 620

பெப்ருவரி இருபதாம் நாள் யாழ் அரசாங்க அதிபர் பதினொருமணிக்கு யாழ்ப்பாணம் அசைஸ் நீதிமன்றத்துக்கு சமூகமளிக்க இருந்தார். கச்சேரி, பழைய பூங்கா வாசல் களில் மறியல் போராட்டம் நடக்கின்ற காரணத்தால் அன்றைய தினம் அவர் நீதிமன்றத்துக்குச் செல்லமாட்டார். அவருக்குப் பதிலாக இன்னுமொரு உத்தியோகத்தர் அவ ரது பிரதிநிதியாகக் கச்சேரிக்கு வெளியே அவருடைய வீட் டில் இருந்து சென்று நீதிமன்றத்துக்கு சமூகம் கொடுப்பார் எனும் ஒரு வதந்தி ஏற்கனவே பரப்பி விடப்பட்டிருந்தது. ஆனல் இச்செய்தி சத்தியாக்கிரகிகளை திசைதிருப்பி விடு வதற்காகப் பரப்பிவிடப்பட்ட பொய் வதந்தி என்று போரா ளிகள் உறுதியாக நம்பினர். அதன் பயனாகவே, அரசாங்க அதிபரின் வாசஸ்தலத்துக்குச் செல்லும் வாயிலாகிய பழைய பூங்கா நுழைவாயிலிலும் போராளிகள் இருந்தனர். அவர்கள் எதிர் பார்த்திருந்தது வீண் போகவில்லை.

சரியாகக் காலை பத்து மணிக்கு யாழ். அரசாங்க அதிபர் சிறீகாந்தா பொலிஸ் ஜீப்வண்டியில் புறப்பட்டு வந்தார். அவ ரோடுகூட வண்டியில் பொலிஸ் அதிபரும் காணப்பட்டார்.

ஜீப்வண்டிவருவதைக் கண்ட போராளிகள் வாசலுக்குக் குறுக்கே நீட்டி நிமிர்ந்து குப்புறக்கிடந்தனர். ஜீப்வண்டி அவர்களை நோக்கி விரைந்து வந்து கொண்டிருந்தது. அவர்கள் அசையவில்லை.

மிகவும் அண்மித்து வந்தது.

எவரும் அசையவில்லை.

முன்வரிசையில் அழகுமணியும் பழனியப்பு எனப்படும் இளைஞரும் கிடந்தனர். வண்டி அவர்களை நெருங்கியது. அவர்களோ அசையாது கிடந்தனர். வண்டியின் முற்பகுதி அவர்கள் மேலே வர, அதன் சக்கரம் அவர்களை முட்டிக் கொண்டு நின்றது.

எதுவித அச்சமும் இன்றி அவர்கள் இருவரும் கிடந்த னர். அவர்களது கழுத்துக்களைச் சக்கரங்கள் முட்டியபடி நிற்க ஜீப்வண்டி நிறுத்தப்பட்டது. பொலிஸ் அதிபர் ஜீப் பில் நின்று குதித்தார். போராளிகளின் உறுதியையும், அஞ் சாமையும் கண்டு அவர் பொறுமை இழந்தார்.

'அவர்களை அடித்து விரட்டுங்கள்' என்று ஆணையிட் டார். போராளிகளின் உறுதியைக் கண்டு நிலைகுலைந்து நின்ற பொலிஸ் வீரர்களால் அவரது ஆணையை உடன் நிறைவேற்றந் துணிவு ஏற்படவில்லை. அவர்கள் சற்றுத் தயங்கி நின்றனர்.

மறுபடியும் பொலிஸ் அதிபரிடம் இருந்து ஆணை பிறந் தது. பொலிசார் தன்னுணர்வு பெற்றனர். தமது குண் டாந்தடிகளைச் சுழற்றிக் கொண்டு அந்த அஹிம்சைப் போராளிகள் மீது வெறித்தனமாகப் பாய்ந்தனர்.

குண்டாந்தடிகளும் பூட்ஸ்கால்களும் அறப் போரா ளிகளைச் சாடின. 'மடார். படார், என்ற ஒலிகளும் சத் தியாக்கிரகிகளின் அவலக்குரல்களும் அந்தச் சுற்றுடலையே அதிரவைத்தன.

இந்தக் கோரக்காட்சிகளைக் கச்சேரி வாசலில் இருந்து கண்ட தலைவர்கள் ஓடிவந்து இந்தப் போராளிகளுடன் கலந்து கொட்டனர். அவர்களில் முக்கியமானவர் டாக் டர் நாகநாதன்.

பொலிஸ் வீரன் ஒருவன் டாக்டரை குண்டாந்தடியால் அடித்தான். அவரை மோதிய குண்டாந்தடி இரண்டாகத்

தெறித்தது. ஒடிந்து விழுந்த குண்டாந்தடியின் ஒரு பகுதியை டாக்டர் தனது கையில் எடுத்துக் கொண்டார். அவரைத் தாக்கிய பொலிஸ் வீரன் ஒரு கணம் அதிர்ந்தான். அவனிடம் அச்சமும் குடிபுகுந்தது. ஆனால் குண்டாந்தடியை கையில் எடுத்த டாக்டர் அவனை ஏளனமாகப் பார்த்தார். அவர் செய்து கொண்டிருப்பது மறப்போர் அல்ல, அறப் போர் என்பதில் உறுதியாக இருந்த டாக்டர் பொறுமை யாக நின்றார்.

ஜீப்புக்கு அடியில் சக்கரத்தோடு முட்டியபடி கிடந்த பழனியப்புவும் அழகுமணியும் மிருகத்தனமாகத் தாக்கப் பட்டனர்.

பொலிஸ் வீரன் ஒருவன் அவனை நோக்கிக் குண்டாந் தடியை ஓங்கியபோது தலையைப் பாதுகாத்துக் கொள்ளக் கைகளை உயர்த்தினன். ஓங்கப்பட்ட தடி அவனது இடது கையை வந்து மோதியது. காலிமுகத்திடல் போராட்டத் தில் ஒடிந்த அதேகரம் 'சடக்' கென்ற ஒலியுடன் ஒடிந்தது. ''ஐயோ'' என்று அலறியவாறு இடது கையை வலதுகை யால் அவன் பிடித்துக் கொண்ட போது அடுத்து ஓங்கப் பட்ட குண்டாந்தடி தலையைப் பிளந்தது... பயங்கர அல றலுடன் தரையில் விழுந்து உருண்டான். அப்பொழுதும் அந்தப் பொலிஸ் வீரனின் வேகமும் ஆத்திரமும் அடங்கி யதாக இல்லை. அவனோடு கூட வேறு இரண்டு பொலிஸ் காரரும் சேர்ந்து கொண்டனர்.

தரையிலே உருண்ட அவனது அடிவயிற்றில் பூட்ஸ் காலின் ஓங்கிய உதை விழுந்தது. மறு உதை விலாவிலே. விலாஎலும்புகளில் ஒன்று உடைந்து விட்டது போன்ற வேதனை. மளமளவென்று தொடர்ந்தும் பல உதைகளும் அடிகளும், அவனுக்கு நினைவு தப்பிவிட்டது. பிறகு என்ன நடந்தது என்றே அவனுக்குத் தெரியாது. பிணம்போல கிடந்தான்.

பொலிசார் அறப்போராளிகளுக்குச் செய்யும் இந்தக் கொடுமைகளைப் பார்வையாளர்களாக நின்று கவனித்துக் கொண்டிருந்த பொதுமக்கள் பொறுமையிழந்தனர். பொலிசாரை நோக்கிக் கல்மாரி பொழியத் தொடங்கினர். நிராயுதபாணிகளாக நின்ற அறப்போராளிகளை செயலிழக்கும் அளவுக்குத் தாக்கிய பொலிசார் அவர்களை இழுத்தெறிய அவர்கள் சிந்திய இரத்த வெள்ளத்தை மிதித்துக் கொண்டு அரசாங்க அதிபர் அமர்ந்திருந்த ஜீப்வண்டி புறப்பட்டது.

ஜீப்வண்டியை நோக்கிக் கற்கள் பறந்தன. ஜீப்பின் கண்ணாடி ஜன்னல்கள் நொருங்கி வீழ்ந்தன. பொது மக்களின் தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாத பொலிசாரும் பொதுமக்களை நோக்கிக் கற்களை வீசினர். சந்தர்ப்பத்திற்கு பயன்படும் என்று எண்ணியே பொலிசாரும் சாக்குகளில் கற்களைக் கொண்டு வந்திருந்தனர்.

சத்தியாக்கிரக ஆரம்பத்தில் பழைய பூங்கா நுழைவாயிலில் சுமார் இருபத்தைந்து பேர் மட்டுமே இருந்தனர். ஆனால் இப்பொழுது ஐநூறுக்கு அதிகமானோர் இருந்தனர். பொதுமக்கள் கொண்ட உணர்ச்சி பூர்வமான வேகம் பொலிசார் இழைத்த கொடுமைகளின் மத்தியிலும் எவரினதும் தூண்டுதல் இல்லாமலே அவர்களையும் பங்காளிகளாகச் செய்திருந்தது. அலுவலக நேரம் முடியும் வரை யாரும் அசையவில்லை. படுகாயமுற்றோர் வைத்திய சாலைக்குக் கொண்டு சென்று அனுமதிக்கப்பட்டனர். அப்படி அனுமதிக்கப்பட்டோரில் அழகுமணியும் ஒருவன்.

சோதனை மேல் சோதனை, வேதனை மேல் வேதனை, இழப்புக்கு மேல் இழப்பு.

சந்திராவுக்குப் புத்திதெரிந்த காலம் முதல் இழப்புகள் தான். பெற்றவர்கள், வளர்த்தவர்கள், கட்டிய கணவன்

என்று அனைத்தையும் இழந்துவிட்ட அவள் ஒட்டாத உற வென்றாலும் உறுதுணை என்று நம்பியிருந்த அழகுமணியை யும் இழக்கப் போகின்றாளா? அப்படி எண்ணிப் பார்க்கவே அவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது. அவனையும் அவள் இழந்துவிட்டால் அவளுக்கும் குழந்தைக்கும் உலகத்தில் உறவு என்று சொல்வதற்கு எவருமே கிடையாது.

சந்திராவுக்கு உள்ள ஒரே கவலை தன்னை விடக் குழந்தை மதியைப் பற்றியதுதான். கமலநாதனுடைய கடைசி ஆசை நிறைவேறாமல் போய் விடுமோ என்று கலங்கினாள். தனக்குப் பின்னர் தன் குழந்தைக்குத் தந்தையாக அழகு மணியைத்தான் கமலநாதன் நியமித்து விட்டுச் சென்றுள் ளான். மதி அவனது வளர்ப்புத் தந்தையையும் இழந்து விடப் போகின்றானா? 'அப்பா அப்பா' வென்று வாய் நிறைய மனம் நிறைய அழகுமணியை அழைத்துக் கொண்டி ருக்கும் மதி அழகுமணியின் உயிருக்கு ஏதாவது நடந்து விட்டால் இனியாரை அழைக்கப் போகின்றான்?

கூடவே அவளுள் அந்த கேள்வியும் எழுந்தது. ''இத் தனைக்கும் யார் காரணம்?... அழகுமணியின் இந்த அவல நிலைக்கு அவள்தான் காரணமா? இதுவரையில் அவளுள் எழுந்திராத கேள்வி இப்பொழுது எழுந்து இதயத்தைக் குடைந்தது?

அழகுமணி இன்று சாகப் போகின்றான் என்பதை விட, அவன் என்றோ இறந்து விட்டான். அவனைச் சந்திரா என்றோ சாகடித்து விட்டாள். அவள் தன் சுயநலத்தை மட்டுமே நோக்காகக் கொண்டு அவனை விட்டுப்பிரியாமல் இருந்தி ருந்தால் இந்த அளவுக்கு நிலைமை மோசமாகாது தடுத் திருக்கலாமோ என்னவோ.

எப்படியும் அழகு பிழைத்து விட வேண்டும் என்று தெய்வங்களையெல்லாம் வேண்டிக் கொண்டாள். என்

பிள்ளைக்குத் தந்தை இல்லாக் குறையை போக்கிவந்த அழகுவை பறித்துவிடாதே ஆண்டவனே! என்கணவனின் கடைசி ஆசையை நான் நிறைவேற்றி வைக்க முடியாமல் செய்து விடாதேயப்பா' என்று இதயத்தில் அழுதாள்.

குழந்தை மதியோடு அவள் வைத்தியசாலைக்குள் அழகு படுத்திருந்த பிரத்தியேக அறையில் கட்டிலை நெருங்கியபோது, அவனை அவளால் அடையாளம் கண்டு கொள்ளவே முடியாத அளவு உடலெல்லாம் கட்டுப் போடப்பட்டிருந்தது.

அழகு அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். குழந்தை அவனை இனம் கண்டு 'அப்பா அப்பா' என்று அழைத் தான். அழகுவின் கோரநிலைமையைக் கண்டு சந்திராவுக்கு வாய் விட்டு அழவேண்டும் போல் இருந்தது. குரலை அடக்கி அழுதாள்.

ஐம்பத்தியெட்டு இனக்கலவரத்தின் போதுகமலநாதனை கடைசியாகக் கண்டகோலத்தில் அழகுமணி கிடந்தான். கமலநாதனைப்போன்று அழகுமணியும் இறக்க வேண்டுமா 'ஆண்டவா! இவரையாவது காப்பாற்றும் சக்தியை எனக் குத் தரமாட்டாயா' என்று புலம்பினாள்.

குழந்தை 'அப்பா அப்பா' என்று தொடர்ந்து அழைத் துக்கொண்டிருந்தான். அழகுவின் கண்கள் மெல்லத் திறந்தன. அவன் இருந்த வேதனையான நிலையிலும் குழந்தையைக் கண்டதும் அவன் முகத்தில் மகிழ்ச்சியின் நிழல் படிந்தது. சந்திராவின் கண்களை நேருக்கு நேர் சந் தித்தபோது அவன் கண்கள் கலங்கின. அவனே கேட்டான் ''ஏன் அழுகிறாய்? கமலநாதனுக்கு நேர்ந்த அதே கதிதான் எனக்கும்'

''இல்லை அழகு அப்படிச் சொல்லாதீர்கள். உங்களுக்கு ஒன்றும் நேர்ந்துவிடக்கூடாது. என்னையும் குழந்தையையும் அநாதைகளாக்கி விடாதீர்கள்''

● நாவண்ணன்

அவன் உதடுகளில் இளநகை அரும்பியது. எனது இழப்பு உன்னை அனாதை ஆக்காது சந்திரா. நான் உனக்கு யார்? உனக்கும் எனக்கும் என்ன உறவு? நான் இறந்தால் தான் நீ நிம்மதியாக வாழலாம். என்றால உனக்குக் களங்கம் ஏற்படும் என்ற பயம் இல்லாமல் வாழலாம்.

''அழகு என்னை வார்த்தைகளால் கொல்லாதீர்கள்... நீங்கள் சாகக்கூடாது, உங்களை நான் சாகவிடமாட்டேன்'

இந்த வார்த்தைகளை அவள் சொல்லி முடிக்கு முன்னர், அவன் கட்டிலை நோக்கி வந்து கொண்டிருந்த சிறு கும்பல் மீது அவன் பார்வை பதிந்தது. அந்தக்கூட்டத்தின் மத்தியில் வந்து கொண்டிருந்த அந்த உருவத்தைக் கண்டதும் அவன் உடல் எங்கும் உஷ்ணம் பரவி புத்துணர்வு தோன்றியது.

'ஈழத்துக் காந்தி' தந்தை செல்வநாயகம் தான் தன் சகாக்களுடன் வந்து கொண்டிருந்தார். அறப்போரில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த தொண்டர்களைப் பார்வையிட வந்தவர் அவனையும் பார்க்க வந்து கொண்டிருந்தார்.

குழந்தை மதி எவரையுமே கவனிக்காதவனாக 'அம்மா அப்பாவுக்கு யார் அடிச்சது? ''என்று தன் மழலை மொழியில் கேட்டுக் கொண்டிருந்தான். அங்கு வந்த தந்தை அவர்கள் மூவரையும் தனது காந்தப் புன்னகை சிந்தியபடி பார்த்தார். மதி சொல்லிக் கொண்டிருந்த மழலைமொழிகளைக் கேட்டு அவர்கள் மூவரையும் அம்மா, அப்பா, பிள்ளை என்றே அவர் எண்ணி விட்டார்.

அவர் எதுவும் பேசவில்லை. அழகுமணியைப் பெருமையோடு பார்த்தார். விழுப்புண் தாங்கிய தன் மகனைப்பார்க்கும் தந்தையின் பெருமிதம் அவர் முகத்தில் மிளிர்ந்தது.

அழகுமணி மிகவும் உணர்ச்சிவசப் பட்டிருந்தான். ''ஐயா! நான் சத்தியமாய்ச் சொல்லுகிறேன் இனிமேல் நாங்கள் இணைந்துவாழ முடியாது. அறப்போராலும் சாத்வீகத்தாலும் எங்கட உரிமைகளை நாங்கள் பெறமுடியாது'' என்று சொல்லிக்கொண்டிருந்தவனைக் கைகளைக் காட்டி அமைதியாக இருக்கும் படி சொன்னார். ''கடவுள் தான் எங்களைக் காப்பாற்ற வேண்டும்'' என்று மட்டும் கூறினார்.

சிறிது நேரத்தில் விடை பெறுவதற்காகத் திரும்பிய தந்தை செல்வா அவர்கள் சந்திராவின் அருகில் வந்து ''உம்முடைய கணவனுக்கு ஒன்றும் நடக்காது, பயப்பட வேண்டாம்'' என்று கூறி மெல்ல நடந்து சென்றார்.

அவர் கூறிய அந்த வார்த்தைகள் அவளை என்னவோ செய்தன. அவளை மட்டுமல்ல அவனுக்கும் அதிர்ச்சியாக இருந்தது. இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அந்த இரண்டு சோடிக் கண்களும் கலங்கின.

சந்திராவின் இதயத்தில் பெரும்புயலடித்து ஓய்ந்தது. அவள் முகத்தில் ஒரு தெளிவு உறுதி. மதியைத் தன்கைகளில் நின்று இறக்கிக் கட்டிலில் அழகுமணியின் காலடியில் வைத்தாள் ''உங்கள் பிள்ளையை ஏற்றுக் கொள்ளுங்கள்.''

''சாகப்போகின்ற நான் எப்படிச் சந்திரா... உன் குழந்தையை பொறுப்பெடுக்க முடியும்.''

குபீர் என்று பொங்கிவந்த அழுகையுடன் அழகுமணியின் கால்களில் விழுந்த சந்திரா அவன் கால்களைப் பிடித்துக் கொண்டாள் ''உங்களுக்கு ஒன்றும் நடக்காது... எங்களை அனாதைகளாக்கி விட்டு உங்களால் போகமுடியாது... என்னை மன்னித்து விடுங்கள். அவருடைய கடைசி ஆசையையும்...அம்மாவுடைய கடைசி ஆசையையும்... உங்களுடைய எல்லா ஆசைகளையும் நிறைவேற்றுங்கள். இனிமேல்

உங்கள் வாழ்வு தான் எங்கள் வாழ்வு... உங்கள் இலட்சியம் தான் எங்கள் இலட்சியம். உங்கள் பாதை தான் எங்கள் பாதை...''

அவள் தன்னுடைய வாழ்வையே அவன் காலடியில் ஒப்படைத்து அழுது கொண்டிருந்தாள்... அவளது இந்த மனமாற்றத்தைக் கண்டு அழகுமணி மட்டுமல்ல.. கமல நாதன் பவளத்தின் ஆன்மாக்கள் கூட அவர்களை ஆசிர் வதித்து சாந்தி கொண்டிருக்கும்.

மதி மீண்டும் பிடிவாதமாகக் கேட்டான் ''அப்பா உங்களுக்கு யார் அடிச்சது''?

அவனைச் சமாளிக்க விரும்பியவனாக ''எங்கடை கோபக்காரங்கள்'' என்றான் அவன்.

''அப்பாவுக்கு அடிச்சவங்களுக்கு நான் பெரியவனாய் வந்த பிறகு அடிப்பன்'' என்றான் மதி.

அன்று தாய் வயிற்றுக் குழந்தைகளாய் மதி போன்று சிறுவர்களாய் இருந்த சந்ததி... கால ஓட்டத்தில் தமது மூத்தவர்கள் தொடர்ந்த அஹிம்சைப் பயணத்தை தொடர மாட்டார்கள் என்பதற்கு குழந்தை மதியின் அந்த வசனங்கள் கட்டியம் கூறின... அன்று மூத்தவர்கள் தொடர்ந்து வந்த பயணத்தின் தொடர்ச்சி... இன்றும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது....

கால் நடை, கட்டை வண்டி, மோட்டார் வண்டி, புகையிரதம், கப்பல், விமானம், ரொக்கட் என்று மனிதனின் பயணங்கள் பரிணாம வளர்ச்சியில் மாறுண்டு தொடர்ந்து கொண்டிருப்பது போன்று இந்த இனத்தின் பயணமும் தொடர்கின்றது.

11500
3150
14350

12600
4860
7740

214
205
2312
85
2816

6316
159
6157

26157
2816
28973

3540
85
2717
1336
1635
9313

22090
9313
31403
28973
2430





2







'நாவண்ணன்' என்ற புனைபெயரைப் போர்த்திக் கொண்டிருக்கும் திரு. எம். சூசைநாயகம் அவர்கள் ஆற்றல் மிக்க ஓர் இளம் எழுத்தாளர்.

மன்னார் மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

சுதந்திரன், சுடர், புதிய உலகம் ஆகிய பத்திரிகைகளில் ஆசிரியத்துறையில் பணியாற்றியதுடன் தமிழகம் சென்று நாடகம், ஓவியம் போன்றவற்றில் பயிற்சியும் பெற்றுள்ளார்.

பல வானொலி நிகழ்ச்சிப் பிரதிகளை எழுதித் தயாரித்தவர்.

கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், ஓவியம் என்று பல்வேறு துறைகளில் கால்பதித்த இவர் கிறீத்தவ இலக்கிய வளர்ச்சியில் ஆர்வம் கொண்டவர்.

ஒரு சிறுகதைத் தொகுதி உட்பட இவருடைய ஆறு நூல்கள் இதுவரை வெளிவந்துள்ளன.

'பயணம் தொடர்கின்றது' இவரது ஏழாவது நூல். முதலாவது நாவல்.

ஈழத்துத் தமிழ் மக்களின் ஒரு காலகட்டத்து அரசியல் போராட்டத்தைப் பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்டுள்ள இந் நாவல் ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியத் துறைக்கு மேலும் பொலிவும் புதுமையும் சேர்த்துள்ளது.

இன்றைய தலைமுறைக்கு மட்டுமல்ல. எதிர்காலத் தலைமுறைகளுக்கும் பயன்படுவதற்காகப் படித்துப் பாதுகாத்து வைக்க வேண்டிய ஓர் அ[illegible]யான வரலாற்றுப் படைப்பைத் தந்த நாவண்ணன் பாராட்டுக்குரியவரே.

எம். வி.